மிஷன் தெரு

தஞ்சை ப்ரகாஷ்

மிஷன் தெரு

தஞ்சை ப்ரகாஷ்

வாசகசாலை..!

மிஷன் தெரு

MISSION THERU

Second Edition : Dec 2016

Author : **Thanjai Prakash**
© Mangayarkarasi Thanjai Prakash

Published by:

VASAGA SALAI

No.80, Saminathan Illam, 1st Main Road,
Sri Sathya Sai Nagar, Rajakilpakkam,
Tambaram East, Chennai - 600 073.

Mail : vasagasalai@gmail.com
Contact : (+91) 994 26 33833
Wrapper Art : **Karthikeyan Maddy**

Designs : **ஜீவா படைப்பகம்**
Contact : (+91) 999 42 20250
jeevapataippagam@gmail.com

வாசகசாலை..!

முதல் முதலாக ஒரு பதிப்பகம் தொடங்கி ஒரு புத்தகத்தை வெளியிடும் எவராயினும் தனது முதல் பிரதிக்கான பதிப்புரையில் எதை முதன்மைப்படுத்தி சொல்லிவிட முடியும்.. நன்றியைத்தவிர?

அதிலும், தனிநபர் செயல்பாடாக இல்லாமல் பல நல்லுள்ளங்களின் கூட்டு முயற்சியில் செய்த முதல் பணி என்றால் நினைவு கூறலிலும் நன்றி செய்வதிலும் தானே அந்த பதிப்புரை நிறைந்திருக்கும்.

எவரெல்லாம் இந்த முதல் பணிக்கான தங்களின் அளப்பரிய பங்களிப்பை தந்தார்கள் என்பதை அறிந்துக்கொள்ளும் முன்பு, எண்ணற்ற படைப்புகளுக்கு மத்தியில் பல வருடங்களுக்கு முன்னர் வெளியான தஞ்சை பிரகாஷ் எழுதிய 'மிஷன் தெரு' நாவலை வாசகசாலை இலக்கிய அமைப்பு தங்களது முதல் வெளியீடாக (மறு பதிப்பு) எதனால் வெளியிட விரும்பியது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

பெரிய அளவில் கண்டுக்கொள்ளப்படாத அல்லது கவனிக்க மறந்த, இலக்கிய வெளியில் கருத்தியல் ரீதியாக மாறுபடுகிறோம் என்ற பெயரில், வாசகர்களிடம் சென்று சேராமல் இருக்கின்ற நல்ல படைப்புகளை இனம் கண்டு அவற்றை வாசகர்களிடம் சேர்ப்பதே

தனது தலையாய கடமையாக இருக்க வேண்டும் என்று வாசகசாலை எண்ணுகிறது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் வாசகசாலையின் இதுவரையிலான அத்தனை செயல்பாடுகளும் இருந்து வந்திருக்கிறது என்பதை வாசகசாலையோடு சேர்ந்து பயனிக்கும் அத்தனை வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் நன்கு அறிவார்கள்.

வாசகசாலையின் இரண்டாம் நிகழ்வாகவும், “க்ளாஸிக் சீரிஸ்” வரிசை நிகழ்வுகளில் முதலாவதாகவும், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ‘தஞ்சை பிரகாஷ் படைப்புலகம்’ என்ற நிகழ்வை நடத்தினோம் என்பது ஒரு மறுக்கமுடியாத சான்று.

படைப்புகளின் வழி தான் வாழும் நிலம் மற்றும் காலங்களின் சமகால நிகழ்வுகளையும், கடந்த காலத்தின் எண்ணிலடங்கா நினைவுகளின் நீட்சிகளையும் நாம் நினைக்கும் பொழுதெல்லாம் நம் மனக்கண்முன்னே தத்துவார்த்த தரிசனமாகக் கொண்டு நிறுத்தவதில் படைப்பாளிகளுக்கு பெரும்பங்கு உண்டு. ஒரு சாதாரண வாசகனால் வாழ்ந்து பெறமுடியாத அனுபவங்களை, மனித வாழ்வின் பன்முகத்தன்மைகொண்ட வெவ்வேறு வாழ்வின் அத்தனை அம்சங்களையும் தன்னுடைய படைப்புகளின் வழி தரிசிக்கச் செய்கிறவர்களே தலைசிறந்த படைப்பாளிகள். வாசகனாக மனதளவில் ஒரு எழுத்தாளரிடமிருந்து பெறவிரும்புவது இவற்றை மட்டுமே. அதில் எந்தவிதத்திலும் குறையில்லாமல் கொடை வள்ளலாக தன் படைப்பினூடாக வெளிப்படுபவர் தஞ்சை ப்ரகாஷ் அவர்கள்.

அவர் எழுதிய அத்தனை படைப்புகளும் இன்றைக்கு ஓரளவு பதிப்பிலிருந்தாலும், அவர் வாழ்ந்த காலங்களிலும், அவரது மறைவுக்கு பின்னும் பல வருடங்கள் அவை பேசப்படாமலே இருந்தது ஒரு வரலாற்று சோகம்.

இதன் காரணமாகவே வாசகசாலை பதிப்பகம் தொடங்கி, தங்கள் முதல் வெளியீடாக ‘மிஷன் தெரு’ நாவலைக் கொண்டு வர திட்டமிட்டது. பக்கமளவில் அவரது மற்ற படைப்புகளைவிட மிக சிறியதுதானெனினும் இந்நாவல் தொட்டுச் செல்லும் வரலாற்றுப் பிண்ணனி மற்றும் முன்வைக்கும் பெண் மனவுலகம் ஆகிய இரண்டு தளங்களுமே தனித்துவமானவை.

இந்நாவலை வெளியிட விரும்பி ப்ரகாஷ் அவர்களின் மனைவி திருமதி மங்கையர்கரசியிடம் கடந்த வருடமே கோரிக்கை விடுத்தோம். இடையில், வேறு சில காரணங்களால் பதிப்பகம் ஆரம்பிக்கும் முயற்சிகளை ஒத்தி வைத்திருந்தோம். அதுவரை எங்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மறக்காமல் பதிப்பகம் தொடங்கும் வரைக்கும் காத்திருந்து, இன்றைக்கு இந்நூலைப் பதிப்பிக்க வாய்பளித்தமைக்காக எங்களது என்றைக்குமான அன்பும் மரியாதையும் அவர்களுக்கு.

தஞ்சை ப்ரகாஷ் குறித்த விரிவான அறிமுகப் பார்வையை முன்வைத்த தனது 'பழுப்பு நிறப் பக்கங்கள்' நூலில் இருந்து, சில குறிப்புகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளித்த எங்கள் மரியாதைக்கும் அனபுக்கும் உரிய எழுத்தாளர் சாரு நிவேதிதாவுக்கு மனமார்ந்த நன்றி.

புத்தகத்துக்கு முன்னுரை கேட்டவுடன் மிகக் குறுகிய நாட்களில் பல வேலைகளுக்கிடையில் மிக விரிவான தெளிவான தனது பார்வையை முன்னுரையாக எழுதித் தந்த எழுத்தாளர் கவிஞர் மற்றும் திரைப்பட இயக்குநர் லீனா மணிமேகலை அவர்களுக்கு வாசகசாலையின் இதயம் கனிந்த நன்றிகள்.

முன்பே சொன்னதுபோல் இது தனிநபர் முயற்சியல்ல. எங்கள் தொடர்ச்சியான செயல்பாடுகளைக் கவனித்து, எங்களோடு இணைந்த, மிகக் குறுகிய நாட்களில் எங்களோடு ஒருவராகவே ஆகிப்போன எழுத்தாளர் கார்த்திக் புகழேந்திக்கு வாசகசாலை வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறது. பதிப்பகம் தொடர்பான பல விஷயங்களிலும், அச்சுக்கான பிரதி உருவாக்கம் மற்றும் பிழைப்பார்க்கும் பணியிலும் புத்தக வடிவமைப்பிலும் இரவு பகல் பாராமல் தன் உழைப்பைத் தந்து, தனது புத்தகம் போல உழைத்திருக்கும் அவருக்கும் வடிவமைப்பில் உதவிய நண்பர் சிவகாசி சுரேஷ் அவர்களுக்கும் நன்றி என்பது சிறிய வார்த்தைதான்!

அட்டைப்பட வடிவமைப்பில் புத்தகத்தின் உணர்வுக்கேற்ப வரலாற்றுப் பிண்ணனியை அடிப்படையாக கொண்டு வித்தியாசமான ஓவியத்தை வரைந்து தந்திருக்கும் கார்த்திகேயன் மேடி அவர்களுக்கும், இரண்டு மூன்று முறை பிழை திருத்தம் செய்து தந்த எங்கள் அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான திருமதி சசிகலா அவர்களுக்கும் அன்பு உரித்தாகுக..!

எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் எதைக் கேட்டாலும், எவற்றை முன் வைத்தாலும் எந்த கேள்விகளுமின்றி ஊக்கப்படுத்தும் வாசகசாலையின் ஆணிவேராக அமைந்துள்ள பிரியமான நண்பர்கள் குழுவுக்கு மனமார்ந்த நன்றிகளை இந்த பதிப்புரையின் வாயிலாக கூறிக்கொள்ள கடமைப் பட்டுள்ளோம். இன்னும் நிறைய நல்ல படைப்புகளோடு வாசகர்களை தொடரச்சியாக சென்றடைய விரும்புகிறது வாசகசாலை. இதுவரை எங்களின் எல்லா செயல்பாடுகளிலும் எங்களோடு ஒன்றிணைந்த அத்தனை வாசகர்களுக்கும் நன்றிகள் பல.

—வாசகசாலை

"நாம் சொற்களால் ஆசிர்வதிக்கப் பட்டிருக்கிறோம்.
சொற்களாலேயே இணைவோம்..."

இருட்டின் வெண்ணற்ற சாயைகள்

“தஞ்சை பிரகாஷ் இலக்கியம் எழுதியவர் அல்ல. அவரது நாவல்கள் சரோஜாதேவி நாவல்களே. சரோஜாதேவி நாவல்களை வாசிப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஆன்ம தைரியம் இல்லாதவர்களுக்குரிய பாவனை எழுத்துக்கள் அவருடையவை” என ஜெயமோகனின் நிராகரிப்பு ஒரு பக்கம். “தமிழின் உச்சபட்ச படைப்பாளி. அசோகமித்திரனுக்கும் மேல், பி.சிங்காரத்திற்கும் மேல், தமிழில் எழுதிய எல்லாப் படைப்பாளிகளுக்கும் மேல் தஞ்சை பிரகாஷ்” என்று அவர் இருந்த திசை நோக்கித் தொழும் சாரு நிவேதிதா மற்றொரு பக்கம். உண்மையில் இதுபோன்ற மிகையுணர்ச்சிகளுக்கு எதிரானது பிரகாஷின் எழுத்து. மிக நிதானமான வாசிப்பை, கவனிப்பை கோரி நிற்கிறது பிரகாஷின் படைப்புலகம்.

மிஷன் தெரு எஸ்தரின் கதை. துடுக்கான, தைரியமான, அறிவான, அழகான, அபூர்வமான எஸ்தர் சுதந்திரமாக வாழ முற்படும்போதெல்லாம் தோற்கடிக்கப்படும் கதை. மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து வாய்மொழி கதையாடல்களாகவே புழக்கத்திலிருக்கும் "Taming of the shrew" வகைமை கதை. பெண்களை “அடக்க” “நல்வழிப்படுத்த” “கீழ்ப்படியவைக்க” “சொந்தமாக சிந்திக்கும் திறனை மரத்துப்போகச் செய்ய” “பக்குவப்படுத்த” உளவியல் ரீதியாகவும் உடல்ரீதியாகவும் விதவிதமான வன்முறைகளைப் பிரயோகிப்பதை தான் "Taming of the shrew" என்பார்கள். ஷேக்ஸ்பியர் எழுதி அதை இலக்கியமாக்க, இன்றுவரை அந்த மரபு உலகின் எல்லாப் பண்பாடுகளிலும், நாடகங்களாக திரைப்படங்களாக நாவல்களாக மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுக் கொண்டே வருகிறது. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா நடித்த படங்களில் எல்லாம் தொடர்ச்சியாக அவர் “போக்கிரி” பெண்ணாக வருவதும், நம் கதாநாயகர்கள் அவரை “அடக்கமான” பெண்ணாக மாற்றுவதையும் நாம் பார்த்திருப்போம்.

தமிழ் திரைப்படங்களில் இன்றுவரை சுய சிந்தனையுள்ள "திமிரான" பெண்கள் வன்புணரப்பட்டே "பாடம்" புகட்டப்படுகிறார்கள். பிரகாஷின் எஸ்தரும் அவ்வாறே வீழ்த்தப்படுகிறாள். சிறகுகள் நறுக்கப்படுகிறாள். தன்னைத்தானே தூர்ந்துப் போகவிட்டு சிதிலமாக்கி, இடித்துக் கொள்ள தள்ளப் படுகிறாள். பெண்ணின் அழகு துய்க்கப்படுவதும், அறிவு தண்டிக்கப்படுவதும் தான் உலக நியதி என்று வீடும், பள்ளிக்கூடமும், தேவாலயமும், தெருவும், ஊரும் எஸ்தரை மீண்டும் மீண்டும் ரணமாக்கி நிருபிப்பதே "மிஷன் தெரு". இதில் தஞ்சை பிரகாஷின் பங்களிப்பு, தன்னை தானே கேள்விக்குள்ளாக்கிக் கொள்ளும் பாத்திரமாக எஸ்தரை உருவாக்கியது தான். அந்த கேள்விகள் தான் பிரகாஷ் நமக்கு விட்டுச் செல்பவை. கேள்விகளை உறைந்துப்போக விடாமல் சதா உயிர்ப்புடன் வைத்திருப்பதும் படைப்பாளியின் வேலை தான்.

கதை நிகழும் காலகட்டத்தையும் அதன் உள்ளடுக்கு சிக்கல்களையும் மிக நுட்பமான சித்திரமாக்குகிறார் ஆசிரியர். தஞ்சாவூர் சமஸ்தானத்தில் இரட்டை ஆட்சி. ஏதும் அறியாத தமிழ் சனங்கள் வெள்ளைக்காரர்களுக்கும் அடிபணிந்து, மராட்டியர்களுக்கும் கீழ்ப்படிந்து, கொள்ளையிடும் முஸ்லீம்களுக்கும் வேற்று அரசர்களுக்கும் நடுங்கி வாழ்ந்துக்கொண்டிருந்த காலத்தில் 'சோற்றுக் கள்ளர்கள்' என்று கேலி பேசப்பட்ட கிருத்துவக் கள்ளர் குடும்பத்துப் பெண்ணாக வருகிறாள் எஸ்தர். கீழ்சாதி என்று கருதப்பட்ட பள்ளு பறை சாதிகளுக்கு ஏசுவை மறுதலித்த கள்ளர்கள், தங்களுக்கென்ற புதிய பள்ளிக்கூடங்களை கிராமம்தோறும் நிறுவிக்கொண்டனர். துலுக்கர்களும் மராட்டியர்களும் பெண்களைத் துணியில் போர்த்தி மூடிவைத்திருந்தபோது, இந்துக்கள்ளர் சாதியில் பெண்களை வெளியில் அனுப்பாமல் வைத்திருந்தபோது, கிருத்துவக் கள்ளர் பெண்கள் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். எஸ்தரின் தந்தைக்கு அவளை சீமைக்கு அனுப்பி, ஆங்கிலம் படிக்கவைத்து ஒரு Madam ஆக்குவது தான் கனவு. பெண்களைக் "கொண்டு" போவதும், சிறைப்பிடிப்பதும், பூட்டிவைப்பதும், எட்டு வயதிலேயே கட்டிக்கொடுப்பதுமாய் இருக்கும் சூழலில் எஸ்தர் மட்டும் பதினெட்டு வயது வரை யாருக்கும் படியாத கன்றுக்குட்டியாய் வலம் வருகிறாள். ஆங்கிலப் புத்தகங்களின் ஞானம், லத்தீன் - கிரேக்க மொழியறிவு, சங்கீதப் பாடங்கள், உலகம் முழுவதையும் விரும்பும் பரந்த நோக்கம்,

சமத்துவம்—சகோதரத்துவம்—சமாதானம் என்ற பிரஞ்சு சிந்தனை, காதல், சுயதேர்வு என்று வாழ விரும்பும் எஸ்தரை “நீ விபசாரி. நீ கேவலம். உன் உடம்பு அசிங்கம். ஏசு இதில் குடியிருக்க மாட்டார். உன் அழகு பாவம். அதைப்பார்த்தே பலர் பாவம் செய்கிறார்கள். எனவே நீ பாவமாகிறாய். நீ பாவ மன்னிப்பு கேட்டு அழு” என்று முதலில் வேதபாடசாலை வாத்தியார் பழிக்கிறார்.

அடுத்து, “ஒரு பொண்ணை கொழுக்கவுட்டா அவ்வளவு தான், கூரை ஏறி கோளிபுடிக்கக் கிளம்பிடுவா” என்று அவளின் தாய் கண்டிக்கிறாள். தொடர்ந்து, “பொட்டை நாயீ, போடி உள்ள, கட்டை துளுத்துப் போச்சா, தெருவில வந்து பேசினா வீச்சருவால எடுத்து சீவிப்புடுவேன்” என்று தெருவில் மாமா மிரட்டுகிறார். முடிவில், “ஓடுகாலி காலில் சங்கிலி போட்டு கட்ட வேணும்” என்று லாசரஸ் என்ற ராட்சசனுக்கு கட்டாயத் திருமணம் செய்து வைக்கிறார்கள். லாசரஸ், அவளது அபிப்பிராயங்களைக் குறித்து எந்தக் கவலையுமில்லாமல் அள்ளிக்கொண்டு போய் மூலை இருட்டில் போட்டு, மிருகம் வளர்ப்பதை போல வளர்த்து, குட்டிப்போட வைத்து, மாட்டை முகத்தில் கட்டுவதைப்போல கட்டி, பிதுங்க பிதுங்க அது முகத்தை இழுத்துக்கொண்டு சுற்றுவதை போன்ற பயங்கரமான வாழ்க்கையைப் பரிசளிக்கிறான். மிஷன் தெருவில் குடியமர்த்தப்பட்டு, தினமும் அடி, உதை எனப் பதினைந்தாண்டு கால திருமண சிறையில் உருவாகும் தன் மகள் ரூபி, அவளுக்கென துணையை தேடும் தருணத்தில் அவளை அடித்து உதைத்து தன் கணவனிடம் ஒப்படைக்கும் எஸ்தரின் Stockholm Syndrome இல் நிறைவுறுகிறது கதை. திருமணத்திற்கு முன் வரை தன் சுய தேர்வுக்காக எதிர்ப்பதும், ஓடுவதும், தப்புவதும், மீறுவதும், கொலை செய்வதற்கும் அஞ்சாதவளாய் நிற்பதுமாய் இருக்கிற எஸ்தர் வன்புணர்வின் மூலம் வசப்படுத்தப்படுகிறாள். அவளிலிருந்தே அவள் பிரிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்படுகிறாள். அவள் கால்களின் இடையில் நேர்ந்த பலவந்த திணிப்பில் வஞ்சத்தைப் புரிந்துக்கொள்கிறாள்.

ஆனால் அதை தன் உடலின் வஞ்சமெனவும் கருதி மறுகுகிறாள். இதை மேலோட்டமாக உள்வாங்கும்போது வாசக மனம் துணுக்குறும். ஆனால் ஒரு திரைப்பட இயக்குனராக இந்தியா முழுவதும் “ரேப் நேஷன்” என்ற என் ஆவணப்படத்திற்காக பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட பெண்களை சந்தித்து உரையாடிய அனுபவத்திற்குப்

பிறகு எஸ்தரை இன்னும் ஆழமாகப் புரிந்துக்கொள்ள முடிகிறது. பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்களிடம் தங்கள் உடல் மீதே ஒரு தனிப்பட்ட கோபமும், கையாலாகாத்தனமும், கழிவிரக்கமும் அவ்வப்போது பொங்கி வருவதை நான் உணர்ந்திருக்கிறேன். வன்புணரப்பட்ட ஒவ்வொரு முறையும் தற்கொலை செய்துக்கொண்ட வேதனையும் விரக்தியும் வெட்டி வெட்டி இழுத்த எஸ்தரின் மீளாத துயரத்தை, நான் நேரடியாக சந்தித்த பாதிக்கப்பட்ட பெண்களின் கண்களிலும் பார்த்திருக்கிறேன். அத்துமீறப்பட்ட உடலும், எதிர்ப்பின் ஒவ்வொரு முனைப்பும் படுதோல்வியடைந்த வலியும் பெண்கள் காலம் காலமாய் சுமக்கும் சிலுவைகள். அந்தக் கொடும் உளைச்சலில் இருந்தே, எஸ்தர் தன்னை துச்சமாக எண்ணிய லாஸரஸைவிட தன்னை கொஞ்சமாகவேனும் "மதித்த" வெள்ளைக்காரத்துரையிடம் தோற்றுப் போயிருக்கலாம் என எண்ண வைக்கிறது. அதிகாரத்தின் முன் நூறு நூறு ஆண்டுகளாக பெண்ணை மண்டியிட வைக்கும் மிகச் சிக்கலான புள்ளியை பிரகாஷ் தொடுகிறார். பெண்ணைக் கொண்டே அதை விசாரணைக்கும் உட்படுத்துகிறார்.

எந்தக் கர்த்தரையும், எந்த ஜெஹோவாவையும், எந்த கிருஷ்ண மூர்த்தியையும், எந்த சைவ சிவசுந்தரத்தையும், எந்த சைன பௌத்த காளி கூலி மாடன், புலையன், பாவாடைராயன், வாழ்முனி வங்கீசன், காட்டேரி, குரும்பன், குள்ளன், தெரு சாமி வரை யார் கூப்பிட்டு அலறினாலும், எந்த காலத்திலும், எத்தனை ஆயிரம் கோடி வருடங்கள் கடந்தாலும் இதில் இருந்தெல்லாம் பெண்ணுக்கு விடுதலையே கிடையாதா என்ற கேள்வியை அழுத்தமாக முன்வைக்கிறார்.

பிரகாஷ் சுட்டிக் காட்டுவதைப்போல ஒவ்வொரு மனிதனும், தனக்குள் ஒரு உலகத்தை வைத்திருக்கிறான். ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் ஒரு இருட்டை ஒளித்து வைத்திருக்கிறாள். அந்த இருட்டில் என்னையும், நான் அறிந்த, நேசித்த, பிறந்த, பழகிய, வாசித்த, கூடி வாழ்ந்த எல்லாப் பெண்களின் சாயைகளையும் காண முயற்சிக்கிறேன். பதின்மூன்று வயதில் தன் தாய் மாமனுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டு, எந்த வழியில் குழந்தை தன் உடலில் இருந்து வெளியே வரும் என்று அறியாப் பருவத்தில் என்னைப் பெற்றதாய் சொல்லும் என் தாய் ரமா, தான் இழந்ததை எல்லாம் எனக்கு அளித்து விட வேண்டும் என கான்வென்டில் படிக்கவைத்து, நடனம் பாட்டு விளையாட்டு நாடகம் என எல்லாம் பயிற்றுவித்து நூறு மேடைகள் ஏற்றி அழகு பார்த்து,

சாதிக்கப் பிறந்தவள் என தினமும் சொல்லி சொல்லி கனவுகளை வளர்த்துவிட்டு, எனக்குப் பருவம் வந்ததும் என் தாயமாமனுக்கு கட்டிக்கொடுத்துவிட வேண்டுமெனத் துடித்ததை, என்னைக் கட்டாயப் படுத்தியதை இன்றளவும் மன்னிக்க முடியாமல் இருக்கும் நான், தன் மகள் ரூபியை அவள் தேர்ந்தெடுத்த துணையிடமிருந்து பிரித்து அடித்து துவைத்து தன்னை அடிமைப்படுத்திய கணவன் லாசரஸிடமே அவளையும் ஒப்படைக்கும் எஸ்தரையும் மன்னிக்க இயலவில்லை. வாழ்க்கையை சகித்துக் கொள்வதும் வாழ்வு தான் என்றால் அதை எழுதுவதும் படைப்பு தான்.

லீனா மணிமேகலை
கவிஞர், திரைப்பட இயக்குநர்
19 டிசம்பர் 2016

நானறிந்த ப்ரகாஷ்

"ப்ரகாஷ் எப்போது எழுதுவார்?" என்று நண்பர்கள் பலர் கேட்கின்றனர். எப்போதும் ஓரிரு நண்பர்களுடனேயே அவர் காணப்பட்ட படியால் இப்படியொரு கேள்வி எழுந்தது நியாயமே. இப்படியெல்லாம் நண்பர்கள் அவரைப்பற்றி பலவற்றையும் கேட்பதனால் நானும் எங்கள் கடந்தகால வாழ்க்கையின் பக்கங்களினூடே நினைவு அடுக்குகளைத் துழாவியவாறு பயணிக்கிறேன். அவற்றை பகிர்ந்து கொள்ளவும் செய்கிறேன்.

காலை வேளைகளில் கடிதங்களுக்குப் பதிலெழுதவோ அல்லது கடிதமெழுதவோ செய்வார். பின்னர் சற்று தன்னைத் தனிமைப் படுத்திக்கொண்டு எழுதத் தொடங்குவார். மிகத் தீவிரமாக எழுதுவார். "மிஷன் தெரு" குறுநாவலை அவர் எப்போது எழுதினார் என்று நினைவிலில்லை. எப்போது என்ன எழுதுகிறார் என்று எவருக்குத் தெரியும்?. சில நேரங்களில் தான் எழுதியதை அல்லது எழுத நினைப்பதையும் பற்றிப் பேசுவார். அவர் எழுதிய கையெழுத்துப் படியை நான் வாசித்தது என்பது மிக அரிதானது.

"மிஷன் தெரு" 150 ஆண்டுக்காலத்துக்கு முந்தைய சமூகப் பின்னணியை கதைக்களமாகக் கொண்டு புனையப்பட்டதாகும். இவ்வாறு எழுதும்போதும் கூட கதையாக இப்படித்தான் என்று விலாவாரியாகச் சொல்லமாட்டார். அது சாத்தியமுமில்லை. எழுதுகிற வேகத்தில் அவர் படைக்கும் பாத்திரங் களாகவே அவர் மாறிட, அந்தப் பாத்திரங்கள்தாம் கதையை நகர்த்திச் செல்லும்.

சக மனிதர்களை மிகவும் கூர்ந்து அவதானிப்பார். பெண்களை அவ்வாறு கவனிக்கிறபோது எனக்கு அச்சமும் கவலையும் கூடத் தோன்றுவதுண்டு. அவரிடமே சொல்லவும் செய்திருக்கிறேன். எதிர் பாலின ஈர்ப்பு இயற்கை. மனிதர்களை தவிர்த்து பிற உயிரி வகைகள்

யாவும் இதனை இயல்பாக எதிர்கொள்கின்றன. கடந்து போகின்றன. மனிதன் அறிவு ஜீவியான படியால் இந்த இயல்பான தன்மையை இடியாப்பச் சிக்கலாக்கிக் கொண்டு மனிதர் மட்டுமே அல்லலுறுகின்றனர். இவ்வியல்பு குறித்து சிந்திப்பார்; பேசுவார்.

குறிப்பாக தற்கொலை செய்து கொள்பவர்கள் குறித்து பெரிதும் சங்கடம் கொள்வார். காதலின் பொருட்டும் குடும்பச் சூழலினும் தற்கொலை செய்து கொள்பவர்களெனில் அவரது துயரம் மிகுதியாகும். இவை குறித்து அவர் உரையாடிய தருணங்களை நினைவு கொள்ள வியக்கின்றபோது, தொடர்ந்து அவர் படைத்த ஏதோ ஒன்றும் கூடவே நினைவுக்கு வரும். எந்தப் படைப்பின் நிமித்தம் குறிப்பிட்ட அந்த உரையாடலை நிகழ்த்தினார் என்று கூட துல்லியமாக உணருவேன். பெருமையாகவும் கூடவே இத்தகைய தருணங்களை இழந்து விட்டோமே என்று ஏங்கவும் செய்வேன்.

எந்தக் காலத்தினும் பெண் வாழ்க்கை என்பது "அடுப்பே திருப்பதி ஆம்படையானே குலதெய்வம்" என்ற கதைதான். யாரோ ஒருவருக்காக எப்போதும் காத்திருந்தாள், இருக்கிறாள். எப்போதோ சொட்டப் போகிற ஒரு சொட்டுத் தேனை எண்ணி அண்ணாந்தே வாழ்கிற அல்ப சந்தோஷங்கள். அவர்களது இழப்புக்களையும் கூட உணர முடியாதவர்கள்.

"மிஷன் தெரு" எஸ்தர் அத்தகையதொரு பாத்திரம் தான். நேற்றும் இன்றும் எஸ்தர்கள் தான். எப்போது விடியும்?

அன்புடன்

மங்கையர்க்கரசி ப்ரகாஷ்

கு.குப்பு வீரமணி

'டாக்டர் கார்டன் இல்லம்'
541 மிஷன் ஆலமரத்துத் தெரு
மகர்நோன்புச் சாவடி
தஞ்சாவூர் 613 001.
பேசி : 9894781461

தஞ்சை ப்ரகாஷ்

(1943 - 2000)

ப்ரகாஷ் பலதரப்பட்ட மனிதர்களிடமும் பழகியவர். குறிப்பாக பெண்களின் மனசை திறக்கும் சாவியை ப்ரகாஷ் வைத்திருந்தார். அவரோடு பழகிய பெண்களை நான் சந்தித்து பேசியிருக்கிறேன்... அவர்கள் அவரைப் பற்றி பேசும்போது, அவர்கள் முகத்தில் தெறிக்கும் ஒளி, ப்ரகாஷின் ஒளி. அவர்கள் ப்ரகாஷ் குறிப்புகளை எழுதுவார்களா? மாட்டார்கள். அந்தப் பெண்களில் பலருக்கு வாழ்க்கையை சமாளிப்பதே பெரும்பாடு. அவர்கள் எங்கே தாளைத்தேடி, நேரம்தேடி, எழுதுகோலைத் தேடி பதிவு செய்யப் போகிறார்கள். இலக்கியவாதிகளே தடுமாறும் போது... அவர்கள் என்ன செய்ய முடியும் ?

- சுகன்

மிஷன் தெரு



கோடை வெயில் உச்சியை பிளக்கும் கொடூரம். கால்களில் புழுதிமண், நெய் ஒட்டுவதேபோல் ஒட்டியது எஸ்தருக்கு. கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரையும் காணோம். தஞ்சாவூர் மிஷன் தெரு அத்துவானமாகிக் கிடந்தது. எஸ்தருக்கு எடுத்த காலை ஊன்ற முடியவில்லை. காலில் மிஷன் தெரு செம்மண் கொப்புளிக்க கொப்புளிக்க ஒட்டிக்கொண்டு அவளை ஒருவிதமான நடன ஓட்டத்துக்கு ஆளாக்கியது. இந்தப் பொட்டல் பிரதேசத்தில் வந்து குடியேறனுமாம். அவளுக்கு ஆத்திரமாய் இருந்தது.

சரபோஜி மஹாராஜா சும்மா கொடுத்த நெலமுல்ல, சும்மா வந்தா இப்படித்தான். தரங்கம்பாடியில் இருந்து கொஞ்சம் ஜனம் வந்ததுவ. கோட்டையில் இருந்து கொஞ்சம் ஜனம் வந்ததுவ. இந்த ஆளு என்னை மன்னார் குடியிலேருந்து இழுத்தாந்துட்டாரு. 'பேசாம, இருடீ' ன்னாளுவ. 'லாசரஸ் மாதிரி, ஒரு ஆம்பளை கிடைக்குமாடி'ன்னு எல்லாரும் கொண்டைய ஆட்டுனாளுவ. அப்பாவும் அம்மாவும் கூட 'சரிதான் ரொம்ப கொளிக்காத'ன்னுட்டாங்க.

அப்பா இந்த தஞ்சாவூர் செம்மண்ணுக்கு என்னா எரிச்சல் பாத்தியா? காலு பொசுங்கிக் கொப்புளிச்சுப் போச்சு, அது மாதிரிதான். இப்ப என்னா, எம்பொழப்புக்கு காலு ஒன்னுதான் பாக்கி. மன்னார் குடியில கன்னுக் குட்டியாட்டம் துள்ளிக்கிட்டு, ஒரு கொளம் உடாம எல்லாக் கொளத்துளயும் தொளைஞ்சுக்கிட்டு, நீஞ்சிக்கிட்டு ராஜன் தோப்புல நவாப்பழம் பொறுக்கித் தின்னுக்கிட்டு, சோட்டான் சோட்டானா புளியாம்பழம் பொறுக்கிக்கிட்டு வீட்டுக்கு வந்தா, பாவாடை அடி நுனியப் புடிச்சு, அம்மா இழுத்துப் பார்த்துட்டு, 'ஏண்டி

வயசுக்கு வந்த பொண்ணா நீயி? கொளம், கொளமா போயி குதிச்சு ஆட்டம் போட்டுப்புட்டு. மீனா புடிச்சிக்கிட்டு வர்றே? ஒன்னே பிச்சுப் பிரிகட்டி, பினாட்டிப் புடுறேன் பாரு' என்று அலறிக்கொண்டே வந்து, கையில் இருக்கும் புளிய மிளாரால் வாங்கு வாங்கு என்று வாங்கி, குப்புறத் தள்ளி மிதிக்குமே, அந்த சொகத்துக்கு ஈடு இணையுண்டா? அடிச்சா, காலு கையில் எல்லாம் வரிவரியா வரிவரியா கம்புளிப்பூச்சி மாதிரி தடிச்சிடும். ரத்தம் கட்டிக்கிட்டு நீலம் பாரிச்சுடும்.

எஸ்தர் நல்ல சிவப்பு. வீட்டுக்கு ஒத்தைப் பெண். நல்ல ஊட்டம். புசுபுசுன்னு மொசல்குட்டி மாதிரி, பாக்குறவங்க எல்லாம் தூக்கிக்கிட்டுப் போயிடலாமன்னு தோண வைக்கிறமாதிரி இருப்பா. அவளுக்கே அவள் ரொம்ப அழகுன்னு, ரொம்ப வெட்கம். அவ தலையை எப்போவும் சீவவே மாட்டா.

அப்பாரு ஸ்டோன் துரைக்கிட்ட கணக்குப் பிள்ளையா வேலை பார்த்தாரு. ஸ்டோன்துரைதான் மன்னார்குடிக்கி கமிஷனரு. அவளுக்கு அவ ரொம்ப அழகுன்னு தனக்கே பயம் வந்தது ஸ்டோன் துரையாலதான். 'பன்னெண்டு வயசுப் பொண்ணா? நெஜமாவா?' அப்படின்னு கேட்டான் அந்தப் பாவி.

அப்பா இளிச்சு புளிச்சிகிட்டு, "தொர, அவ என்னோட சொந்தப் பொண்ணுங்க. ஏங் கண்ணு" அப்படின்னு சொல்லியுங்கூட துரை என்ன செஞ்சான்னு அப்பா கிட்டயே அவளால திருப்பிச் சொல்ல முடியலெ. ஓட்டமாய் வீட்டிற்கு ஓடிப்போய் அம்மாவ கட்டிகிட்டு அழுவலாமுன்னு தோணிச்சுது. வீட்டுக்கு ஓடுற வரைக்கும், அது தாங்கல. போற வழியிலேயே, உள்ளுக்குள்ள முள்ளுமுள்ளா ஏதோ குத்துறதுமாதிரி வலி. கண்ணெ இருட்டிக்கிட்டு வந்தது. சொல்ல வந்ததெல்லாம் சொல்ல முடியாம தொண்டையில் அடைச்சது. காரணம் இல்லாத துக்கம். இன்னதென்னு சொல்லமுடியாத ஒரு வெட்கமும், எரிச்சலும் அந்த வெள்ளைக்காரனின் வெளிநாட்டு மண வீச்சம்.

ஆனால், ஒரு அன்னியக் கவுச்சி வீச்சம். உதடுகளும் பூதாகரமான அந்த நிமிஷமும் எல்லாம் சேர்ந்து, அவள் உடம்பு முழுவதும் கம்பி ஒன்றால் வரிந்து சுற்றியதுபோல, 'எதையும் சொல்லாதே! எதையும் சொல்லாதே!' என்று எங்கிருந்தோ வரும் எச்சரிக்கைக் குரலும், உருகிக் காலோடு ரத்தமாய் வழிய, 'அம்மா அம்மா' என்று கதறியபடியே,

வீட்டுக்குள் ஓடினாள்.

அவளை, அத்தை ரத்தின பாப்பாக்கா 'அடிப்பாவி உக்காந்துட்டியா? அதுக்கேண்டி பசப்புற? உங்க ஆயி கொல்லப் பக்கத்துல மீனு ஆயிது. நீ போயி வராண்டாவுல ஒலக்கையெப் போட்டு ஒக்கார வேண்டியதுதான்' என்று அத்தைபோட்ட சத்தத்தில் எதிர்வீட்டு, பக்கத்துவீட்டு, பொண்ணுவ எல்லாம் ஓடி வந்துடுச்சு.

வீட்டையே கழுவி விட்டார்கள். திக்திக்கென்று நெஞ்சு அடித்துக் கொள்ள எஸ்தரை தண்ணீரை ஊற்றி அலம்பி எடுத்து மூலையில் உட்கார வைத்தார்கள். யாரோ திமுதிமுவென்று நடையில் வரும் சப்தம் கேட்கவும் அம்மாவின் சப்தம் ஓங்கிக் கேட்டது.

"என்னப்பா நீயி மாமன்தான் இல்லேங்கில.. அதுக்குன்னு இப்பவே வந்து எட்டிக்கிட்டு பாக்கணுமாக்கும், இப்படி பாக்கப் புடாதுப்பா, போ சொல்றேன்ல..."

வந்தவன் வில்லி. நேற்றுவரை, குளங்களில் அவளோடு டைவ் அடித்தவன். பாமனி ஆற்றுப் பாலத்தில் இருந்த பெரிய விளக்குக் கம்பத்தின் மேல் ஏறி, அங்கிருந்து தலைகீழாகக் குதித்து தண்ணீர் பரப்பிற்கு நெருங்கும்போது மூன்று அந்தர் பல்டி அடித்து, தண்ணீரில் நாலுபுறமும் நுரைகள் சிதற சொருக்கடிக்கும் வில்லியைப் போல ஒரு பையனையும் மன்னார்குடியிலேயே கண்டுபிடிக்க முடியாது. வில்லி... வில்லியம்ஸ், பேரில்கூட இத்தனை இனிப்பு உண்டா?

கோவிலில் பைபிள் கிளாஸில், வேதபாட சாலையில், சண்டே கிளாஸில் வில்லியம்ஸின் பெருமூச்சு எஸ்தருக்கு மட்டும் புரியும். ஆனால், பைபிள் வசனம் விரட்டும். "ஆனாலும் உன் இளவயதும் வாலிபமும் மாயையே". சண்டே கிளாஸ் மாஸ்டர் தேவ இரக்கம் சார் குரல் அவளைத் துரத்தும். "ஆதலால், நீ உன் பிராயத்தைக் குறித்தும், அழகைக் குறித்தும் எச்சரிக்கையாய் இரு. சாம்ராஜ்யங்கள் சரிந்ததும், தெய்வ பக்தர்கள் பலர் வீணானதும் இந்த இளமையின் அழகால்தான்.

பெண்ணே உன் அழகைக் குறித்து நீ வேதனைப் படு. விசாரப்படு. அவைகள் உன்னைப் பாழான நரகத்திற்கும், வாலிபத்தின் முட்காடுகளுக்கும், ஆசையின் இருட்டுக்கும் உன்னை பலி கொடுத்துவிடும். "ஏன் சார், அப்ப நம்ப யாரையும் ஆசைப் படக்கூடாது இல்லியா?"

"அது இருக்கட்டும், எஸ்தர் இப்போ இதை எனக்குச் சொல்லு. ஒனக்கு யார்மேல ஆசை? சொல்லிடு உண்மையை"

"எனக்கு யார் மேலயும் ஆசை இல்லே சார்"

"ஏண்டி பொய் சொல்ற. ஒனக்குப் பின்னாலதானே ஒக்காந்து இருக்கான் வில்லி, நீயும் வில்லியும் தானே சேர்ந்து சுத்துறீங்க"

"இல்லே சார்.. இல்லே சார், பொய் சார்"

"பொய்யா சொல்ற, இது வேதபாட வகுப்பு, இஞ்ச சாமி இருக்காரு. பொய் சொல்லக்கூடாது. தேவன் இவைகளை எல்லாம் பார்க்கிறார். ஏய்.. வில்லி ஏந்திரி. உண்மையைச் சொல்லு அவளெத்தானே நீ

கட்டிக்கிடப் போற. அவ புளூவத்தானே செய்யிறா?”

“இல்லே சார், அவள அவங்க அத்தானுக்கோ, மாமாவுக்கோதான், கட்டிக் கொடுக்கப் போறாங்க. இவள அவனுக சுத்திச் சுத்தி வர்றானுவ சார். நீங்க பார்த்தது இல்லெ. சர்ச்சுலகூட அவனுவளோடதான் உரசிக்கிட்டு இவ ஒட்கார்ந்து இருந்தா. ஒருத்தன் பர்னபாஸ், இன்னொருத்தன் ஜோப்”

வகுப்பறையே ‘கொல்’லென்ற சிரிப்பில் அலையாடியது. வெட்கத்தில் அந்தக் கணமே செத்து சுண்ணாம்பாகிவிடக் கூடாதா? பூமியே பிளந்து தன்னை விழுங்கக் கூடாதா ? என்று இருந்தது எஸ்தருக்கு. ஆத்திரம், கோபம் எல்லாம் உண்மையின் முன் செத்து, அழுகையாய் வெடித்து பொங்கி வழிந்தன.

“ச்சீ..ச்சீ..ச்சீ அழுகையை நிறுத்து. நிறுத்துறயா இல்லியா இப்ப. ரொம்ப நாளாவே கேட்கணும்னு இருந்தேன். ஒங்க அப்பனுக்கு கமிஷ்னருகிட்டே கணக்க புள்ளே உத்தியோகம் பாக்குறோமேன்னு திமிரு. மாசம் ரெண்டு ரூபா இல்ல சம்பளம் தர்றான். நாங்க எல்லாம் பி.ஏ., படிச்சுப்புட்டு மாசம் நாலு ரூபாய் சம்பளம் வாங்குறோம் கவர்மெண்டுல. ஒன்னும் படிக்காம, ஸ்கூல் பைனல் கூட பாஸ் பண்ணாம, எங்க சம்பளத்துல பாதி சம்பளம் வாங்குறான்ல்ல அந்தக் கொழுப்பு ஒன்னே இப்புடி திரிய வுட்டுறுக்கானுவ. இதான் பாக்குறேனே. அந்த ஜோப் பய நீ பள்ளிக்கூடம் வர்ரெப்ப ஒம்பின்னாடியே மோந்துக்கிட்டு வர்றான். இந்தப் பய பர்னாபா உங்க வீட்டுக்கே வந்துடுறான்”

உடனே பக்கத்தில் உட்காந்து இருந்த நாலாம் தெரு பார்வதி, “போன வெள்ளிக் கிழமே நானும், எஸ்தரும் பள்ளியுடத்துக்கு மத்தியானமா நடந்து வந்துகிட்டு இருக்கோம் சார். இந்த பய பர்னபா சைக்கிள்ல ஏறி, பின்னாடியே வந்து, நாங்க நெனைக்காத நேரத்தில இவ தலையில் இருந்த மல்லிகப்பூ கொத்த அப்படியே சடக்குன்னு உருவிக்கிட்டுப் போனதுக்கு எஸ்தரு சிரிக்கிறா சார். பர்னாபாஸ் பயலும் தூரத்துல போயி நின்னு பிரேக் போட்டுக்கிட்டு, எங்களப் பார்த்து எப்படீடி ங்கிறான் சார்”

“பாய்ஸ் நீங்க எல்லாம் ஈன்னு ஏன் இளிக்கிறீங்க. ந்நோ, இது இளிக்கவேண்டிய சமாச்சாரம் இல்லெ. நம்மை எல்லாம் விக்டோரியா மகாராணி இன் தி நேம் ஆஃப் காட் ஆட்சி செய்யிறாங்க. நாம எல்லாம்

கடவுளுடைய பிள்ளைகள் அப்படீங்கிறதையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோட பிரஜைகள் அப்படீங்கிறதையும் மறந்து போகவேக் கூடாது. கடவுளோட பார்வையில் ஆம்பள, பொம்பளையின்னு பேதமில்லெ. ஒங்க மனசுல எல்லாம் கெட்ட ஆசைகள் பதுங்கியிருக்கும்.

எஸ்தர் ஒரு கெட்ட பிள்ளை, சாமிக்கு அருவெறுப்பான காரியங்களை அவ செய்யிறா. வில்லியம் நீ உண்மையாக ஏசு சுவாமியை நேசிக்கிறியா? அவர் உன்னை நேசிக்கிறார். இனிமெ நீ இவ பின்னால சுத்தக்கூடாது. வானத்தை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து, சுவாமி கிறிஸ்துவே என் வாலிபத்தின் முள்ளை எனக்குள்ளே இருந்து எடுத்துப் போடும் சுவாமி, எந்த கெட்ட இச்சையையும் என் உடம்பில் இருந்து எடுத்துப் போடும் ஆண்டவரே, அப்படீன்னு ஜபம் பண்ணு. கர்த்தராகிய ஏசு கிறிஸ்து உன் பாவங்களை உனக்கு மன்னிப்பார்.

ஏய் எஸ்தரு கிளாஸ் முடிஞ்சதும் யு கம் டூ மை டென்ட். வர்றியா..? நீயும் ஒங்க அப்பா மாதிரி பாவத்துல விழுந்து அழிஞ்சு போகாத. ஒனக்கு நான் நல்ல வழி சொல்வேன். இதுமாதிரி கெட்டழிஞ்சா அப்புறம் நரகம் தான் நமக்கு கிடைக்கும் தெரியுதா” என்று ஒருவிதமான வேகத்தோடும், படபடப்போடும் சொன்னது எஸ்தருக்குத் தாங்க முடியவில்லை. சேலைத் தலைப்பில் முகத்தைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். நிச்சயமாக வாத்தியார் சொன்ன எதுவும் அவளைப் பாதித்தது என்று சொல்ல முடியாது.

உச்சி வெயிலில் வியர்வையை ஆறாகப் பெருகவிட, தஞ்சாவூர் செம்மண் குழைவில் கால் புதையப் புதைய நடந்துபோகும் அவளுக்கு பழைய நினைவுகளின் அழுத்தமான பசுமையில் நடப்பதுபோல் இருந்ததா? தெரியாது.

இப்போது கையில் இருக்கும் இந்த மோரோடு வீட்டிற்குள் நுழைந்ததும் நிச்சயம் லாசரஸிடம் இருந்து அடியும் மிதியும் குத்தும் கணக்கில்லாமல் கிடைக்கும் என்பது மட்டும் அவளுக்கு நன்றாகவேத் தெரியும். அவனுக்கு அடித்துப் போட்டுத்தான் கொஞ்சிப் பழக்கம். பொண்டாட்டி மேல் ஆசையாம் அது. இந்தப் பதினைந்து வருடங்களில் ஒரு நாளாவது அடி வாங்காமல் அவள் தப்பியது கிடையாது.

அடி விழுந்ததும் நிச்சயம். அதற்கு இரு காரணம் வேண்டும். மயிரைப் பிடித்துக் கொண்டுதான் அடிப்பான். அந்த வெள்ளைக்கார துரை ஸ்டோன், என்ன தப்பு செய்தான். அவளை என்ன மிருதுவாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ஏதோ அவளுக்குப் புரியாத இங்கிலீஷில் கொஞ்சியபடி, அவன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்வதாய் சத்தியம் பண்ணினானே. அவனிடமே இருந்து பயந்து ஓடி வந்தபோது, பலமுறை 'சாரி ப்ளீஸ்' என்றும் 'எக்ஸ்க்யூஸ் மீ, ஐயாம் நாட் தட் கைன்ட் ஆஃப் பெர்சன்' என்றெல்லாம் கூறத்தானே செய்தான். ஆனாலும் அவனை மன்னித்தாளா எஸ்தர்?.

அவள் அழகாய் இருந்தாள் என்று முதன்முதலில் ஆணுக்கே உரிய தைரியத்துடன் முரட்டுத்தனமாய் ஸ்டோன் துரை அப்படி வெளிப்படுத்தியது தவறு ஒன்றும் இல்லை என்று இப்போதுதான்

புரிகிறது. அவளைப் பின்னாலேயே துரத்தித்துரத்தி வந்துகொண்டிருந்த நாய்கள் என்று எஸ்தரால் பலரையும் சொல்ல முடியும். பயந்து நடுங்கியபடியே 'ஐ லவ் யூ' சொன்ன ஜோப், அவள் திட்டிய 'செருப்பாள அடிப்பேன்' என்ற வார்த்தைக்கே ஓடிப் போய்விட்டானே!

ஜோபை, பின்னால் பலதடவை சர்ச்சிலும், கல்யாணங்களிலும், பார்க்கும் போதெல்லாம் எஸ்தர் அவனையே எதிர்ப்பார்த்து சிரிப்பதும், தனியாக அகப்படும்போது, வேண்டுமென்றே அவனிடம், 'கார்டன்ல வெயிட் பண்றேன் வர்றீயா?' என்று உசுப்பிவிடும் தந்திரமும் அவனுக்குப் புரியாது.

'பே'வென்று அவளையே சொக்கப் பார்த்துக்கொண்டு அலங்க மலங்க முழிப்பான். 'அவனை என்ன செய்தால் என்ன...' என்று தோன்றும் அவளுக்கு. பள்ளிக்கூடத்தில் அவளுடன் படிக்கிற எல்லாப் பசங்களும் இப்படிக் கோணல் பார்வை பார்க்க அவளிடம் என்ன இருந்தது என்பது இத்தனை வருஷத்திற்கு அப்புறம் இந்தக் கோடை வெயிலில் பொசுங்கப் பொசுங்க நடக்கும் இந்த வேளையில்தான் புரிந்தது.

வகுப்பில் ஒருநாள் அவள் உட்காருகிற இடத்தில் எழுதித் தலைகுப்புற வைத்திருந்த தாளின் மீது உட்காராமல் தப்பித்து, அந்தத் தாளை எடுத்துப் பார்த்தபோது, அவளைப் பற்றி எழுதியிருந்த அசிங்கமான வார்த்தைகள் அவளுக்கு இன்பமாய் இருந்தன. மனசு வருந்தினாலும் அந்தக் கெட்ட வார்த்தைகளை அவள் மிகமிக விரும்பினாள். அதை எழுதியவன் அவள் கூடப்படிக்கும் அலி இம்ரான் என்ற துலுக்கப் பையன்.

நாலுவரி கெட்ட வார்த்தை. அதை மாஸ்டரிடம் கொடுக்கப் போகிறாள் என்று பயந்தான் அவன். இவள் கொடுக்கவில்லை. வெயிலில் உச்சியில் இருந்து வியர்வை காலோடு வடியும் இந்த நேரத்திலும் அலி இம்ரானின் கெட்ட வார்த்தை, அசிங்கமான உள் உறுப்பு வர்ணனைகள் வேதம் போல், கர்த்தரின் வாசகம் போல் அவளுக்குள் இப்போதும் அதே சந்தோசத்தைக் கொடுப்பது ஏன்?

ஸ்வாட்ஷ் (Swatz) பாதிரியாரிடம் வேலை பார்க்கிற லாசரஸ், அவளை தஞ்சாவூர் கோட்டைக்குக் கொண்டுவந்து 'மிஷன் தெரு' என்கிற இந்தப் பொட்டல் பிரதேசத்தில் அடைத்துவிட்டான். மூன்று குழந்தைகளை ஒவ்வொரு பத்தாவது மாசத்தில் பெற்றபோது, கருப்பு கருப்பாக பிசாசுகள் போல் அந்தக் குழந்தைகள் ஒன்று அரை கால் என்ற விகிதத்தில் அவனைப் போல விபரீதமாகவே அவள் கனவுகளைக் கொன்றதும், எஸதருக்குள் எல்லாமே பட்டு இருந்தன .

அலி இம்ரான் மாதிரியே லாசரஸும் தாட்டிகையாகத் தான் இருப்பான். அவளையும், அவள் அழகையும் எல்லோரையும் போலவே இவர்களும் உதாசீனப் படுத்தினார்கள். தேவ இரக்கம் மாஸ்டர் தனி அறைக்குள் அவளுக்குச் சொன்ன பாடம் பலிக்கவே இல்லை. 'இன்னொரு ஆணை மனதாலும் நினையாதே; இன்னொருவனை இச்சையுடன் பார்த்தாலே நீ விபச்சாரம் செய்தாயிற்று என்று உனக்குச் சொல்கிறேன்' என்கிறதே பைபிள் வாசகம். இவர்கள் எல்லோரும் தன்னை எப்போதாவது இச்சையுடன் பார்க்காமல் இருந்தார்களா?

தேவ இரக்கம் மாஸ்டர், அவருடைய அறைக்குள் கூட்டிக் கொண்டுபோய் அவளை விபச்சாரி என்று திட்டினார். 'தலை குனிந்து நட' என்றார். ஆனால், அவள் அழுகையைக் கண்ணீரை அவரே துடைத்தபோது, அவரே அந்தத் தப்பைச் செய்கிறார் என்பதை, அவரிடம் அவளால் சொல்ல முடியாது என்ற தைரியத்தில் அவர் என்னவெல்லாம் செய்தார்.

"நீ கேவலம்.. ஏசு ஒப்புக்கொள்ள மாட்டார். உன் உடம்பு அசிங்கம்.

கிறிஸ்து அதில் குடியிருக்க மாட்டார். உன் அழகு பாவம். அதைப் பார்த்தே பலர் பாவம் செய்கிறார்கள். எனவே, நீயும் பாவமாகிறாய். உன் அழகால் மயக்குகிறாய். எல்லாவற்றையும் விட, கர்த்தராகிய ஏசு கிறிஸ்துவுக்கு பிடிக்காதது. நீ பத்து கற்பனைகளையும் மீறுகிறாய். எனவே, நீ பாவ மன்னிப்பு கேட்டு அழு" என்று சொல்லியபடியே, "உன்னை நிச்சயம் ஏசு கிறிஸ்து மன்னித்து, ரட்சிப்பார்" என்று அவள் காதுகளில் கூறியபடியே, அவளை இறுக அணைத்து, ஒரு தேவதூதன் போல நடித்து, ஒரு மகளைத் தழுவிக் கொள்ளும் தெய்வீகத் தந்தைபோல் அவள் காதுகளில் மந்திர உச்சாடனம் செய்தபடியே, அவள் கன்னங்களில் எல்லாம் பவித்ரமாய் எச்சில் சுவர முத்தமிட்டு, அவள் உதடுகளில் பொருந்தியபோது அவளுக்கு விஷயம் மெதுவாக விளங்கியது.

தேவ இரக்கத்தின் கைகளில் இருந்து பிரிந்தபோது, தப்பிவிட்டோம் என்ற தைரியம் அவளுக்கு வந்தது. எல்லா ஆண் பிள்ளைகளுமே அனேகமாக இப்படி நாய்போல வாய் வைக்க, அவளிடம் அவர்களே வெறுக்கிற நேரத்திலேயே விரும்புகிற, விரும்புகிற பட்சத்திலேயே ஒதுக்குகிற, அந்த ஆசைப் பொருள் என்ன?

முதலிலேயே காட்டிக்கொடுத்த ஸ்டோன் என்கிற அந்த மனிதனையும், அவள் புறக்கணித்த ஏமாற்றம் இத்தனை வருடத்திற்கு அப்புறமும் நெஞ்சில் வலிகொள்ள வைத்தது. நேர்மையாக எந்த ஆண் பிள்ளையாவது, அவள் புருஷன் உட்பட அவளை நெருங்கியிருக்கிறானா? எல்லோரும் நாய்கள். அதுவும் அவள் கணவன் லாசரஸை ஓநாயாகத் தான் நினைக்க முடிகிறது.

பாஷை தெரியாத அந்த வெள்ளைக்காரத் துரை அவளை முத்தமிட்ட போது, அவளுக்கு அருவறுப்பாய் இருந்தாலும்கூட அவன் முத்தம் பொய்யான ஒன்று இல்லை. அவளைத் தொடும்போது, அது அவளுக்கு வலித்துவிடுமோ என்ற பரிவும், எந்த சொல்லில் அவள் வெறுப்பச்சம் கொள்வாளோ என்று ஒவ்வொரு கணமும் அவள் விருப்பு வெறுப்புகளை மதித்து முத்தமிடுவதின், மூலமாகவே அவளை கௌரவப் படுத்தினான் ஸ்டோன்.

மிகத்தூய்மையான முத்தம். இந்த வெயிலிலும்கூட அதன் ஒவ்வொரு அணுவும் ஞாபகம் இருந்தது. அன்றைக்கு அருவறுப்பாய் இருந்தாலும் கூட, இன்றுவரை அதைப்போன்ற மிக உயர்ந்த கௌரவத்தை

அவளுக்கு எந்த ஆணும் தரவில்லை. ஏனோ தெரியவில்லை. அவள் வாழ்வின் எந்த அம்சமும் அவள் கேட்டு நடக்கவில்லை. அதற்காக அவள் இன்று, இன்னும் சிறிது நேரத்தில் ஊற்றெடுக்கும் வியர்வையோடு, இடிவாங்கிப் புரளப் போகிறாள்.

லாசரஸின் சம்பளத்திற்கு, கர்த்தருக்கு பலியிடப்பட்டது அவள் வாழ்க்கை. ஆனால், ஸ்டோன் துரை அழைத்தபோது, அது அவளுக்குத் தெரியாது. ரகசியமாய் அவன் தந்த முத்தத்தை இருட்டிலேயே எடுத்துப் பார்த்து மகிழ்கிறாள். அவள் கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட போதோ, வில்லியம்ஸை நோக்கி அவள் ஓடினாள். சரபோஜி ராஜாவின் அரண்மனையில் ஒரு உத்தியோகத்திற்காக ஸ்வாட்ஷ் பாதிரியாரின் சிபாரிசை எதிர்ப்பார்த்து முனைந்தபோது, அந்தக் காலத்தில் ராஜாங்க உத்யோகத்திற்காக ஜனங்கள் எதையும் தியாகம் செய்துகொண்டிருந்த வேளையில், வில்லியம்ஸ் அவளை நடுத்தெருவில் விட்டுவிட்டு ஓடிப்போவான் என்று எதிர்பார்க்காதது அவளது புத்தியீனம் தானே.

லாசரஸ் அந்த வேளையில்தான் அவளைப் பார்த்தான். ரொம்ப நல்லவன்போல் அவளை மூன்று நாட்கள் கோச் வண்டி ஒன்றில் வைத்து மறைத்து, ஓடிப்போகாத பெண்ணாக்கி, இரவில் அவள் வீட்டிற்கே பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்து தப்பிக்க வைத்தான். முதன்முதலாய் மன்னார்குடியிலேயே புழுதி ரோடுகளில் கோச் வண்டி என்கிற வினோத, எட்டுச் சக்கரமும், பத்துக் குதிரைகளும் பூட்டப்பட்ட ராஜாங்க தபால் வண்டி ஒன்றில், மராட்டியப் பெண்களைப்போல மூடாக்குபோட்டு மூடி, அவள் வீட்டில் கொண்டுவந்து இறக்கியபோது, மன்னார்குடி மூணாம் தெரு ஜனமே ஆச்சர்யத்தில் வியந்துபோனது.

அவளை எத்தனை நாய்களிடமிருந்து இந்த நாய் காப்பாற்றியது என்ற நினைவு அவளுக்கு அருவெறுப்பாய் இருந்தது. எல்லோரும் இதை வித்தியாசமாகவேப் புரிந்துகொண்டதும் எஸ்தரின் அம்மா, அப்பா, தங்கைகள், குடும்பம் முழுவதுக்குமே ரொம்பவும் மானம் காக்கிற விஷயமாய்தான் தோன்றியது. எஸ்தர் வில்லிப் பயலோடு ஓடிப்போனது எல்லோருக்கும் தெரியும். வீட்டிற்கு வெளியே, யாருக்கும் தெரியாமல் மூடி வைத்திருந்தார்கள்.

எஸ்தரின் அம்மா கொல்லைக் கிணற்றில்போய் விழுந்துவிட்டாள். எஸ்தரின் சிற்றப்பா ராஜரெத்தினம் தியாபிலஸ்தான் கிணற்றில் குதித்து அண்ணியைத் தூக்கிவந்தார். நல்லவேளை சாகவில்லை. வாழாவெட்டியாய், கணவர்களால் ஒதுக்கப்பட்டு, வீட்டோடு வீடாய் சேவை செய்கிற எஸ்தரின் மூன்று அத்தைமார்கள் கூவென்று கத்தியபடியே அறைக்குள் புகுந்து கயிற்றில் தொங்கிவிட முயற்சித்தார்கள். மூன்று நாட்களில் அந்த வீடு ஒரு சாவு வீடாகப்

பரிணமித்தது. அந்த வீட்டின் கடைசிச் சகோதரன், ஜேம்ஸ் வன்னியர், கடைசியாக மன்னார்குடி கோபுரளயம் ஏரியில் குதித்து மிதந்து போனார். மானம் போய்விட்டதாம் அவருக்கு.

அவர் மனைவி ஜெமீமா விதவையானாள். ஒரு குழந்தை ஜேக்கப் வன்னியர் அப்பா இல்லாமல் ஆகிப்போனார். இத்தனையும் மீறி, தினமும் யாராவது ஒருவர் 'சாகிறேன் சாகிறேன்' என்று முண்டினார்கள். ஆனால், இத்தனைக்கும் காரணமான வில்லி எஸ்தரை மறந்துவிட்டு, அவளை லாசரஸிடம் கைதிபோல் ஒப்படைத்துவிட்டு, அரண்மனை உத்தியோகத்திற்கு தாசனாகிப் போனான். அப்படி அவளை விட்டுவிட்ட அந்த அரண்மனை உத்தியோகம் ஒன்றும் பெரிது இல்லை.

வில்லிக்கு வேட்டை ரொம்பப் பிடிக்கும். வில்லியோட அப்பா விக்டோரியா மகராணியோட படையில் வேலை பார்த்தவர். பிரான்ஸ் போரில் இங்கிலீஸ் படையில் கார்ப்போரலாக இருந்தவர். அவருடைய துப்பாக்கியில் சிறுவயதில் இருந்தே குறிபார்த்துச் சுடுவதில் வில்லிக்கு யாரும் இணை இல்லை. வில்லி, அரண்மனையில் இந்த ஒரு காரணத்துக்காகவே மெய்க் காப்பாளனாய் ஸ்வாட்ஷ் பாதிரியாரின் நேரடியான சிபாரிசில், ஆச்சரியமான ஒரு வராகன் சம்பளத்தில் சேர்க்கப்பட்டான். அதற்கு இரையாகிப் போனாள் எஸ்தர்.

மன்னார்குடியில் இருந்து எஸ்தரும், வில்லியும் தஞ்சாவூருக்குப் போன ஒரு வைக்கோல் வண்டியில் தப்பினார்கள். தெருவில் விளையாடிய குழந்தைகளாக இருந்த அவர்களைப் பிரித்தது எஸ்தரின் உடம்புதான். கிறிஸ்தவப் பெண்களைக்கூட எட்டு வயசில் கல்யாணம் செய்து விடுவார்கள். துலுக்கப் பட்டாளம் அடிக்கடி வந்து கல்யாணம் ஆகாத பெண்களாகத் தேடிக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள்.

கொண்டு போகப்படும் பெண்கள் தப்பவே முடிவதில்லை. சாலியத் தெருவில் ஒரு பெண்ணைக் குறிவைத்து கொத்தவால்கள் வந்தார்கள் என்றும் நடுவீட்டில் புகுந்து, அவளை அவள் வீட்டில் இருந்தே எல்லோருக்கும் முன்பாகத் தூக்கிச் சென்றார்கள் என்றும் அவள் கதறக் கதற இழுத்துச் சென்றார்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள். பெண்களைக் கொண்டுபோகுதல் என்பது அந்தக் காலத்திலும் நடக்கிற ஒன்றுதான் என்று எல்லோரும் சொல்வது எஸ்தருக்கு அவமானமாய் இருந்தது.

மன்னார்குடி அவளுடைய சொர்க்கபுரி. எங்கு பார்த்தாலும் குளங்களும், ஏரிகளும், பசுமையான வயல்களும், தோப்புகளும் துறவுகளுமாய் மனத்திற்கு இன்பமான அற்புத பூமியாய் மன்னார்குடி இருந்தது. அடிக்கடி மண் ரஸ்தாக்களின் கப்பி கற்கள் வெளியே தெரிய ஓயாது பெய்யும் மழையும், பாமணி ஆற்று வெள்ளமும், வருஷம் தோறும் தவறாமல் மழைக்காலப் புயலும் அவளுக்குள் ஒரு அற்புத உலகத்தையே சிருஷ்டித்து இருந்தது.

பெண்கள் வெளியே போகக் கூடாது. துலுக்கர்களோ, மராட்டியர்களோ பெண்களைத் துணியில் போர்த்தி வைத்திருந்தார்கள். கள்ளர் ஜாதிக் குடும்பங்களில் பெண்கள் வெளியே போகமுடியாது. பூட்டப்பட்டு இருந்தார்கள். கிறிஸ்தவர்களாகிப்போன கள்ளர்களை, கள்ளப் பெண்களை படிக்க பள்ளிக்கு அனுப்பப் பட்டார்கள் என்பதனாலேயே, மட்டம் தட்டி வைத்தார்கள்.

மன்னார்குடி ஒரு மராட்டிய ஊர். ஊருக்கு வெளியும், ஊரைச் சுற்றியும் சின்னதும், பெரியதுமாய் சிறிய சிறிய கோட்டைகளே கட்டப் பட்டிருந்தும், அந்தக் கோட்டைகளிலே பெரும்பாலும் நாணிபாயி சாப்புகள் மூடி வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும், ஒவ்வொரு கோட்டைக்கும் பேஷ்க்கார் என்ற படைத்தலைவரும், அந்தந்த ஊரைச் சேர்ந்த குட்டிப்படை ஒன்றும், அந்தந்த கோட்டைகளில் ஆயுதங்களுடன் காவல் காத்தார்கள் என்பது, எஸ்தருக்கு அவமானமாய் தோன்றியது.

மகாதேவப் பட்டினத்தின் கோட்டையை அங்கு நடக்கும் பவானி அம்மன் உற்சவத்தில் அவள் போய்ப் பார்த்திருக்கிறாள். அவள்

அப்பாவுடன். முஸ்லிம் என்கிற துலுக்கர்கள் படையெடுப்பையும், பெண்களையே மையமாகக் கொண்டு அவர்கள் அடிக்கும் கொள்ளையைப் பற்றியும், அன்று கண்ணுக்கு நேராகப் பார்த்தாள், எஸ்தர்.

எஸ்தரின் அத்தைகள், ஜேனீ, தேபோரா, தங்கம்மா மூவரையும், பாவாடை கட்டிய சிறுமியான எஸ்தரையும், ஒரு பெரிய சணல் வலையில் கட்டி, ஒரு புளிய மரத்தின், மேல் கிளையில் உறிபோல் தொங்கவிட்டு, பாதுகாப்புக்கு ஆட்களுடன் கீழே நின்றார் எஸ்தரின் அப்பா.

பவானி அம்மன் சிலையை ஊர்வலமாய் கோட்டைக்குள் எடுத்துச் சென்றார்கள். பத்து வாணக் கிண்ணங்களில் வாண மருந்து வைத்து கொளுத்தி விட்டபோது, அந்த பிரதேசமே கந்தக வெளிச்சத்தால் நீலமும் சிவப்புமாய் மத்தாப்புகள் சுடர்ந்தபோது, அந்தக் கோட்டையை எஸ்தர் பார்த்திருக்கிறாள்.

எஸ்தரின் அப்பா, சென்னைப்பட்டனம் போய் இங்கிலீஷ் படிப்பு படித்தவர். 'ஸ்வாட்ஷ் பாதிரியார் ஆங்கிலேயர் அல்ல; அவர் ஒரு டேனீஷ் மிஷினரி. ஜெர்மன் மஹாராஜாவாக இப்போதும் தஞ்சாவூர் அரண் மனையை ஆண்டு கொண்டிருக்கிற சரபோஜி மஹாராஜாவிற்கே இங்கிலீஷ், கிரேக்கு, லத்தீன், ஜெர்மன், பிரான்சு பாஷைகள் எல்லாம் கற்பித்தார்' என்று சொல்வார்கள்.

வீட்டுக்கு ஒரே பெண்ணாக இருந்த அவளுக்கு, இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்து, எப்படியாவது சென்னைக்கு அனுப்பி, அங்கிருந்து சீமைக்கு அனுப்பி, ஒரு 'மாதம்' (Madam) ஆக அவளை வளர்க்க எண்ணி இருந்தார், அவள் தந்தை ராஜரெத்தினம் வன்னியார். ஆனால், நன்றாகப் படித்த எஸ்தர் ஏராளமான சந்தேகங்களை வில்லியிடம் கேட்கத் தொடங்கினாள் என்பது யாருக்கும் தெரியாது.

ஊரைச் சுற்றி வந்த மதில்கள் மண்ணால் கட்டப் பட்டிருந்தாலும், பதினைந்து அடி குறுக்களவு உள்ளவை. அதற்கு முன் வந்த போர்ச்சுகீசியர்களைத் தடுப்பதற்காக, மன்னார்குடியை, பிரித்துக் கட்டிய புதிய கோட்டைச் சுவர்களுடன், வானளாவி நின்ற வாசல்களுடன், மண் அணைகள் மேலேறி ஊர்க் குழந்தைகளுடன் விளையாடுவது மாலை வேளைகளில் கோலாகலமான விளையாட்டாய் இருக்கும்.

தஞ்சாவூர் ஜில்லாவிலேயே ரொம்பப் படித்தவர்களும், பண்டிதர்களும் ரொம்ப நிரம்பிய தளம் மன்னார்குடிதான். தெருவுக்குத் தெரு திண்ணைப் பள்ளிக்கூடங்களும், சமஸ்கிருத பாடசாலைகளும், ஆங்கிலம், பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கிற சிறு பள்ளிகளும் இருந்தாலும், பெண்கள் படிக்கிற வழக்கம் இல்லவே இல்லை. என்றாலும், கிறிஸ்தவர்கள் ஆகிக் கொண்டிருந்த கள்ளர்கள், தங்களுக்கென்ற புதிய பள்ளிக்கூடங்களை, ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

மராட்டியப் பள்ளிகளில் ஓர் ஆசிரியர் அமைப்பில் உருது, பாரசிகம், மராட்டியம், தெலுங்கு ஆகிய மொழிகள் கற்பிக்கப்பட்டன. எஸ்தர், சிறுவயதில் இருந்தே வெவ்வேறு பள்ளிகளில் படிக்க முனைந்த போதெல்லாம் மறுக்கப்பட்டாள். ஏனென்று தெரியவில்லை. கிறிஸ்தவப் பெண்கள் இந்துப் பெண்களைத் தூற்றினார்கள். கிறிஸ்தவக் கள்ளர்களை ஹிந்துக்கள் ஒதுக்கி வைத்தார்கள்.

பிராமணர்கள் தீண்டாமையைப் பற்றி சந்தோஷமாகப் பேசினார்கள். பள்ளு, பறை பதினெட்டு ஜாதியினரும் கேவலமாய்

மதிக்கப்பெற்றார்கள் என்பதெல்லாம் எஸ்தருக்கு வினோதமாகவேத் தோன்றின. பெண்கள் தைரியமாக வெளியே திரிந்தால், 'நீ வேதக்காரியா அம்மா? இப்படி இஷ்டத்துக்குத் தெருவுல திரியிறியே' என்று ஆண்கள் கண்டித்தார்கள்.

"நீ மட்டும் திரியலாமாய்யா, எங்க பைபிள்ள கர்த்தருக்கு கீழ எல்லாம் சமமுன்னு போட்டிருக்கு"

"கர்த்தரா? அப்ப நீ வேதக்காரச்சிதான்; அப்ப நீ கிறிஸ்தவச்சீ"

"ஆமாம் அதுக்கு என்ன?" என்றாள் எஸ்தர்.

"ச்சீச்சீ எட்டிப்போ, மேல படாத. கீழ் ஜாதி முண்டெ" என்றாள் அந்த அம்மாள்.

எத்தனைக் கல்யாணங்கள், எத்தனை பொது நிகழ்ச்சிகள்? கிறிஸ்தவச்சீ என்று 'ச்சீ' பட்டிருக்கிறாள். இவைகளில் எல்லாம் இருந்தும் விடுதலை தந்தவன் வில்லி என்கிற வில்லியம்ஸ். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அவன் அப்பா வட ஆப்ரிக்காவில் டமாஸ்கஸ், ஏடன் பட்டணங்களில் இருந்த இந்தியப் படையில் ஆங்கிலேயருக்காகப் போரிட்ட சகோதரர்கள் பத்து பேரின் குடும்பப் போரில், எல்லோரும் மரணம் அடைந்ததால், கிறிஸ்தவர்களாக மன்னார்குடி என்ற அந்த ஊருக்கு மீண்டு திரும்பிய கதை நீண்டது.

கள்ளர்களிலேயே மழவராயர் இனத்தைச் சேர்ந்த தலைக்கட்டு அவர்களுடையது. அந்த வீட்டின் ஒரே வாரிசு வில்லி மட்டும்தான். நூறு வருஷத்திற்கு முன்னால் கொடிகட்டிப் பறந்த மழவராயர்கள், இப்போது அதே மழவராயர்களின் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்கள். ஆதலால் அவர்களை அவர்களே விலக்கினார்கள். கள்ளர்களை கள்ளர்களே சிறுமைப்படுத்திக் கொண்டார்கள். கிறிஸ்துவ கள்ளப் பெண்களின் நடைமுறைகள் விசித்திரமாக மாறின என்பது பலருக்கும் பிடிக்கத்தான் இல்லை. 'சோத்துக் கள்ளர்கள்' என்று கேலிபேசப் பட்டார்கள்.

வில்லி தனியே கோட்டை மதில் மேல் நடப்பான். குதிரை சவாரி போவான். பத்து, முப்பதுவேலி நிலம் இருந்து இப்போது பழம்பெருமை யோடு சரி. மதில்மேல் வெகுதூரம் நடந்தபின், ஒருநாள் அவனைப் போலவே, அங்கே அவளையும் ஒரு அந்திவேளையில் சந்தித்தான். பள்ளிக் கூடத்தில் இருந்து, ஆலமரத்தடி பாடசாலையில் இருந்து, இங்கிலீஷ் பள்ளிக்கூடம் வரை அவளைப் பார்த்து ஏங்கிய அவனை, அவள் சரியாக இனங்கண்டாள். அவளுக்கு விரிக்கப் பட்டிருக்கும் வலையில் இருந்து அவள் தப்பவே முடியாது.

'நீ பெண்; நீ கிறிஸ்தவப் பெண்ணானாலும் நீ அடிமை, உன் இஷ்டம் போல் வாழ கள்ளனும், பள்ளனும், ஆங்கிலேயனும், பிரெஞ்சுக் காரனும் கூட அனுமதிக்க மாட்டான். உன்னைப் பெண்டாளும் ஆண்மகன் உன்னை மனுஷியாக, சினேகிதியாக, ஒருவருக்கு ஒருவர் பற்றும் உறவுமாக நடத்த, கிறிஸ்தவ மதம் கூட உதவாது. காலம்தோறும், ஒவ்வொரு யுகம் தோறும் பெண் என்பவள் இதையே விரும்புவதால்

அவள் மீளவேப் போவதில்லை" என்று முதன்முதலாய் அவளுக்காக விவாதித்தான். வில்லியம்ஸின் பேச்சுக்களை அச்சமின்றி மறுத்தாள் . அறியாத பெண்.

வில்லியை தினமும் குளக்கரையிலும், ஆற்றிலும் அதிகதிக நேரம் சந்தித்துப் பேசப்பேச அவளுக்கு ஆனந்தம் மிகுந்தது. அவள், வீட்டு ஜன்னல்களும் கர்த்தரின் அருளால் அடைக்கப்பட்டன. அவளை ஒத்தப் பெண்கள் ஓயாமல் வேதபாட வினாவிடைகளை மனப்பாடம் செய்தனர். "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று தொடங்கி, "சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கம் உள்ள பிதாவே" என்றும் முடியும் ஜபங்களும், ஆராதனைகளும், மனப்பாடமாய் பாடப்பட்டன.

பைபிள் மொழிபெயர்க்கப் படாவிட்டாலும் அதன் பல பாகங்கள் வேதோபதேசங்களாக அச்சு வடிவிலேயே கிடைத்தன. ஓயாது ஆங்கில மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும் அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவளை ஒத்த சினேகிதிகள் எட்டு வயதிலும், பத்துவயதிலும் முகம் தெரியாதவர்களுக்கு, உறவினர்களுக்கு கல்யாணம் செய்துதரப்பட்டு, பதினைந்து வயதாகும் முன்பே விதவைகளாக ஆக்கப்பட்டு, தாய்வீடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். இருட்டு வேளைகளில் இவைகளைப் பற்றி எஸ்தர் தன் ஒரே சினேகிதனிடம் கூறிக்கொண்டிருந்தாள்.

உடம்பு என்பது அவளுக்கு வினோதமான அனுபவமாய் இருந்தது. அவளைப் பலமுறை பெண்கேட்டு மாமன் வீட்டில் இருந்தும், அத்தை வீட்டில் இருந்தும் ராஜரெத்தின வன்னியரிடம் ஆட்கள் வந்து கொண்டிருந்தார்கள். பெண்ணுக்கு பெண்ணாகவும், ஆணுக்கு ஆணாகவும் அவளை வளர்த்த ராஜரெத்தின வன்னியருக்கு அவள்மேல் அசாத்திய நம்பிக்கையே. வீட்டுக்குள்ளே அவருக்கு மூன்று சகோதரிகள் குறைபட்டுப் போய், வாழாவெட்டியாய் இருப்பதால் அவருக்கு எந்த குலுக்களும் இல்லை. என்றாலும், ஒற்றைக்கு ஒரு பெண்ணை, கொஞ்சம் மெதுவாகவே வீட்டைவிட்டு அனுப்பலாம் என்று காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு இருந்தாரே தவிர, மகள் தானாக ஒருத்தனைத் தேடிவிடுவாள் என்று எண்ணியதே இல்லை.

ஒருநாள் சொல்லச் சொல்ல கேட்காமல் அப்பாவுக்கு சாப்பாட்டை எடுத்துக்கொண்டு, கூட இரண்டு பெண்களையும் அழைத்துக்கொண்டு, அப்பாவின் கமிஷ்னர் பங்களாவிற்குச் சாப்பாடு கொடுக்கப் போகும்வரை, இந்த உடம்பின் ரகசியங்கள் இன்னது என்று சொல்லித்தர வில்லியாலும் முடியவில்லை.

குளத்தில் நீந்தும்போது ஒருவர் கையை மற்றொருவர் ஆதரவாய் பிடித்துக் கொண்டதைத் தவிர, ஸ்பரிசத்தின் இரகசியத்தை அவளுக்குச் சொல்ல ஒரு இங்கிலீஷ்காரன்தான் வேண்டி வந்தது. ஸ்டோன் தொரை, ஆறடி உயரம் உள்ள உயர்ந்த கட்டுமானம். இந்தியப் பெண்களின் உருண்டைக் கட்டு மானத்தில் அதீத பிரதி உள்ள ஒரு அயலவன். தினமும் வரும் அவளைக் கூர்ந்து அறிந்தான். ஓடி ஒளியும் ஹிந்துப் பெண் அல்ல இவள் என்றும், மிகமிகத் தைரியமும் துணிச்சலும் கொண்ட முள்ளுள்ள காட்டு ரோஜாக்கொடி, மெல்ல மெல்லத்தான் இதை பதியன் போடமுடியும் என்றும் அறிந்து வியந்தான்.

கள்ளப் பெண்களுக்கே உரித்தான இறுக்கிக் கட்டிய வில் போன்ற எஸ்தரின் வளைவும்நெளிவும் திண்மையும் அவனைத் துணிய வைத்து விட்டன. ஆனால், சுருக்கமாக அவளிடம் அவன் சொல்ல விரும்பிய, ‘அயாம் ஃபாலிங் இன் லவ் வித் யூ’ என்ற அவன் பிதற்றல் அவள் காதுகளுக்குள் விழும்முன், அவளைத் தனியே, தன் அந்தரங்கத்தில் அணைத்துப் பிடித்து, உடலோடு உடலாக நெருங்கி நின்று, உதடுகளால் உரசி, தீ முத்தம் ஒன்றை அவள் உதடுகளில் பொருத்திவிட்டான். தப்ப முடியாதபடி எரிய ஆரம்பித்துப் போனாள் எஸ்தர்.

உடலின் மேற்பரப்பில் என்ன நடக்கிறது என்று தெரியாமலே எஸ்தர் மனதின் அடி ஆழத்திற்குள், நெஞ்சுக்குள், உதட்டில் இருந்து அனல் வழிந்து உள்ளேயே நெஞ்சில் இறங்குவது புரிந்ததே ஒழிய, தன்னை உடைத்து சிதறிவிட்டான் என்ற உண்மை புரியுமுன், அவன் கரங்களில் இருந்து உதறிக் கொண்டு ஓடும்பொழுதே, அவள் உடம்பும் மனதும் ஒருசேர எழும்பிக் கிளர்ந்து, ஒரு இணைப்புக்கு அந்தக் கொடி வளைந்து கொடுத்துவிட்டது என்பது அவளுக்குப் புரிந்தது.

அனல் இப்போது கால் வழியே வழிந்து, சிதறியபோது எல்லாப் பெண்களையும் போலத்தான் விலக்கின் கொடும் விலக்கு அவளுக்குப் புரிந்தது.

பள்ளிகளிலிருந்தும், விரித்த வானங்களின் வெளிச்சத்திலிருந்தும் எஸ்தர் பின்னுக்கு இழுக்கப்பட்டாள். நீண்ட அவளது கூந்தலை நாளுக்கொரு விதமாய்ப் பின்னிச்சூடி அலங்கரித்தார்கள். ரத்தம் கருநிறமாய் வடிந்தபோது, சுற்றிலும் இருந்த பெண்கள் எஸ்தரை பயமுறுத்தினார்கள். இருபது நாட்களுக்குப் பின்னர் சர்ச்சுக்கு மட்டும் பெண்களோடு போனபோது, அவள் தன் சினேகிதனை, அவன் விழிகளைத் தேடினாள்.

வேத வகுப்புகள், பைபிள் க்ளாஸ்கள் அவளுக்கு விலக்கப்பட்டன. வெளியிலும் அவள் போக முடியாது. அவள் அப்பா ராஜரெத்ன வன்னியர் கூட இதில் இன்னும் கொடுமையாக இருந்தார் என்பது புரிந்தபோதுதான் விலக்கு இன்னது என்று அவளுக்குப் புரிந்தது.

எப்போதும் அவளுடன் பத்து பெண்கள் இருந்து வழிநடத்தினார்கள். பாவம், ஆற்றில் குளிக்கப்போகும் போதும், கூட்டமாகச் சூழ்ந்து அவளை அமுக்கினார்கள். மற்ற பெண்கள் கூடிக்கூடி வரப்போகும் ஆண்களைப் பற்றி, அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்த தம்முடைய குலத்து ஆண் பெருமைகளை வீர்யத்துடன் பேசினார்கள். தஞ்சாவூர்ப் போக குதிரையிலேயே பத்து நாளாகும் என்று பெருமையடித்துக் கொண்டார்கள். நிஜமாகவே குதிரை சவாரி செய்து, போய் வந்தவள் எஸ்தர். ஓர் இரவில், பாய்ந்து திரும்ப முடியும் என்ற உண்மையை அவள் யாருக்குச் சொல்லமுடியும்?

செங்கமல தாஸ் கட்டிய கோட்டைக்கு அடிக்கடிப் போய் வருவதை வழக்கமாய் வைத்துக் கொண்டாள் எஸ்தர். மன்னார்குடியின் கடைசிக் கோட்டை அது. வடுக நாயக்கர்களின் கோட்டை அது. அந்தக் கோட்டையின் பெரும்பகுதி இடிந்து, தூர்ந்து போய்க் கிடந்தது. செங்கமலதாஸ் காலத்தில், ஏறத்தாழ எழுபத்தைந்து வருடங்களுக்கு முன், ஒரு பெண்ணுக்காக, தஞ்சை நாயக்க ராஜாக்களுக்கும், மன்னர் நாயக்கர்களுக்கும் செங்க மங்கலம் என்ற அரசிக்காக நடந்த போர் பாராபரியாகச் சொல்லப்பட்டது.

தொடர்ந்து முப்பத்தாறு நாட்கள் போர் நிகழ்ந்து தஞ்சை நாயக்கர் ரகுநாதன் மன்னர் நாயக்கனின் கோட்டையுடைத்து, ஊரைக் கொளுத்தி, அந்தப் பெண்ணை மகனுக்குத் தூக்கிச் செல்ல கோட்டையுள் வந்தபோது, நெருப்பை வளர்த்து அந்தப் பெண், கூட்டம் கூட்டமாய் பெண்களுடன் அந்த நெருப்பில் குதித்துச் செத்துச் சாம்பலாயினாளாம்.

இது கதையல்ல, வரலாறு தெரியாத ஜனங்களின் காதுகள் வழியாய், வழிவழியாய்த் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் நம்பிக்கை. நிஜம், இந்த நிஜமான பொய்க்கதையில் தன்னைத் தேடிக் கொண்டிருந்தாள் எஸ்தர். மூன்று மைல் நீளம் போகும் மன்னார்குடி கோட்டைச் சுவர் அவளுக்குப் பல கதைகள் சொல்லும். உடைந்த அந்தச் சுவர்களில் அவளுக்கு என்ன இருந்தது என்பது அவளையொத்தப் பெண்களுக்குப் புரியத்தானில்லை. அவள் தன் மன்னரைத் தேடினாள். என்ன செய்வது? இப்போது நடப்பது வெள்ளைக் காரர்கள் நடத்தும் ஆட்சி.

இங்கிலீஷ்காரர்கள், மராட்டியர்களை ஆட்சி செய்ய விட்டிருப்பதால் ஊரும், நாடும் அமைதியாய் இருக்கிறது. ஆனாலும், இன்னும் துலுக்கர்கள் ஓயவில்லை. எங்கும் ஆபத்து காத்திருந்தது. யாரையும் கொன்று கொண்டுதான் இருந்தது. துருக்கர், பாரசீகர், இஸ்லாமியர் என்று ஒரே இனத்தின் பல கிளைகளும் எங்கும் அலைகிறார்களாம். பெண்களை விற்கும் துரானியர்கள் வேறு மராட்டியர் நடுவில் அலைகிறார்களாம். எஸ்தர் இவைகளையும் மீறி, யாருமற்று தன்னையொத்த பெண்கள் கூட்டத்தோடு மன்னார்குடி கோட்டைக்குப் போய்வருவாள். மாலையில் திரும்ப நேரமாகிவிட்டால் குதிரைகளுடன் கள்ளர்கள் தேடிப் புறப்படுவார்கள். கைதிகளைக் கொண்டுவருவதுபோல் கொண்டுவருவார்கள். விரட்டிக் கொண்டுவந்து சேர்ப்பார்கள்.

“ஏம்ப்பா இப்படி ஆடு மாடு மாதிரி ஓட்டிக்கிட்டு வர்றாங்க எங்களே? ஓடில்ல வர்றோம்?”

“ஏம்மா அங்கெல்லாம் போறீங்க? துலுக்கப் பட்டாளம் வந்தா அப்படியே கொண்டு போய்டுவான்வளேம்மா? அப்புறம் உங்கம்மா, நானு எல்லாம் என்னா பண்ணுறது?!”

“பத்து துலுக்கனுவளையாவுது நான் போட்டுத் தள்ள மாட்டனாப்பா சாவமுந்தி..?”

“பாத்தியாடி எம்பொண்ணெ? வீர்யத்தெப்பாரு! கள்ளக்கருவுல்லே? சும்மாவா? ”

“ஆமா! சும்மா துள்ளாதீங்க! அம்ம ஜாதீல பதினஞ்சு வயசுவரைக்கும் எவளாவுது கல்யாணம் இல்லாம இருக்காளுவளா? இவளெ எதுக்கு இன்னும் படிக்கவெச்சு, படிக்கவெச்சு, நீங்க

கெடுக்கிறீங்க! குதுருமாதிரி மாருதள்ளிப் போயி, முத்தீட்டா, யாருக்கு வேண்டும்? அப்பறம் யாரு கட்டிக்குவா? வாரதையிலியே பர்னபா கையில் புடிச்சுக்குடுங்க ஆமா சொல்லிப்புட்டேன். ஒரு பொண்ணு ஒரு பொண்ணுன்னு கொழுக்கவுட்டா அவ்வளவுதான். கூரை ஏறி கோளிபுடிக்கக் கௌம்பீடுவா.. ஆமா!" என்றாள் எஸ்தரின் அம்மா ராஹேலம்மா. அவளுக்கு ஒரே பொண்ணு, எஸ்தர்; ஒத்தைக்கொருத்தி! மூணு அம்மாளுக்கும் செல்லப் பொண்ணு! நாலாவது அம்மாவாவும் பதினெட்டு வயசில் ஒருத்தி இருக்கு!

ராத்திரீல கொல்லையில் ஒருமாதிரி மரம் வெட்ற சத்தம் கேட்டதும் ஆளுவ தேடிக்கிட்டு அஞ்ச போவாய்ங்க. அதே நேரத்துல புளியமரத்து மேல, சரசரன்னு ஏறி, வில்லி மொட்டை மாடியில் ஒளிஞ்சிருப்பான். 'திக்கு திக்கு'ன்னு மெல்லமா எந்திரிச்சி, மூணாவுது மாடிக்கி ஏறுவா. யாருக்கும் தெரியாமெ, பாய்வா எஸ்தரு. வில்லி என்னமோ தொடுவான், தொடுவான்னு காத்திருப்பா. தொட மாட்டான், அவன் பக்கத்திலேயே இருந்தும் ஒரு சோதனை! பேச்சே இல்லாமே மூச்சு வுட்டுக்கிட்டு, ரெண்டு மூணு நிவீஷம்... அப்புறம் 'நான் வரட்டா?'

'எப்ப வருவீங்க?' என்று 'ங்க'–வை அழுத்தியே சொல்லிக் கேட்பாள். வர்றேன் என்றுமட்டும் சொல்லிப் பதறியபடியே அவள் கைகளைப் பிடிப்பான். அப்புறம் ஒரே ஓட்டம். மாடிதாண்டி, மணல்ல குதிச்சு, பின்வழியே வேலிதாண்டி ஓடியே போய்விடுவான். அவ்வளவுதான். எத்தனை நாள்; எத்தனை தடவை; எத்தனை வழியிலும் இவ்வளவுதான் அவன்.

'ஏம்பா எனக்கு கல்யாணமே வாண்டாம்ப்பா!'

'கர்த்தாவே! இதென்ன சோதனை! அப்புறம் இந்த ஊர்ல நான் மானமா திரிய முடியுமா? 'ஒன்னே எல்லாத்துலியும் இஷ்ட்டம் போல வுட்டுவுட்டு இப்டி குட்டிச் சொவுரானெ!'

'எனக்கு மாமாவையும் அத்தானையும் புடிக்கல்லெ!'

'என்னது? புடிக்கிலியா? சும்மா வுடுவானுவளா? கட்டிக் கொண்டுல்ல போய்டுவானுவ?'

‘புடிக்கலென்னா வுட்டுட வேண்டியது தானேப்பா... சரி?’

‘அதுசேரி! புடிக்காதாம்ல்ல? நாங்கள்ளாம் புடிச்சா கண்ணாலம் பண்ணிக்கிட்டோம்? அட அவகிட்ட என்னங்க பேச்சி. நீங்க பாட்டுக்கு பன்னபாஸ்கிட்ட சொல்லுங்க கட்டிக்கிட்ட ரெண்டு நாள்ள கவணையில் வுட்டடிச்ச மாடு ஒழுங்காயிடுது.’ இது அம்மா!

‘செய்வெ! செய்வெ! தாலிகட்ட முந்தி கோயில்ல பாதிரியாரு தானெ தாலி எடுத்துக் குடுப்பாரு? அப்ப மாட்டேன்னு சொல்லிட்டா என்ன பண்ணுவீங்க?’ என்றாள்.

‘சொன்னாலுஞ் சொல்லுவாங்க இவ! ரெத்தத்தே வேர்வையாக்கி வளத்ததுக்கு இதுவுஞ் சொல்லுவெ, எங்கள சந்திரைக் கரைக்கி கொண்டாந்து நிறுத்துனாலும் நிறுத்துவெ டீ முண்டெ’ என்று கதறினாள் ராஹேலம்மா! பரங்கிப் பழம் மாதிரி இருப்பாள். அழுது கதறும்போது விரிசல்விட்டது மாதிரி ஆகிப்போனாள். அப்பா திகைத்து நின்று போனார். ‘நம்பகுடி கள்ளக்குடிம்மா மறந்துடாதெ’ என்றார்.

‘யாருப்பா இல்லென்னாங்க! எனக்குப் புடிக்காதவனெ நான் கட்டிக்கணுமா? கள்ளக்குடி அப்படிதாஞ் சொல்லுதாப்பா?’

‘நீயி பாடி பரதேசியில்லம்மா எஸ்தரு. அம்மகுடி வெளங்க வந்த தாயி! நீயி. நம்ம அத்தபுள்ள மாமம் புள்ளையத்தாம்மா கெட்டிக்கணும்! இல்லன்னா வுடமாட்டாங்க’ ஏதோ பதில் சொல்ல முனைந்த எஸ்தர் திகைத்துப் போனாள். அந்த வீட்டுப் பெண்கள் எல்லோரும் கூடி நிற்கிறார்கள். வாழா வெட்டியாய் அந்த வீட்டு உள்கட்டிலேயே நின்றுபோன ஜெனி! தெபோரா! தங்கம்மா. மூணு அம்மாமார்கள், தங்கச்சிகள் (இந்தப்பா பெண்கள்) எல்லாரும் விழிகளில் தீயை நிரப்பிக் கொண்டு அவளைப் பார்த்தார்கள்.

அவள் படித்த ஆங்கில நாடகங்களில், காவ்யக் கவிதைகளில், புராதன கிரேக்க காவ்யங்களில் பெண்கள் தனியே அற்புதமாய், சுதந்திரமாய் நடமாடினார்கள். பைபிள் கதைகளில்கூட எத்தனை சுயமாக, தன்மயமாய் வாழ்ந்தார்கள். யேசு கிறிஸ்துவுக்குக் கூட இரண்டு ஸ்நேகிதிகள். மார்த்தாள், மரியாள் என்ற இரண்டு உன்னதமான சிநேகிதம்! ஆனால், இங்கே அதெல்லாம் நடக்காதாம். காலங்காலமாய், காலம் மாறினாலும் திரைந்தாலும் இதுமட்டும் மாறாது போலிருக்கிறது.

இவர்கள் தன்னை வீழ்த்தியே தீருவார்கள் என்று தோன்றியது எஸ்தருக்கு. பயந்தாள். வெகுநேரம் காத்திருந்து இரவில் அவனை ஆபத்துகள் நடுவே சந்தித்து, பேசி, அவனை உருவாக்கி, தப்பியோடத் துரிதப் படுத்தினாள். வில்லியை தயாரிக்கத்தான் அவள் மிகவும் சிரமப்பட்டாள். வில்லியின் குடும்பமே அவனை நம்பியிருந்தது, வில்லியால், தனியே யுத்தகால இருளில் எங்கு வரமுடியும்? என்ன செய்ய முடியும்?

தீவுப்பிரதேசம் போல் மன்னார்குடி. அறுபது குளங்களின் நடுவில் ஊர். எப்படிப் போனாலும் எதிர்படும் ஒரு குளம், ஊர்க்காவல் வேலிகள், தனித்தனியே போய்த்தான் பெருஞ் சாலையை அடையக்கூடும். எங்காவது ஒருவர் சந்தித்தாலும் போச்சு. போனாலும் எங்கே போவது? அவனுக்குத் தெரியவில்லை. எஸ்தர் தனிச் சக்தியாய் இழுத்தாள்.

ஆங்கிலேயர்கள், கடவுளின் கிருபையால் ப்ரெஞ்ச் நாட்டுடன் தொடர்ந்து போரிட்டு ஜெயித்துக் கொண்டிருந்தார்கள். நெப்போலியன் என்ற அரக்கன், அவர்களின் ப்ரெஞ்சு வீரத்தை ஊக்கி வருகிறான். உலக அரங்கில் அலைகளையும், திசைகளையும் கீழடக்கின ஆங்கிலேயர்கள், நெப்போலியன் போனபார்ட்டின் கடற்படைக்கு ஆங்கில வீர்யம் பதில் கூற முடியவில்லை! சரபேந்திர மன்னர் ஆங்கில ராஜாங்கத்தின் விசுவாசமான ராஜா! தஞ்சாவூர் சுற்றிலும் அவர் ஆட்சி என்று பெயர். ஆனால், பூரணமான அரசாய் இருக்க வெள்ளையர் விடவில்லை.

ஓர் ஊரை விட்டு இன்னோர் ஊருக்கு ஜனங்கள் போவதில்லை. காசி, ராமேச்வரம் போனால்தான் சாவு. சாவுக்காகவே கிழங் கட்டைகள் ஊரைவிட்டு வடக்கே போவதுண்டு. ராஜ கோபால ஸ்வாமி கோயிலும் கோயிலைச் சுற்றி, அய்யங்கார் ப்ராமணர்களும் எழுபது குளங்களுமாய் மன்னார்குடி கடவுளை நம்பிய வைணவர்களுக்கு ஸ்தலமாய் இருக்கின்றது.

பெண் ஒருத்தி, ஆண் ஒருவனை ஆசைப்படலாம், விரும்பலாம். ஆனால், வெளியே சொல்ல முடியாது. கல்யாணத்துக்குத் தான் இஷ்டப் பட்டவனைத் தேடி ஒரு பெண் போகமுடியாது. ராஜரெத்ன வன்னியருக்கு ஐந்து பொண்டாட்டிகள். அவருக்கு வயது அறுபது. அறுபதில்கூட அவரது கிறிஸ்தவ மதத்துக்கு விரோதமாய் பதினெட்டு வயசுக் குட்டி ஒருத்தியை கட்டிக்கொண்டு வந்திருக்கிறார். பாதிரியாரிடம் போய் நூறு வராகன் தண்டம் அபராதமாய்க் கட்டி, மந்திரம் சொல்லி, லத்தீனிய மொழி ஜெபம் சொல்லி, அதற்குப் பின், மனைவியை கோயிலுக்கு (சர்ச்) அழைத்து வரக்கூடாது எனும் நியமத்துடன் அவரது பொண்டாட்டியை, பொண்டாட்டியாய் அவருடன் கூட விட்டார்கள்!

எஸ்தர் தலை தெரிந்தவள். உடம்பின் வளம் அப்படி. யாரையும் மதிக்காத கன்றுக்குட்டி. துள்ளிச்சாடி, வேலி தாண்டியபோது யாரும் விடத் தயாராயில்லை. தஞ்சாவூர் ஜில்லாவாகப் பிரிக்கப்படக் கூட இல்லை. சோழ தேசம் என்றுதான் வழக்கு. ஒவ்வொரு ஊரிலும் கோட்டை. எனவே, தனித்தனியான ராஜ்யம். மன்னார்குடியில் ஆதியில் போர்ச்சுக்கீஸிய, டச்சு மன்னர்கள் ஒரு சிறிய கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டியிருந்தார்கள்.

தரங்கம் பாடியிலிருந்து வந்த ஒரு பட்டாணிய (துலுக்கப்)படை அந்தக் கோவிலை இடித்துத் தள்ளிவிட்டுப் போனது பற்றி, கம்மாளத் தெரு கிறிஸ்தவர்கள் சொல்லிக் கொண்டார்கள். ஒரு அழகான ஆசாரி பெண்ணைத் தூக்கிக்கொண்டு போக வந்தது அந்தப் பட்டாளம். நாகப் பட்டணத்திலிருந்து ஈட்டியும், கம்பும், குந்தமுமாய் ஒரு கூலிப்படை வந்தும் அந்தப் பெண்ணை மீட்க முடியவில்லையாம்.

கம்மாளச்சி உறவு கணுக்காலுக்கு மேலே என்பது பழமொழி. ஆனால், துலுக்கர்கள் அவளை விடாமல் கப்பலில் அரேபியாவுக்குக் கொண்டு போய்விட்டார்களாம். பாதுகாப்பில்லாத பயங்கரத்தால்

கம்மாளர்கள் சென்னை வரை மாதக்கணக்கில் நடந்துபோய் ஆங்கில அதிகாரிகளைப் பார்த்து, பிராது கொடுத்து வந்தார்கள். சரபோஜியின் பட்டாளம் ஒன்றும் ஆங்கில போர்க் கருவிகளுடன் மன்னார்குடி வந்தது.

ஆங்கில அதிகாரி ஒருவர் அங்கே நியமிக்கப்பட்ட பின்னர் துலுக்கர்கள் வருவதில்லையாம். எஸ்தருக்கு இந்தக் கதையெல்லாம் ஆச்சர்யமாய் இருக்கும். பெண்களை யாரும் வெளியே விடாமல் பூட்டிவைத்து, எட்டு வயசிலேயே கட்டிக் கொடுத்தார்கள். பெண்களைப் பெரிசாகும் முன்பே கணவனுக்குக் காட்டினார்கள். ஒவ்வொரு கலகம் நேரும்போதும் நிறைய பெண்கள் காணாமற் போனார்கள். பெண்களைத் தெருவில் விடவும் அஞ்சினார்கள்.

ஊர் அம்பலக்காரர்கள் கச்சேரியும், மராட்டியக் கச்சேரியும், தனித்தனியே கொத்தவால்களும், பேஷ்க்கார்களும் இருந்தாலும் பெண்கள் வெளியே தலைக் காட்டமுடியாது, கூடாது. எஸ்தர் மட்டும் பதினெட்டு வயசு வரைக்கும் படியவேயில்லை. கண்ணெதிரே அவளைத் தூக்கிக் கொண்டு போன ஸ்டோன் துரை அவள் காலில் விழுந்தானே! இத்தனை வருஷம் ஆனாலும், அவளால் ஸ்டோன் துரையை மறக்கவே முடியவில்லை.

மன்னார்குடியில் இந்துக்கள் யாரும் ரவிக்கை அணிவதில்லை. யாராவது ரவிக்கை போட்டிருந்தாலும் காரித்தான் துப்புவார்கள். ஆண்களும் மேல்சட்டை போடுவதில்லை. பட்டாளத்துச் சிப்பாய்களும், துருக்கர்களும், பட்டாணிகளும், மராட்டியர்களும் மேல் குப்பாயம் என்று சுற்றுக் கட்டாக முடிச்சிட்டுக் கொள்ளும் நீண்ட துணியை இறுக்கியிருப்பார்கள்.

எஸ்தருக்கும் ரவிக்கை அணிவது சிரமம் தான். ஆனால், நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே வன்னியர் வீட்டு ஜனம் முழுவதும் கிறிஸ்த வர்களாக ஆகிவிட்டார்கள். ஆதலினால் ஒருவிதமான வெள்ளைக் காரத்தனம் வீட்டிற்குள் புகுந்துவிட்டது. முதன்முதலாக அம்மா அவளுக்கு ரவிக்கை தைத்து முடிந்துவிட்டபோது, ஏதோ அவளைக் கயிறை வைத்துக் கட்டியதுபோல் கஷ்டமாக இருந்தது. பெரும்பகுதி காலம் அவள் ரவிக்கை போடமாட்டாள். அவள் பார்த்த வயல்களில் வேலை செய்த கள்ளப் பெண்களும், வேறு ஜாதிப் பெண்களும் ரவிக்கையை போடவே மாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

தினமும் ரஹேலம்மாள் திட்டுவாள். ‘அயோக்கிய நாயே, ஒன்னே ரவிக்கையை மூடுடி ரவிக்கையை மூடுடின்னு எத்தனைவாட்டி சொல்றேன்?’ என்று கத்திக் கொண்டிருக்கும்போது, அவள் கொல்லை வழியாகப் பறந்து போய்விடுவாள். பச்சைப்பசேல் என்று எங்கு பார்த்தாலும் தென்னை மரங்களும், சோலைகளுமாய் அவளைப் பரவச மூட்டும்.

‘வெளியே போக்கூடாதாம்முள்ள’

வேலியோரமாய் நின்றபடி ரவிக்கையையும், பட்டுச் சட்டையையும் உருவிக் கழட்டிக் கொல்லை கொடியில் வீசிவிட்டு அம்மாங்குளத்து ஒத்தையடிப் பாதை வழியா நடந்து போவாள்.

பாதை எல்லாம் எண்ணை பூசிக்கொண்டு, பூவரசு மரங்கள் இலைகளுடன் பச்சுபச்சு என்று அவளைப் பார்த்துக் கூப்பிடுவதுபோல் இருக்கும். கிண்ணம் கிண்ணமாகப் பூவரசுப் பூக்கள் உதிர்ந்து கொண்டிருக்கும். குளத்தை சுற்றிலும் வளைந்து வளைந்து போகும் அந்த ஒற்றையடிப் பாதையில் நடப்பதே ஓர் இன்பம். 'கூவ்..கூவ்..கூவ்...' என்று செம்போத்துகள் தனித்தனியாய் அழைக்கும் குரல்களும், 'ட்விக் ட்விக் ட்விக்' என்று விளையாடும் மைனாக்களின் பேச்சும், அம்மாங்குளத்து 'சளப் சளப்' என்று பாயும் பெரிய பெரிய சேல் கெண்டை மீன்களின் துள்ளாட்டமுமா "எவ்வளவு ஆனந்தமா இஷ்டம் போல ஜீவிக்குதுவ. இதுங்களத் தடுக்க முடியுமா?

இங்க போகாதே, அங்க போகாதேன்னு. இதுவளுக்கு யாராவது ஆர்டர் போட முடியுமா? ஆனா, என்னைத் தொரத்தித் தொரத்தி, மூடி மூடி வெக்கிறாங்க. வெளியில் இந்து ஜனங்க, நானு ரவிக்க போட்டுக்கிட்டு போனா உத்துக்கிட்டு அதையேப் பாக்குதுவ.. ச்சீ" அவளுக்கு முணகிக் கொள்ளத்தான் முடிந்தது.

கிறிஸ்தவர்களானாலும் வீட்டில் எஸ்தரின் அம்மாக்கள், தங்கைகள் எல்லோரும் ரவிக்கை போடுவதில்லைதான். ஞாயிற்றுக்கிழமை ஒழுங்காக வீட்டில் உள்ள அத்தனை பொம்பளையளும் பட்டு ரவிக்கை கட்டி, தோள்களில் முயல் காது மாதிரி, இரண்டு நாடாக்கள் இருபுறமும் தொங்குகிறமாதிரி முடிச்சிட்டு இருப்பார்கள்.

அந்தத் தெருவிலேயே நாலு கிறிஸ்தவக் குடும்பங்கள்தான் இருந்தன. கமிஷ்னரிடம் வேலைபார்க்கிற அரசாங்க சிப்பந்தி, சூரியன் அஸ்தமிக்காத ஆங்கிலேயர் சாம்ராஜ்ஜியத்தின் ஒரே ஆதரவாளர் ராஜரெத்னம் வன்னியர். தன் குடும்பத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆடைகள் உடுத்துவித்தார். நிலைமைகள் வேறு. அந்தத் துணிகளை எப்போது அவர்கள் உடுத்தினாலும், தெருவில் எல்லோரும் சிரித்தார்கள். 'மூஞ்சியை மட்டும் ஏம்பா வெளிய காட்றீங்க அதையும் தொப்பியைப் போட்டு மூடிக்கிங்களேன். சீமைக்காசு படுத்துற பாடு' என்றார் தெருவில் நின்ற செவகிரி வன்னியர்.

'ஏண்டா, நம்ம சாமிக்கிட்ட என்ன இல்லேன்னுட்டுடா தொப்பி

சாமிக்கிட்டப் போயி சேர்ந்தீங்க. தொப்பிசாமி மாத்திரம் இப்ப என்னாத்த கொடுத்துப் புடுச்சாம். காலையில் நாங்க பாப்பானுவள வச்சு வேதம் ஓதுறோம். அதுக்குக்கூட வக்கத்துப் போயிட்டீங்ளேடா' என்று கத்தினார்.

'வாயெ அடக்குங்க மாமா, நானும் கள்ளன் தான்'

'அடப்பாவிப் பயலே! அத நீயே சொல்லிக்க வேண்டியிருக்குடா, ஏன் தெரியுமுள்ள, ஏண்டா? அஞ்சாவது வேதம் படிக்க போனியில்லெ. அதாண்டாக் காரணம்'

'ஒங்களுக்கு நாலு வேதந்தானே மாமா தெரியும். எங்களுக்கு அஞ்சாவது வேதமும் தெரியுமே' என்று தெருவில் குதித்து கலகலவென்று சிரித்தாள்ண எஸ்தர்.

'பொட்ட நாயீ, போடி உள்ளே, கட்டை துளுத்துப் போச்சா, ஏய்! ராஜரெத்தனம், இப்படித் தெருவுல வந்து பேசவிட்டியின்னா, வீச்சருவாள எடுத்து நானா இருந்தா சீவிப்புடுவேன் சீவி' என்று கத்தினார் செவகிரி வன்னியர்.



அம்மாங்குளத்துக் கால்வாயில் 'ஹோ'வென்று தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. நாலைந்து கள்ளப் பயல்கள் கையில் நீளநீளமான பட்டாக் கத்திகளை வைத்துக்கொண்டு, தண்ணீரில் மாறிமாறி கத்திகளை வீசிக்கொண்டிருந்தார்கள். பிலாக்கூடை வைத்திருந்த ஒருவன் 'ஹோ'வென்று சத்தம் எழுப்பியபடி தண்ணீரில் வெட்டுப்பட்டு வருகிற துண்டு மீன்களை ரத்தத்துடன் சேர்த்து எடுத்துக் கொண்டிருந்தான். பத்து இருபது வெட்டுக்கு ஒரு மீன் ரெண்டு மீன் துண்டாகி மிதந்தது. ரத்தத்துடன் மீன்கள் நீந்தின.

எஸ்தரைப் பார்த்ததும் அவர்கள் அவளைப் பெண்களையே பார்க்காதது போல் வெறித்தார்கள். எல்லாப் பெண்களையும் இவர்கள் இப்படிப் பார்க்கிறவர்கள் அல்ல. பொதுவாகவே கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டப் பெண்களை இப்படித்தான் இவர்கள் பார்க்கிறார்கள். தெருவில் ஏதாவது ஒரு பெண்குரல் ஓங்கிக் கேட்டால் அது ஒரு கிறிஸ்தவப் பெண்ணாகவோ, மராட்டியப் பெண்ணாகவோதான் இருக்கும். மராட்டியப் பெண்கள் முக்காடு போட்டுக் கொண்டிருந்தாலும், தெருவில் யாருடனும் பேசப் பயப்பட மாட்டார்கள். சண்டை, மோதல் என்று வந்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம்.

இந்துப் பெண்கள் எந்த ஜாதியானாலும், ஆடு, மாடு மாதிரிதான். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, ஆம்பளைவள எதிர்த்துப் பேசவேக் கூடாது. அவள்களுக்கென்று தனி மறைவிடம் கிடையாதே தவிர, அந்தப்புரம் கிடையாதே தவிர, அவர்கள் மறைந்துதான் இருக்க வேண்டும். தெருவில், வயலில் வேலை செய்கிற பெண்ணாக

இருந்தாலும், கள்ளக்குடி பெண்ணாய் இருந்தாலும் யாரிடமும், எப்பவும் பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாது.

நாற்பது வருடத்திற்கு முன்னால் தரங்கம்பாடி வழியாக, நாகைப் பட்டினத்திற்கு வந்த போர்ச்சுகீசிய, டச்சு பாதிரியார்களிடம் உபதேசம் வாங்கிக்கொண்டு, கிறிஸ்தவர்களான கள்ளர்கள்தான் முதல் கிறிஸ்தவர்கள் என்று பாதிரியார் சொல்வதைக் கேட்டிருக்கிறாள் எஸ்தர். அதனாலேயே கிறிஸ்தவர்களான கள்ளர்கள் ஒஸ்த்தி என்றும், இந்துக் கள்ளர்கள் மட்டம் என்றும், ராஜாங்கத்தில் பயமும் மரியாதையும் கிறிஸ்தவக் கள்ளர் களுக்குத்தான் கிடைக்கும் என்றும், இந்துக் கள்ளர்களுக்கு மத்தியில் பேச்சு இருந்தது. பள்ளு பறை ஜாதிகளும் கிறிஸ்தவர்களாகிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் கூட 'கிறிஸ்துவச்சி' என்றால் மட்டம்தான் என்று எஸ்தருக்குப் புரிந்தது. பொழுது போகாமல் வயலில் நண்டு பிடிக்கிற இவர்கள் யார் தன்னை மட்டமாக்க? கிறிஸ்தவ மதம் தான் என்றாலும்கூட அவள் எந்த சாமியையும் விட்டுவைக்காமல் கும்பிட்டுக் கொண்டுதானே இருக்கிறாள். மீன் வெட்டிக் கொண்டிருந்த கருத்த வாலிபர்களில் ஒருவன் அவளைப் பார்த்துக் கேலியாகக் கத்தினான்.

'ஏய், காரவூட்டுப் பொண்ணு. நீதான் கிறித்துவச்சியாச்சே! ஏண்டி லவுக்கை போடலெ' அவளுக்கு உடல் சிலிர்த்து வந்தது. 'இந்துப் பொறுக்கி நாய்களா! ஒங்க வேலைய்யப் பார்த்துகிட்டுப் போங்கடா, லவுக்கெப் பொறுக்கிப் பசங்களா' என்று கத்தினாள். கருத்த வாலிபர்கள் இரண்டுபேர், மீன் வெட்டுவதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றனர். அவர்களுக்குள்ளே, குசுகுசுவென்று பேசினார்கள். அவள் ஒற்றையடிப் பாதை வழியே சோலைக்குள் அலட்சியமாக நடந்தாள். 'கன்றி புரூட்ஸ்' என்று தனக்குத் தானே முணகிக் கொண்டாள். இன்னும் நிறைய ஆங்கில வார்த்தைகளைப் படித்துத்தான் வைத்திருந்தாள். அவளறியாமல் கால்களில் ஒரு வேகம். நெஞ்சில் ஒரு சூடு, அவமானத்தின் தகிப்பு. அவள் சரிந்து கீழே இறங்கிய மேட்டில் இருந்து அடுத்த குளமான கிச்சினியாங் குளத்துக்குள் பாயும் கால்வாயில் சீலையைத் தொடைவரைத் தூக்கிக்கொண்டு பாயும் தண்ணீரில் இறங்கிக் கடந்தாள். மீன்கள் அவள் கால்களையும், தொடைகளையும் நிமிண்டின.

கரையேறிய பின்னர், எதிரேயிருந்த ராஜாத் தோப்புக்குள் அச்சமின்றி நுழைந்தாள். 'பொம்பளைவ, வெளிய போவக் கூடாதாம்ல,

இவனுவ யாரு?' வாய்விட்டுக் கேட்டபடி, வழியில் புளிய மரத்தில் ஒடித்த நீண்ட மிளாரினால் வேலியோரத்து கள்ளிக் குருத்துகளை ஓங்கி ஓங்கி அடித்தாள். முரட்டுச் சிரிப்புக்குரல் ஒன்று எதிரே இருந்து கிளம்பிய போதுதான், அந்த அசிங்கமான சிரிப்புக்கும், அவளுக்கும் பழக்கம் உண்டு என்பது ஞாபகம் வந்தது. அவன், பர்னபாஸ். வேலிக்குப் பின்னால் இருந்து நீண்ட நேரமாக அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது அவளுக்கு.

‘என்னடீ, எங்க போறே இப்புடீ. அந்த வெள்ளக்கார தொரெ வரச் சொல்லியிருக்கானா, ஒரு நாளைக்கு ஒன்னையும், அவனையும் ஏந் தம்பிக்கோட்டை அருவாளுக்கு வெனை வெக்கல அப்புறம் பாரு’

‘ஏய்யா ஒனக்கு எரிச்சல். ஒன்னெத்தான் நான் கட்டிக்கப் போறது இல்லீயே. இல்லிட்ரேட் இடியட்’

‘இந்த கோண எழுத்து படிச்ச திமுறுலதானேடீ, என்னெ வாண்டாங்கிற. ஆனா ஒன்னுமாத்திரம் ஞாபகம் வெச்சிக்க. நானு இல்லாம ஒனக்கு கல்யாணம் கெடையாது. என்னை புடிக்காட்டியும், ஒன்னெ கட்டி எங்க வீட்டுக் கரும்பு ஆலையிலே ஒன்னெ போட்டு புழிஞ்சு எடுக்காம உட்ருவேன்னு மாத்திரம் நெனைக்காத. தெனம், அப்பாவுக்கு சோறு கொடுக்குறெனுட்டு, நீ எங்க போறெ, தொரெ ஒன்னெ என்ன பண்றான், அப்படின்னு ஒங்க அப்பனுக்கு வேணாத் தெரியாம இருக்கலாம். ராஜாத் தோப்புக்குள்ள தனியா இருக்கு கமிஷ்னர் பங்களா. யாருக்கும் தெரியாது, அப்படின்னு நெனைக்காத. வார தை மாசம் , இதே தேதியில ஒன்னெ இதே மண்ணுல பொறட்டி எடுக்களையின்னா, என்ன ஏண்டா பயலேன்னு கேளு’ என்று வெறியோடு கத்தினான் பர்னபாஸ். அப்புறம், அவன் பேசியக் கெட்டவார்த்தைகளை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அவளை என்னெவெல்லாம் செய்யப் போகிறான் என்று சொன்னது அவளுக்குக் கொலைவெறியைக் கிளப்பியது. அவன் சொல்வது உண்மைதான். அவன் முகத்தை நோக்கி, அவளால் அதை மறுக்கமுடியாது. கையில் இருந்த புளிய மிளாரை, அவனை நோக்கி கோபமாகச் சுழற்றி எறிந்தாள்.

பர்னபாஸும், நல்ல சொத்தும் சுதந்திரம் உள்ளவன் தான். ஆனால், கறுத்தடியன். மடித்துக்கட்டிய வேஷ்டியும், சுருண்ட தலைமுடியுமாக மயிர் படர்ந்த மேனியுடன் பனைமரத் தூண்கள் போல் கால்களுமாய் அவளுக்கு அருவறுப்பாய் இருந்தது.

துரை கேட்டான். 'ஷெல் ஐ டச் டியர்?' அவளால் மறக்கவே முடியாத தேவசாம்ராஜ்யம் அது. ஸ்டோன் தொரை எத்தனை மரியாதையுடனும் அச்சத்துடனும் தயங்கித் தயங்கி அவளைக் கேட்டான். அவனைப் பொறுத்தவரை, இந்தியர்கள் அடிமைகள். அவன் என்ன செய்தாலும், எப்படிச் செய்தாலும் அவளோ, யாருமோ ஒன்றும் செய்துவிட முடியாது. 'யூ ஆர் அன் ஏஞ்சல்' அவளுக்கு அர்த்தம் புரிந்தது. அவளாலும் ஆங்கிலத்தில் பேசமுடியும். ஆனால், பேசமுடியவில்லை. ராஜாத் தோப்பின் நடுவில் இருந்தது அவன் பங்களா. அப்பாவைத் தேடி அவள் போன நேரம் அது. அப்பா இல்லை. வாசலில் இருந்த ஹார்ட்ஸ்கள் அப்பா இல்லை என்று சொல்லியும் கூட, அவள் ஏன் உள்ளே போனாள்? அவளுக்கேத் தெரியாது.

பதினைந்து அடி உயரம் கொண்ட பெரிய பெரிய தூண்களில், ஆங்கிலேய பாணியில் கட்டப்பட்ட ஒயிட் ஹௌஸ் சாயல் முக்கோண முகப்பில் நிறுத்தப்பட்ட அற்புதமான கட்டடம் அது. மாணவர் விடுதி ஒன்று ஹாஸ்டல் என்ற பெயரில் ரெக்கையம்மன் குளத்தின் மேற்கில் கட்டப்பட்டிருந்த கட்டடமும் கூட இதே பாணியில் எங்கிருந்து பார்த்தாலும் தூண்களாகத் தெரியும். முக்கோண முகப்பு கனவில்கூட மறையாது. அப்பாவைப் பார்க்கப் போகும் பொழுதெல்லாம் முப்பது படிக்கட்டுகள் கொண்ட அதன் திண்ணையும், கருப்பு சலவைக்கற்கள் பாவிய அதன் தளமும், கண்ணாடி போல் மின்னும் சுவர்களும், ஆறடி உயரத்திற்குத் தொங்கும் விக்டோரியா மகாராணி வரைபடமும் ஒவ்வொரு மேஜையிலும் நிற்கும். கண்ணாடி பளிங்குச் சிற்பங்களும், மேஜைகளின் மீது பட்டு விரிப்புகளும், தரையில் பரப்பப்பட்ட மிருதுவான பட்டுக் கம்பளங்களும் மெத்மெத்தென்று நடக்கும்போது கூசும்.

தூய்மைக்கே ஒரு மணம் இருக்கும் போல. உள் அறையில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து தோலில் பைண்ட் செய்யப்பட்ட தங்கச் சிலுவை மின்னும் அந்த பைபிள், அவளுக்குள்ளே ஆசையைக் கிளப்பும் அவன் தான் ஸ்டோன் துரை.

தினமும் ‘ஹௌடு யு டூ’ என்று மிகவும் பணிவாக அவளைப் பார்த்து புன்னகைப்பான் அவன். ‘யுவர் ஃபாதர் ஈஸ் ஒர்கிங் இன் த லான்ஸ். கோ ஆன் சிக்கிங். ஒங்க அப்பான்னா ஒனக்கு ரொம்ப புடிக்கும் இல்லெ’ என்பான். பதில் ஒன்றும் சொல்லாமல், ஒரு புன்னகை மட்டும் செய்தபடி அவனிடம் இருந்து தப்பிக்கொள்வாள் எஸ்தர். அவனிடம் தப்பிக்கொள்ள வேண்டிய ஏதோ ஒன்று இருக்கிறது. ஆங்கிலேயர்களுக்கு இல்லாத கருத்த தலைமுடி அவனுக்கு. அவன் யுரேஷியன். வெகு அழகான நீலக் கண்கள். அதுதான், அவளைப் பயமுறுத்தும் அம்சம். அவள் எதிர்பார்த்த, அவள் பயப்பட்ட, அவள் மறுத்த, அவள் விரும்பின, அந்தக் கணமும் வந்துவிட்டது.

தினமும் ராஜாத்தோப்பு பங்களாவிற்கு ஓட்டமாக ஓடினாள். காரணம் ஒன்றும் இல்லாமலேயே, அவன் இருக்கின்ற அறையில் புகுந்து வெளி வருவாள். சிலநேரங்களில் அவள் அப்பா அங்கிருந்தால் அவளை வைது விரட்டுவார். அப்பா இல்லாத சமயங்களில் அவன் அவளை வேறு எதுவும் சொல்லாமலேயே, 'ஸோ ப்யூட்டிபுல்' என்று சிரிப்பான். ஸ்டோன் துரைக்குக் கல்யாணம் ஆகி, மனைவியை வேறு ஒரு ஆங்கிலேயனுக்குப் பறிகொடுத்துவிட்டு, பெண்களின் சுதந்திரத்தின் உச்ச அபாயத்தைக் கஷ்டத்துடன் அனுபவித்துவிட்டு, விவாகரத்தும் பெறமுடியாமல் இந்தியாவிற்கு வந்தவன்.

ஒரு பூப்போன்ற கள்ளப் பெண் அவனை உசுப்பிவிடுவாள் என்று அவன் எதிர்ப்பார்த்தவன் அல்ல. ஏராளமான வெண் நாவல் மரங்களும், நரி நாவல் மரங்களும், இங்கிலாந்தில் இருந்து கொண்டுவந்து, பயிர் செய்யப்பட்ட கிச்சிலி சப்போட்டா மரங்கள் சூழ்ந்த ஆளற்ற தனிமை அவன் அடக்கத்தை பிளந்தெரிந்த எஸ்தர் என்ற திடகாத்திரமான உடலும், அழகும் அவன் தடைகளை உடைத்தெரிந்தன. ஆனால், அவள் அவனை விரும்பவில்லை என்று முதல் முத்தத்திலேயே உணர்ந்துகொண்ட அந்த வெள்ளையன் எஸ்தரிடம் மன்னிக்கும்படி கெஞ்சினான். எஸ்தருக்கு அவனைப் பிடிக்கவில்லையே தவிர, அவன் செய்த காரியங்கள் யாவும் மிகவும் இன்பமான சுதந்திரத்தை அவளுக்குத் தந்தன.

அவள் தினமும் வருவதை சாக்கிட்டுப் பேசி, நெருங்கி, அவளைத் தனி அறையில் கொண்டுபோய், இறுகக் கட்டித் தழுவி, அவளை அவன் இளகிய நிலைக்குக் கொண்டுபோக, முக்கால் நிர்வாணமாக அவளை

ஆக்கிய பின்பும் கைகளைப் பெருக்கல் குறியாய் குறுக்கில் மறுத்து, முழங்கால்களையும் பெருக்கல் குறிபோல் மறைத்து, 'ஐ டோண்ட் லைக்யூ இடியட்' என்று உதைத்துத் தள்ள முயன்றபோது, அவன் செய்த அற்புதம் வாழ்நாள் முழுவதும் அவளால் மறக்க முடியாத அன்பாய் எஸ்தரின் நெஞ்சில் தீ பறக்க விட்டது.

'சாரி டியர், டார்லிங் ஆப் மீ, ப்ளீஸ் ஒன்லி, ஒன்ஸ்' என்று கூறியபடியே அவள் பெருக்கல் குறிகளை மீறிக் குனிந்து, மிக முரட்டுத்தனமான ஒரு முத்தத்தை அவள் உதடுகளில் விதைத்துவிட்டு, அவள் கால்களில், பாதங்களில் தனது முகத்தைப் புதைத்துக்கொண்டு, அழுதுகொண்டே கதறினான். 'ஸாரி, ஐ ஆம் அஷேம்ட் ஆப் மை ஆக்ட். என்ன மன்னிச்சுடு, ஐ லவ்யூ பிகாஸ் ஐ லவ்யூ, ஸோ மச்' என்று அழுதபடியே அவள் கால்களைத் தன் முகத்தில் அறைந்துகொண்டான்.

'ச்சீத்தூ' என்று காரித்துப்பிவிட்டு அவள் ஓடும்போதுதான் 'அவனை விட்டுவிட்டுப் போகாதே' என்று அவள் நெஞ்சு அலறியது. அவள் ஓடினாள். ஒற்றைச் சேலையுடன் பாய்ந்து ஓடும்போதும், அவன் விரலகள் பட்ட தோள்கள், கால்கள் இரண்டுமே வேறு வேறு பாஷை பேசின. வீட்டிற்கு வருமுன் அவள் திரண்டு விட்டாள். அவளுக்கு அன்றிலிருந்து தான் சிறை வாசம் நேர்ந்தது. அதற்குப் பின், அவளால் ஸ்டோன் துரையின் விரல்கள் பேசிய பேச்சையும், அவன் கண்ணீரையும் மறக்கவே முடியவில்லை. உள்ளுக்குள்ளே ஸ்டோன் துரை உட்கார்ந்து கொண்டிருந்தான். அழுந்த அணைத்தபோது, அவன்மீது இருந்து வீசிய மிலேச்ச மணம்; ஒருவிதமான வியர்வை, அவனது புஜங்களில் அழுந்தியபோது அவன் சடைகளில் இருந்தும், தலையில் இருந்தும் வீசிய தைல மணம், அத்தர் போன்ற வாசனை எல்லாம் அவளுக்குள் நிரந்தரமாகத் தங்கிப் போய்விட்டன.

இப்போது அவள் போனாலும் ஸ்டோன்துரை ஏற்றுக்கொள்ள மாட்டான். இந்த அறியாமை நிறைந்த, கோளாறுகளும், குழப்பங்களும் மிகுந்த பூமியில் இருந்து அவளுக்கு விடுதலை வேண்டும். அவனை அவளால் நேசிக்க முடியாவிட்டாலும், அவன் கரங்களுக்குள் அடைக்கலம் தேடியிருக்க வேண்டும். அன்று தோன்றாமல் இல்லை. லாசரஸ் என்ற ராட்சதன் வந்து அவளது அபிப்ராயங்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளாமல், அவளை ஒரே நாளில் அள்ளிக் கொண்டுபோய், மூலை இருட்டில் கொண்டு வந்து போட்டு, மிருகம் வளர்ப்பதைப் போல் வளர்த்து, குட்டிபோட வைத்து, மாட்டின்

முகத்தை இழுத்து சுற்றுவதே போல, ஒரு வாழ்க்கைக்குக் கொண்டுவந்துவிட்ட பயங்கரத்தை அவள் யாரிடமாவது சொல்ல முடியுமா?

பர்னபாசு, ஜோவையும் பற்றி அவள் யோசிப்பதற்குக் கூட லாசரஸ் இடம் தரவில்லை. மராட்டியர்களோடு வேலை செய்து வேலை செய்து இறுகிப் போனவன். பெண்கள் அவனுக்கு ஒரு பொருட்டே அல்ல.

ராஜரெத்ன வன்னியரின் ஆபீஸ் அறையில் ஒருதரம் அவளைப் பார்த்திருந்த பரிட்சயத்தால் அவளை, அவன் இனங்கண்டு பிடித்துவிட்டான். நீடாமங்கலம் வழியாகச் சரக்கு ஏற்றிச் சென்ற காளை வண்டி ஒன்றில் தப்பித்துச் சென்றுகொண்டிருந்த வில்லியம்ஸும், எஸ்தரும் தீபாம்பாள் சத்திரத்து சுங்கச் சாவடியில் பிடிபட்டார்கள். ஒரு பெண்ணுடன் ஒரு இளைஞன் என்றதும் எல்லோருக்கும் ஆச்சர்யம். பட்டு ரவிக்கை முடிச்சிட்டு, தோள்கள் தெரியும் சீனத்துப் பட்டு ஜாக்கெட்டும் அணிந்து நகைகளுடன் இருந்த எஸ்தரை எல்லோரும் கண்களால் விழுங்கினார்கள். 'எங்கே போகிறாய்?' என்று வில்லியம்ஸ் கேட்கப்பட்டான்.

'அரண்மனைக்கு..' என்று பதில் சொன்னான் வில்லி.

'இது யார்?' என்று அவளைப் பார்த்துக் கேட்டார்கள். தலையில் ஒரு முக்காடும், குமுடாவும் போட்டு மூடி அவளைக் கொண்டு வந்திருந்தால், அங்கு யாரும் மறுபேச்சுப் பேசியிருக்க மாட்டார்கள். மறுக்கவும் முடியாது. ரவிக்கை அணியாது ஒரு நூற்சேலையுடன் கழுத்தில் கட்டிய மஞ்சளுமாய் அவள் வந்திருந்தால், அவனோடு போகவிட்டிருப்பார்கள். தலையில் இருந்து கால்வரை மூடி இதே நகைகளுடன் வந்திருந்தாலும், துலுக்கத் தொப்பியும், முரட்டுச் சாரமுமாய் கைலியுடன் வில்லி வந்திருந்தாலும் விட்டிருப்பார்கள். ஒன்றும் பேசாமல் இருந்தும், அவனுக்கும் அவளுக்கும் ஏற்பட்ட அந்தஸ்து வித்யாசம் காட்டிக்கொடுத்துவிட்டது.

அவளைப் பிடித்து திமிரத் திமிர சத்திரத்தில் அடைத்துவிட்டார்கள்.

பெண்ணாய்ப் பிறந்த அபாயத்தையும், அவமானத்தையும், அறியாமையையும் அன்றுதான் எஸ்தர் பூரணமாய் உணர்ந்தாள்.

சத்திரத்தின் மூலை அறையில் அடைத்துவைத்து ஒவ்வொருவனாக வந்து, அவளைக் கேள்விகள் கேட்டுத் துன்புறுத்தினார்கள். கொத்தவால் ஒருவன் அவள்மேல் போர்த்தியிருந்த சீலையைக்கூட உருவமுயன்றான். ஒவ்வொருவரும் முதலில் மராட்டி மொழியில் 'ஹோன் ஹே ஆப்' என்றுதான் ஆரம்பித்தார்கள். சத்திரத்தின் பின்புறம் இருந்து வில்லியின் பரிதாபமான அலறல் கேட்டுக் கொண்டிருந்தது. சத்திரத்தின் மூலையில் அவளுடன் பேச வந்த அதிகாரியும், தன்னை ஒரு ராஜா என்று சொல்லிக் கொண்டான். முப்பது மைல்கள் அவளுடன் தப்பி ஓடிவந்த காரணத்திற்காகக் கட்டை மரம் ஒன்றில் கைகளை மாட்டி, வில்லியம்ஸ் தொங்கவிடப்பட்டு, தோல் பிரம்பினால் கசையடி கொடுக்கப்பட்டான்.

மனிதகுலம் ஆங்கில சாம்ராஜ்யம்போல், அதன் உன்னதமான ஆட்சியைப்போல், அவள் படித்த புத்தகங்களில் சொல்லப்பட்ட அற்புதமான சமத்துவ உலகத்தைப்போல் ஆகாது என்றும், ஆபத்து நெருங்கிவிட்டது என்றும், தான் இங்குள்ள ஆண்களினால் ஜாதிபேதம் இல்லாமல் கசக்கி எறியப்பட்டு மராட்டிய அரண்மனை அந்தப் புரத்துக்குக் கொண்டுபோகப் படுவதுதான் தன் தலைவிதி என்றும் சொன்னானே அந்த கொத்தவால். அவனைக் குத்தி, இதே அறையில் பிணமாக்கிவிட்டு, 'ஏசு கிறிஸ்துவே, நான் போக, நான் சாக, எனக்கு அருள் புரியும் ஏசு ஸ்வாமி' என்று அந்த மூலை அறையில் முழங்கால் இட்டு ஜெபம் செய்தாள் எஸ்தர். வில்லியம்ஸ் அவளை இழுத்து வந்தது ஜாதிக்கடுக்காது.

பெண்கள் எந்தக் காலத்திலும் இதுபோல் கவர்ச்சிக்கப் படுவார்களாம். கவர்பவளாயும், கவரப்படுகிறவர்களாயும் இருந்து வருவதை விடவும் பெண்களுக்கு அவமானம் வேறு ஏதேனும் உண்டா என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். அந்த மூலை அறையில் தலைக்குமேல் எரிந்துகொண்டிருந்த இலுப்பை எண்ணெய் விளக்கு எரிந்து, கர்ஜித்தும் சிரித்துப் பொரிந்தது.

இலுப்பை எண்ணெய் விளக்குகள் விளக்கெண்ணை பந்தங்கள், காடா விளக்குகள் ஆகியவைகளுடன் சத்திரத்தின் நடுவே ஒரு ஐரோப்பிய மண்ணெண்ணை விளக்கும் எரிந்து கொண்டிருந்தது, திடீர்

என்று நாகப்பட்டினம் சாலையில் அரண்மனையைச் சார்ந்த சாரட் வண்டி ஒன்று தீபாம்பாள் சத்திரத்தை நோக்கி வேகமாக வந்தது.

ஐரோப்பிய மண்ணெண்ணை விளக்கு தூக்கி விடப்பட்டது. ஐநூறு கேண்டல் பவர் கொண்ட அந்த பித்தளை விளக்கு பதினெட்டுத் திரிகளுடன் ஒளியை வாரி இறைத்தது. வாசலில் நின்ற மராட்டிய வீரர்களின் கவாத்துச் சத்தம் 'தாயினே மூட், ஆயினே படோக்கா' கேட்டது. மறுபுறம் ஆங்கிலேய வீரர்களின் ஸ்குவாட் 'அட்டேன்ஸன், ரைட் டேர்ன், டூ, த்ரீ, ஒன்; டூ, த்ரீ ஒன்' என்ற தனிச் சத்தமும் ஆங்கில உச்சாடனமும், தீபாம்பாள் சத்திரத்து ராஜாங்க முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டின. சாரட் குதிரைகளின் முன்னால் பறந்தது யூனியன் ஜாக் ஆங்கில தேசக் கொடி.

'சல்யூட்' என்ற சப்தத்துடன், வரிசையாக தீபாம்பாள் சத்திரத்தின் முன்னால் சலாம் வரிசை செய்யப்பட்டது, இரண்டு வரிசையாக நின்ற வீரர்களுக்கு மத்தியில் ஆஜானுபாகுவான லாசரஸ், சாரட் வண்டியில் இருந்து இறங்குவதை மேல் கிளிக்கூட்டு ஜன்னல் வழியாக எஸ்தர் பார்த்துக் கொண்டிருந்தாள். என்பது யாருக்கும் தெரியாது. அவள் தீர்மானித்தபடியே இந்தக் கிளிக்கூட்டு ஜன்னலின் மேல் கதவைத் திறக்க முயன்றாள்.

அந்த அறையின் தூணில் பதிந்திருந்த ஆணிகளின் மீது கால்வைத்து மேலேறி, மேல் விதானத்தில் இருந்த வட்டமான அந்தக் கிளிக்கூட்டு ஜன்னலின் வழியாக அவள் வெளியேற முனைந்தாள். யாரும் எதிர்ப்பாராத வண்ணம், வெகுநாள் சாத்தப்பட்டேயிருந்த அந்தக் கதவு வெகுக்கென்ற பிடுங்கலினால் வெளிப்புறமாகத் திறந்துகொண்டு, பெரும் சத்தத்துடன் காட்டிக்கொடுத்தது.

லாசரஸ், ராஜாங்கத்தின் முக்கிய ராஜதந்திரியான லெபரண்ட் சீ.எஃப்.ஸ்வாட்ஸ் வாஷ் அவர்களின் முக்கியமான உதவியாளன். மராட்டிய அரசில் மிக முக்கியமான இடம் வகித்தான். 'யாரது? அங்கே யார்?' என்றான் கையை வீசியபடி இருந்த லாசரஸ். 'இங்கே என்ன நடக்கிறது? வாட் அக்ளி திங்ஸ் யூ ஆர் டூயிங்' என்று அங்கிருந்த பேஸ்காரைத் திட்டிவிட்டு, 'தப்பி ஓடுறதுக்கு முன்னால் அவளப் பிடிங்க' என்று கத்திக்கொண்டே, சத்திரத்துக்குள் வேகமாக படி ஏறிப் போனான் லாசரஸ்.

லாசரஸ், கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தபோது மலைபோல் கிடந்தது கொத்தவாலின் பிணம். அடுக்காக மேஜைகளையும், நாற்காலிகளையும் போட்டு நின்றிருந்த அவளை, வெளியில் இருந்து உள்ளே தள்ள முனைந்தார்கள் சிப்பாய்கள். ஒரு கை மடித்து இருப்புப் பகுதியில், முதுகின் பின்னால் கையை ஊன்றியபடி, மேலே மறுகையில் ரத்தம் நனைந்த கத்தியுடன் நிற்கும் அவளை லாசரஸின் ஆர்வம் நிறைந்த கண்கள் வியந்தன. எந்த நிலையிலும் அழகாக இருப்பாள் என்று சிலரைத்தான் சொல்லமுடியும். எஸ்தர் ஒரு ராணி போல, கையில் கத்தியுடன் அவளை எதிர்கொண்டான்.

லாசரஸ் அவனுடைய குருவான சீ.எஃப்.ஸ்வாட்ஸ் வாஷ் அவர்களின் உத்தரவுப்படி, தஞ்சையில் ஒரு கோயில் (சர்ச்) கட்ட நாகப்பட்டினத்தில் இருந்து கப்பலில் வந்த சலவைக் கற்களை மேற்பார்வையிட்டுக் கொண்டுவரும் வேளையில், ஒரு சலவைக்கல் சிலையைப் போல் இவளைக் கண்டது, ஆத்திரம் அடங்காமல் எல்லோரையும் திட்டினான். அவளைப் பார்த்து, 'கீழே இறங்கு,

இறங்குகிறாயா இல்லையா' என்று ஆங்கிலத்தில் கேட்டான். 'இஃப் டு கம்பல் மீ, ஐவில் கில் மை செல்ப், இம்மீடியட்லீ கத்தியையும் தலைக்கு மேல் ஓங்கின அவள், இமைக்கும் நேரத்தில் லாசரஸின் கைகளில் வந்து வீழ்ந்தாள்.

லாசரஸ் இரண்டு மேஜைகளின் மேல் வைக்கப்பட்ட நாற்காலியின் மேல் நின்றிருந்த அவளை, நடுவில் இருந்து மேஜையை ஓங்கி, இமைக்கும் நேரத்தில் உதைத்ததால் மேலிருந்த நாற்காலியில் இருந்து அந்தரத்தில் தூக்கி எறியப் பட்ட அவளை சரியாகவே தாவிப் பிடித்துக் கொண்டான்.

'இவள் என்னோட சொந்தக்காரிதான். மன்னார்குடி கமிஷ்னரின் அசிஸ்டெண்ட் ஸார்ஜெண்ட் ராஜரெத்னம் மகள். எல்லாத்துக்கும் மோடிச் சீட்டு எழுதிக்குங்க. ரெக்கார்ட்ல இவளோட பேரு வரவேண்டாம். மோடி ராவுஜிக்கிட்டச் சொல்லி இது மேலெபோக வேண்டாம்னு நான் சொன்னதாச் சொல்லி ரெக்கார்டெ க்ளோஸ் பண்ணிடச் சொல்லுங்க. இவளை, உடனே மன்னார்குடிக்குக் கொண்டு போகணும். இல்லேன்னா இவங்க குடும்பமே உயிரோட இருக்காது' என்று கூறியபடியே, 'என்ன பேஷ்கார்' என்றான் லாசரஸ்.

'எஸ் சார்' என்று பதில் தந்தார் பேஷ்கார்.

லாசரஸின் முரட்டுப் பிடியிலிருந்து தப்ப அவளால் முடியாததோடு, அவன் எல்லோருக்கும் முன்பாகவே அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்று சாரட் வண்டியின் சிறிய கதவைத் திறந்து, முரட்டுத்தனமாக அவளை உள்ளேத் தள்ளி வெளிக்கதவை இறுக அடைத்துத் தாழிட்டான். 'ஹே... யூ! டேக் கேர் ஆஃப் ஹர்' என்று ஆணையிட்டுவிட்டு, கையில் இருந்த பிரம்பால் குதிரையின் புட்டத்தில் லேசாகத் தட்டியபடி, பேஷ்காரைப் பார்த்து 'எங்கே அவன்?' என்று கேட்டதும், 'ஆயேனா சாப்' என்ற அவர் கையைக் கட்டி சத்திரத்தைச் சுற்றி அவனை அழைத்துச் சென்றார். பின்னால் இருண்டு கிடந்த கட்டடத்தில், திமுதிமுவென்று சிப்பாய்கள் நின்றிருந்தனர்.

'அவிழ்த்து விடுங்க அவனை' என்றார் பேஸ்கார். ஒழுக ஒழுக விளக்கெண்ணை நனைந்த பந்தங்களைக் கொளுத்தி, இரண்டு மராட்டிய மல்லர்கள் வில்லியம்ஸ்ஸின் முகம் தெரியத் தூக்கிப் பிடித்தனர். லாஸரஸ் அசையாமல் வில்லியம்ஸைப் பார்த்தான். அவனுக்கு எஸ்தரையும், இவனையும் தெரியாது. ஏதோ ஒரு

சந்தர்ப்பத்தில் ஸ்டோன் துரை பங்களாவில் இவளையும் இவள் அப்பாவையும் பார்த்த ஞாபகம் மங்கலாக இருந்தது.

கையில் கத்தியுடன் அவள் மேஜையில் நின்ற நிற்பு அவன் கண்ணைப் பறித்துவிட்டது. உடனே, அவளை எடுத்துக் கொண்டுவிட்டான் லாசரஸ். ஒரு மராட்டிய கொத்தவால் சாவும், இத்தனை பேர் சாட்சியமும், மராட்டிய மோடி ரெக்கார்டுகளில் ஏற்றப்பட்டால் இவள் மராட்டிய அரசரது கல்யாண மஹால் அந்தப்புரத்துக்குத்தான் கொண்டு போகப்படுவாள் என்பது லாசரஸுக்குத் தெரியும்.

தஞ்சாவூர் சமஸ்தானத்தில் நடப்பது ரெட்டை ஆட்சி. பெயருக்குத் தான் மராட்டிய ராஜாக்கள் சிம்மாசனத்தில் உட்கார்ந்து இருக்கிறார்கள். வடக்கிருந்து துலுக்கர்கள் படையெடுப்பு எப்போதும் நேரலாம். ஆங்கிலேயர்கள் தங்களது ராஜாங்கத்தை இன்னும் சரியாக இங்கே வலுப்படுத்தவில்லை. ஜனங்கள் வெள்ளை அரசின் மேல் பூரணமாக நம்பிக்கை வைத்தால் அடிக்கடி நேரும் கொள்ளை, கொலை இவைகளினாலும், மராட்டிய அரசின் பக்கமே சார்ந்து இருக்கிறார்கள்.

தஞ்சை, புதுக்கோட்டை சமஸ்தானங்கள் இன்னும் பூரணமாக மராட்டிய அதிகாரத்தில் இல்லை. புதுக்கோட்டை கள்ளர்கள் வசம் இருந்தது. இந்தச் சூழ்நிலையின் பலமும், கைப்பொருளும், பொன்னும் பொருளும் உள்ளவர்கள் இஷ்டம் போல் தஞ்சாவூர் சமஸ்தானத்தை ஆட்டிப் படைத்தார்கள். மராட்டியர்கள் கோயில் என்றும் பூஜை என்றும் சொல்லிக்கொண்டு சூறையாடினார்கள்.

லாசரஸ் முழுக்க முழுக்க ஒரு கள்ளன். கண்ணந்தங்குடி அவனது பூர்வீகம். மேலக் கண்ணந்தங்குடி, கீழக் கண்ணந்தங்குடி இரண்டும் ஆங்கிலேயர் வசம்தான் இருந்தன. ஒரு ஆங்கிலேயப் பள்ளிக்கூடமும், தஞ்சாவூர் சமஸ்தானத்தின் முதல் கிறிஸ்தவச் சர்ச்சும் அங்குதான் கட்டப்பட்டன. அங்கிருந்து தயாரானவன் தான் லாசரஸ். ரெவரண்ட். சீ.எஃப். ஸ்வாட்ஸ் வாஷ் தமிழ்நாடு முழுவதும் ராஜாங்க காரியமாகச் சுற்றிக் கொண்டிருப்பார். அவருக்கு பாதுகாப்பிற்காகத் தேடியபோது, லாசரஸ் என்ற முரட்டு மனிதனை மராட்டிய வீரர்களிடம் இருந்து தெரிந்தெடுத்து அனுப்பப் பட்டான்.

சென்னை, தஞ்சாவூர், திருநெல்வேலி டயோசிசன்கள் என்றும் கிறிஸ்தவ இந்திய சபையைக் கட்ட முனைந்த ஸ்வாட்ஷ் ஐயர் பக்கத்தில் இருந்து பாதுகாத்தவன் லாசரஸ். எனவே, ஆங்கில அரசின் முக்கியமான உளவாளி யாகவும், ஒற்றனாகவும், அதேநேரத்தில் மராட்டிய அரசுக்கும் உளவாளியாக இருந்து வந்தான். இந்த ரகசியம் இரண்டு அரசுகளுக்குமே தெரியாது. தமிழ்நாடு முழுவதும் பல காரணங்களுக்காக, அரசர்களின் தேவைக்காக ஸ்வாட்ஷ் ஐயருடன் சஞ்சரிக்கும் லாசரஸ், மிகவும் சுதந்திரமாக பல விஷயங்களையும் கிரகித்துக் கொண்டிருப்பவன்.

நீண்ட காலமாக அவன் கல்யாணம் செய்துகொள்ள விரும்பவில்லை. ஏனென்று தெரியாது. இப்போது அவன் எஸ்தரைக் கல்யாணம் செய்யப் போகிறான். அவளை இரண்டாவது தடவை பார்த்தபோதே அவனுக்கு சரியான வீட்டு மிருகமாய் உழைப்பாள் என்று தெரிந்துகொண்டான். இடையில் சிக்கல் ஒன்றுதான்; வில்லியம்ஸ் என்ற இளைஞன். எஸ்தரைத் தன்னிடம் இருந்து இனி யாராலும் காப்பாற்ற முடியாது. வில்லியம்ஸுக்கு உயிர்ப்பிச்சை அளித்தாலே போதும்; அழுதுவிடுவான். மராட்டிய அரண்மனையில் ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்துவிட்டால் அவனும் எதிர்க்கப் போவதில்லை. அவள் கொஞ்சம் துடிப்பாள்; கொஞ்சம் அழுவாள்தான்.

நிரம்பப் பிடிவாதம் உள்ள பெண் எஸ்தர். ஒரு சரியான ஜாதிக் கள்ளச்சி. தனக்கென்று ஒரு முகாமை இவள் மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும் என்று தனக்குள் நீண்ட கணக்குகளை முன்னும்

பின்னுமாகக் கூட்டிக் கழித்துக் கொண்டிருந்தது, சாரட் வண்டியின் உள்ளறையில் சிக்கியிருந்த எஸ்தருக்கோ, அடிப்பட்டு அரை மயக்கத்தில் இருந்த வில்லியம்ஸுக்கோ தெரியாது.

'இஞ்ச பக்கத்துல யாராவது வைத்தியர் இருக்காங்களா? வரச்சொல்லு' என்றான் லாசரஸ் மிடுக்காக.

'ஏன், நம்ம சத்திரத்திலேயே இருக்காரே' என்றார் பேஷ்கார்.

'என்ன செய்யிறார்?'

'கொத்தவால் பிணத்தை பங்கீடு பண்ணிக்கிட்டு இருக்காரு'

'கொத்தவால் செத்தது வெளிய வந்தா நாம எல்லாரும் மாட்டிக்குவோம். அதனாலெ யாருக்கும் தெரியாம பொணத்த ஆத்துல எறியச் சொல்லுங்க. தடயம் ஒன்றும் ஆப்புடக் கூடாது. மேலே இருக்கிறவன் வெள்ளைக்காரத் தொரெ; தெரியுமுள்ள, கண்ணுல வெரல விட்டு நோண்டிருவான். சலவைக் கல்லெல்லாம் அரண்மனைக்குப் போயிகிட்டு இருக்கு. உம்ம பேர் என்ன? ராஜிராவ் பான்ஸ்லே தானே! எனக்கு ஞாபகம் இருக்கு. ராஜாகிட்ட பேசும்போது ஒனக்கு சாதகம் பண்ணுவேன்' என்று கூறியபடியே அவர் கையில் எதையோ வைத்தான். என்ன என்று கையை விரித்துப் பார்த்தார் பான்ஸ்லே பேஷ்கார்.

கையில் ஒளிவிட்டது ஒரு ஆப்ரிக்க வைரம். பேஷ்காருக்கு நீரோட்டம் தெரியும். ஒரு லட்சம் வராகனுக்கு மேல் அந்த வைரத்துக்கு மதிப்பு. பெண் சம்பந்தப்பட்ட விஷயம் அல்லவா, வெளியே தெரிந்தால்..? குடல் நடுங்கியது அவருக்கு. லாசரஸ் எமன் இந்த வைரத்தாலேயே கழுத்தை அறுத்துவிடுவான். அந்தப் பெண் அப்படிப் பெரிய விஷயம் அல்ல என்றாலும், வெளியே தெரிந்தால் அவள் பேரழகியாய் புகழ் அடைந்துவிடுவாள். ராஜாவின் கல்யாண மஹாலில் எத்தனை ஜாதிப் பெண்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த தீவினைக்கும் அஞ்சாதவன். அதுசரி இவளை இழுத்துக் கொண்டு வந்த வில்லி என்கிற இந்தப் பையனையும் கொண்டு போகிறானே அது எதற்காக ? பேஷ்காருக்கு மூளை குழம்பியது. பொண்ணா அவள், பயங்கரம். கண் இமைப் பொழுதில் ஒரு கொத்தவாலையை குத்தித் தள்ளிவிட்டாளே.

'பயப்படாதே வில்லியம்ஸ், உன்னை கொண்டு சேர்ப்பது என் வேலை' என்று கூறியபடி மருந்திட்டு கட்டப்பட்டு, வைத்தியரால் மருத்துவம் செய்யப்பட்ட நிலையில் கைத்தாங்கலாக அவளை அழைத்து வந்து, வெளியில் நின்ற சாரட் வண்டியில் குதிரை ஓட்டுகிற சாரதி உட்காரும் மெத்தையின் பக்கத்தில் உட்காரவைத்து, கீழே நின்றபடி, 'ஏய்..! மன்னார்குடிக்கு விடியிறதுக்கு முன்னால போய்ச் சேரணும்' என்றான். லாசரஸ். பின்னால் இருந்து கேட்ட கவாத்து சல்யூட், ஆங்கில மரியாதைகளை எல்லாம் கண்டுகொள்ளாமலேயே, கையை உயர்த்தி சாரட்டுப் படியின் மிதியடியை உள்ளே தள்ளிவிட்டு, வெளியே பாய முயற்சித்த எஸ்தரை உள்ளே தள்ளியபடி, அவள் சப்தம் வெளியில்

எழும்முன் உட்புறமாகச் சாத்தித் தாழிட்டுக்கொண்டான்.

வண்டி பாய்ந்து புறப்பட்டது, பத்து குதிரைகளும் வடுவூர் சாலையில் பறந்தன. மேலேயிருந்த வில்லியம்ஸுக்கு அவள் உள்ளே இருப்பது தெரியாது. உள்ளே இருக்கும் அவளுக்கும் அவன்மேலே இருப்பது தெரியாது. உள்ளே நுழைந்த லாசரஸ் நேரத்தை வீணாக்கவே இல்லை. அவளின் அலறல்கள் வெளியில் கேட்க முடியவில்லை. பிடிவாதம் வெகுநேரம் நீடிக்கவில்லை. குதிரைகளின் பாய்ச்சலோடு அவளது கூக்குரல்களும் ஒடுங்கிப் போயின. லாசரஸிற்கு நாளையைப் பற்றிய நம்பிக்கை இல்லை. எனவே அவளை, அவன் எதுவும் கேட்கவே இல்லை. அவன் இஷ்டம் போல், அவளை வலுவில் கொஞ்ச நேரத்திலேயே நிர்வாணமாக்கி விட்டான்.

குதிரைகள் தாளம் தப்பாமல் நாலுகால் பாய்ச்சலில் மன்னார்குடியை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்தன. ஒரு பொருளை விருப்பம் இன்றி பெறுவதிலும், பயமுறுத்திப் பணிய வைப்பதிலும், பயத்தில் நிறுத்தியே அடிமைப்படுத்தி விடுவதிலுமான லாசரஸின் அனுபவங்கள், அவளிடம் செல்லவில்லை. என்றாலும் வீழ்த்திவிட்டான். தழுவிவிட்டான்.

அவள், அந்த நீண்ட சாரட்டின் உட்புறத்திலேயே மூன்று இரவுகளைக் கழித்த பின்னரே மன்னார்குடிக்குள் அந்த சாரட் நுழைந்தது. காரணம், இராமநாதபுரத்தில் இருந்து வந்த மறவர் பட்டாளம் ஒன்று புதுக்கோட்டை வழியாகப் பட்டுக்கோட்டையைக் கடந்து, மன்னார்குடி வருவதாகத் தகவல் தெரிவிக்கப் பட்டதாலும், இந்த முப்பது மைல் தூரத்தில், எந்த இடத்திலும் பட்டாளம் அவர்களைக் கடக்கக் கூடும் என்ற பயத்தாலும், யாரிடமும் இவளை இழக்கக் கூடாது என்ற பிடிவாதத்துடனும், தோப்புகளிலும் துறவுகளிலும் வண்டியை மறைத்தும், சாரட்டை தேக்கி நிறுத்தியும் சாதுரியமாகப் பாப்பாஞ்சாவடி என்ற இடத்தில் பட்டாளம் அவர்களைக் கடந்து சென்றதும், புதுக்கோட்டை ரஸ்தாவில் இருந்து, மீண்டும் மன்னார்குடிக்குப் பக்கம் வெகுதூரம் பயணம் செய்து, ராஜரெத்தின வன்னியர் வீட்டின் தெருவில் கொண்டு வந்து நிறுத்தினான்.

வீட்டின் வாசலில் இறக்கி, 'வன்னியரே, இதோ உங்க காணாமப் போன, ஓடுகாலிப் பொண்ணு! இவளெ நான் என்னமோ செஞ்சிருக்க

முடியும், ஆனா, இவளெ பொண்ணு கேக்கிறதுக்காக, பரிசம் போடுறதுக்காகக் கொண்டு வந்திருக்கேன். என்னெ ஓங்களுக்குத் தெரியும். இவ எனக்கு வேணும். நீங்க சம்மதிச்சா, நான் தாலிகட்டுவேன்' என்றபோது எஸ்தர் அலறினாள்.

'வேண்டாம்பா, வேண்டாம், என்னெ விட்டுடுங்க என்னை இவன் என்ன செஞ்சாலும் சரி, நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்' என்று கதறிய போது, எதற்கும் அஞ்சாத ராஜரெத்தின வன்னியர், வீட்டின் வாசல் கதவுகளை அடைத்து மூடினார். இருட்டில், சாரட்டில் மயங்கிக் கிடந்த வில்லியை யாரும் அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. உள்ளேயிருந்து வெளியே வந்த லாசரஸ் மேல் ப்ரெஞ்சு ஷாம்பேய்ன் நெடி வீசியது. நீண்ட நேரமாயிற்று வீட்டுக்குள்ளிருந்து வெளியே வர, வீட்டின் உள்ளே ரகசியங்கள் இடம் மாறின.

லாஸரஸ் யாருக்கும் கிடைக்காத மாப்பிள்ளை என்று வீட்டுக்குள் எல்லோருமாய் ஒப்புக்கொண்டார்கள். பெண் போய் பரிசம் போட்டுவிட்டு வந்ததாகச் சொல்லிக்கொள்ளலாமே. ஒரு சிற்றப்பன் பிணமானது, அகஸ்த்மாத்தாய் நேர்ந்தது என்று சொல்லி விடத் தயார்தான். தப்பிப் பறந்த அவளை லாசரஸ் எப்படி மூன்று நாட்களாய் மிருகம் சேர்வது போல் சேர்ந்தான் என்பதையும், குரல்வளையை நெறித்தபடி அவள் மேலிருந்து சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் எஸ்தர் என்ற வானம்பாடியின் சிறகுகளை எப்படி நிர்வாணமாய் முறித்தான் என்பதையும் யாரும் கேட்கத் தயாராய் இல்லை. அத்தோடு, 'ஓடுகாலி! இவள் கால்களில் சங்கிலிபோட்டு கட்டவேண்டும்' என்று திட்டினார்கள். அடித்து நொறுக்கினார்கள்.

ஒரே வாரத்தில் கல்யாணமாம். லாசரஸ் கதறக் கதற அவளைக் அள்ளிக்கொண்டுவிட்டான் என்பது புரிந்து என்ன பயன். தன் உடம்பின் வஞ்சம் முதல்முறையாய் அவளுக்குப் புரிந்தபோது, அவள் பெண்ணின் பலவீனத்தில் விழுந்தாள். கால்களின் இடையில் நேர்ந்த அந்த பலவந்தத் திணிப்பில், வஞ்சத்தைப் புரிந்துகொண்டாள். ஆம்! இது இரு ஆணின் வஞ்சம். அவன் விரும்பினால் எவளையும் இப்படி நிர்மூலம் செய்யமுடியும். ஆனால், பெண் கொடுக்கிறவள், கொடுத்துத்தான் ஆகவேண்டும். பலவந்த மாய்ப் பிடுங்கினால்கூட மாட்டேன் என்று தப்ப முடியாது. இதைத்தான் பலவீனம் என்கிறார்களா? ஆ..! ஒவ்வொரு முறையும் தற்கொலை செய்து கொண்ட வேதனை, விரக்தி. வெட்டி வெட்டி இழுத்தது. லாஸரஸ்

விடவேயில்லை. என்ன அக்ரமம். பெண் மனுஷியில்லையா?

மூன்று நான்குமுறை அவனைக் கத்தியால் குத்த முயன்று, குத்தவும் கூடச் செய்தாள். முரண்டி முரண்டி தப்பவும் முனைந்தாள். பெண் என்றும் பாராது அவன் என்ன செய்தான் என்பதைச் சொல்லவே முடியாது.. அதைச் செய்தான். சாகடித்துக்கொண்டே, அந்த இருண்ட சாரட்டு வண்டிக்குள் அவளை உயிர்ப்பித்துக் கொண்டும் இருந்தான் என்பதை எப்படி வெட்கம் கெட்டு வெளியே சொல்லமுடியும்? கசக்கிப் பிழிந்து மூலையில் எறிந்த பின்னரே மன்னார்குடிக்கு கொண்டு வந்து சேர்த்தான்.

உடம்பு எத்தகைய வஞ்சம் செய்தது என்பதைக் கண்டு கலங்கிய பின்னரே, தன் உடம்பை எண்ணித் தானே அசிங்கப்பட்டுப் போனாள் எஸ்தர். யாரிடமும் இதைச் சொல்லமுடியாது. உடம்பு வேறு; மனம் வேறு என்பது இவர்களுக்கு மட்டுமல்ல, இந்தத் தலைமுறையில் யாருக்குமே புரியாது.

சொன்னபடியே பத்தே நாட்களில் ஊர்கூடித் திருமணம்! மன்னார்குடியில் ஊருக்கு வெளியே கிடைத்த துண்டு நிலத்தில் தான் சர்ச் கட்டப்பட இருந்தது. வைணவர்கள் ஊருக்குள் இடம் தர முடியாது என்று மறுத்துவிட்டார்கள். ஆனாலும், ஓயாத முயற்சியில் ஒரு ஓட்டு வில்லைக் கட்டடத்தில் கோயில் என்று பெயருக்கு கிறிஸ்தவர்கள் சேர்ந்தார்கள். பாதிரியாராய் ஜான்ஸ் துரை வந்தார். வந்த வாரமே ஜாதி கிறிஸ்தவர்கள் கோயிலுக்கு வரமாட்டோம் என்றார்கள். ஜான்ஸ் என்ன பண்ணுவார் பாவம், பள்ளு பறை பதினெட்டு ஜாதியும் சர்ச்சுக்குள்ள நொழையவேப் படாதுன்னு வெள்ளாளனுவளும் கள்ளனுவளும் கத்த ஆரம்பிச்சுட்டானுவ. என்ன பண்ணன்னு ஜான்ஸ்க்குத் தெரியல.

இஞ்ச மன்னார்குடியில் ஜாதி ரொம்ப! பைபிள்ளே என்னன்னா எல்லாரும் மோட்சம் போகலாம்ன்னு இருக்கு. சமாரியனுக்கும் கீழ் ஜாதிக்காரனுக்கும் ஏசு கிறிஸ்து சமமாத்தான் நீதி சொல்றாரு. ஆனா கள்ளனுவ பள்ளனுவள உடமாட்டானுவ. வெள்ளாளனுவ பறசனத்தெ உடமாட்டானுவ. ஜான்ஸ் தொரைக்கு எல்லாரும் ஒண்ணு., சமம்ங்கிறாரு! கோயிலுக்கு வார கீழ் ஜாதிக்காரன ஒதபிச்சு எடுக்கணும்ன்னு ஒரேமுட்டா கள்ளனுவளும், வெள்ளாள சனமுமா சேர்ந்து நிக்கிது. ஒரே ரகளை. அன்னைக்கித்தான், லாசரஸ் — எஸ்தர் கல்யாணம். மன்னார்குடியிலேயே வெக்கிறதுதான் ராஜரெத்னம் வன்னியருக்கு சரி. ஆனா, கண்ணந்தங்குடி பட்டாளம் ஒண்ணும் பெரிசா இல்லெங்கிறது எல்லாருக்கும் பெரிசாவே தெரிஞ்சு போச்சு.

அட! லாசரஸுக்கு ஆளே இல்லையா! மேள கள்ளனுவளுக்கும்

பறையனுவளுக்கும் ஏக தகறாராப் போச்சு! கல்யாண கும்பலே பள்ளன்வளும் வெள்ளாளனும்ன்னு வந்தான். ஊர்ல பெரிய மனுஷன், மார்ல சந்தனம் எல்லாஞ் சரிதான். தஞ்சாவூர் அரண்மனையில் இருந்து வந்த இருபது குதிரெ பூட்டின சாரட்டு பீட்டன் வண்டீல கல்யாண ஊர்கோலம் நடந்தது. வாண வேடிக்கெ, மத்தாப்பு சுத்துறது எல்லாம் ப்யாண்டு வாத்தியத்தோட தஞ்சாவூர் அரண்மனை செட்டோட க்ளார்நெட்டு, சாக்ஸப்போன், பைப்பு, வைலின் எல்லா லண்டன் ப்யாண்டு வாத்தியம்லாம் வந்து, பாடித் தள்ளுனுதுவ.

லாசரஸ் சொன்ன யாரும் கண்ணந்தங் குடியிலிருந்து வரலெ! மேலக் கண்ணந்தங்குடியில லாசரஸ் அப்பன் ஆயி யாருமில்லியாம். ஏதோ கொஞ்சம் ஒறமுறை எல்லாம் இருக்குதுவளாம். ஆனா அதுவளுக்கு திவானப் புடிக்கல்லியாம். எவனும் பொண்ணு குடுத்துருக்கலாமேன்னு கீழக் கண்ணந்தங்குடி ஆளுவ இப்பம் பேசுதுவ. முந்தியே சொல்லியிருந்தால்ல. யாரும் எதுவும் சமாதானம் சொல்ல முடியல்லெ! ஒவ்வொரு பூதமாக் கெளம்புது. ஒவ்வொருத்தர் ஒன்னொன்னாச் சொல்லும்போதும் ராஹேலம்மாவுக்குச் சாகலாம்ன்னு வந்தது. காலம்பர பொண்ணும் மாப்பிள்ளையும் தஞ்சாவூரு போவுது. 'என்னாடியிது அளுவெ' என்று கிழவிகள் கேட்டன.

வெளியில் சாரட் வண்டி அலங்காரமாய் நின்றிருந்தது. தலையிலிருந்து கால் வரையில் நகையைப் பூட்டி அடுக்கியிருந்தார்கள். கூந்தலைப் பின்னி, கூந்தல் விலகாமல் இருக்க உச்சி முதல் வரிசையாக எட்டு வைர ஜடை வில்லைகள்; ஒரு ஜடை வில்லைக்கும் இன்னொரு ஜடை வில்லைக்கும் இடையில் எட்டு எட்டு திருகுப் பூக்கள். மொத்தம் அறுபத்து நான்கு திருகுப் பூக்கள். அவ்வளவும் வைரம். ஜாக்கெட் இல்லாத உடம்பிலும், இரண்டு கைகளிலும், தோள்களிலும் அடுக்கு வங்கி, கைகளில் இருபத்தி ஐந்து ஜோடி வளையல்கள். இரண்டு திருகு வைர வளையல். முகம் என்று எடுத்துக்கொண்டால் மூக்கெல்லாம் வைரம். காதுமடல் எல்லாம் தங்கம். தட்டு, அரசிலை, வட்டம், புரி, மணி, சிற்பம் என்ற சின்னச் சின்ன விதமான நகைகள். எப்படித் திருப்பினாலும் எஸ்தரின் உடம்பு முழுவதும், பாதம் வரை கனம் கனமான நகைகள். போகும்போது முன் வீட்டில் ‘ஓ’வென்று ஓலம்.

போனால் எப்போது வருவாளோ? இதுதான் கடைசியோ? ஆண்டு அனுபவித்து சந்தோசப்பட்டிருந்தாலும், எஸ்தரின் அப்பாவும் அம்மாவும் குமுறி அழுதார்கள். வாசலில் ஊரேக் கூடியிருந்தது. அவன் ஒரு ஆங்கிலப் போர்த்தளபதியைப் போன்று ஆடை அணிகலன்களுடன் நின்றான். முன்னால் தெருக் கோடியில் பிராமணர்கள் பஞ்சாதி சொல்லிக்கொண்டிருந்தார்கள். தெருவில் நின்ற ஜனங்களுக்குக் கேலி பேசுவதற்கு வசதியாய் இருந்தது. சிறுபையன்கள் ‘ஓமகுண்டாயந அச்சிஸ்டாய நமஹ; சட்டி குண்டாயனமஹ, குண்டான் குண்டாயநம’ என்று கத்திக் கூப்பாடுபோட்டு பிராமணர்களைப் போல் தொந்தியைத் தடவி, கேலிசெய்து கொண்டிருந்தனர். உண்மையில் அந்த

ஜபகோஷத்திற்குக் காரணம் ராஜரெத்தின வன்னியர் தான்.

வன்னியர்கள் பிடிவாத குணம் கொண்டவர்கள். மனசு ஒப்பி கிறிஸ்தவர்களாக ஆனாலும்கூட, அவர்களுக்கும் திதி, நாள், நட்சத்திரம், ராசி, ராகுகாலம், எமகண்டம், ஜோசியம் எல்லாம் விட்டுப் போகவில்லை. சர்ச்சில் தாலிகட்டுவது என்றால்கூட, முதலில் வீட்டில் ரகசியமாக ஐயரை வரச்சொல்லி, காத்துகருப்பு எல்லாம் நீக்கி, கழிப்பு எல்லாம் கழித்து தாலியை ஐயர் கையில் வாங்காமல் பவுனை சட்டாங்கையில் கொடுக்கிற சாங்கியத்தை, ஐயர் கையால் பவுனை நெருப்பில் போடச் சொல்லி, நெருப்பில் இருந்து ஆசாரி, பவுனை எடுத்து தாலி செய்ய, அதன் பின் ஐயர் கையில் கொடுக்கச் சொல்லி கல்யாண மந்திரங்களை அங்கேயே ஓதச் சொல்லி, ரகசியமாக உள்வீட்டுப் புறையில் இதையெல்லாம் செய்து, அப்புறம் பாதிரியாரிடம் தாலி போய்ச் சேரும். அப்புறம், எஸ்தர் கழுத்துக்கு என்று இப்படி விதியாய் வந்து சேர்ந்தது இந்தத் தாலி.

ஒரே நாளில் அடியோடு மாறிப்போவோம் என்று அவளுக்குத் தெரியாது. கல்யாணம் நடந்த அந்த ஒரு நாளில் நடந்த கொலைகள், அடிதடி, கோயிலில் நடந்தக் குழப்பங்கள் வெள்ளாளனுங்களும், பறையன்களும் அடித்து மோதிக்கொண்டபோது குத்துப்பட்டு விழுந்த பறைப்பெண்கள்; சர்ச்சாக நின்ற அந்த ஓட்டு வில்லைக் கட்டடம், அதன் தூண்களோடு இடிந்து விழுந்தபோதும்கூட நிற்காத அவளது கல்யாணம் அவளை அடியோடு மாற்றிவிட்டது.

ஒவ்வொரு மனிதனும் தனக்குள் ஒரு உலகத்தை வைத்திருக்கிறான். ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் ஒரு இருட்டை ஒளித்து வைத்திருக்கிறாள். அது தன்னது, தனக்கு மட்டும் என்று பைத்தியம் போல் நம்பவும் செய்கிறாள். இருட்டு வெளிச்சம் ஆகும்போது, பெண்ணின் இருட்டு முன்னம் அப்படி ஒன்று இல்லை என்று தெரியவருகிறது. வெளியே பல உலகங்கள் இருந்தாலும் தனது என்று ஓர் உலகம், நொறுங்கி விழத்தான் தன் வசம் இருக்கிறது என்று எந்த ஆணுக்கும் புரியவரும்போது, அவன் பெண்ணை இழக்கிறான். ஒவ்வொருவரும், ஒவ்வொருவரையும் இழக்கிறார்கள் என்று எஸ்தருக்குத் தெரியாததால், அவள் எல்லாவற்றையும் இழந்தேப் போய்விட்டாள் என்று புரியவே இல்லை.

எஸ்தரின் தைரியம், துணிச்சல், யாருக்கும் அஞ்சாத அவளது பெண்மை, யாரும் அறியமுடியாத அவளது ஆங்கில புத்தகங்களின் ஞானம், அவள் கற்ற லத்தீனிய, கிரேக்க அறிவு, சங்கீத ஞானம், உலகம் முழுவதையும் விரும்பும் அவளது பரந்த நோக்கம், எல்லாம் சமம் சகோதரத்துவம் சமாதானம் என்ற ப்ரெஞ்சு சிந்தனை, அவள் விரும்பிய காதல், சகவாழ்வு எல்லாம் ஒரே நாளில் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொண்டன. யார் வேண்டுமானாலும் இங்கே அவளை என்ன வேண்டுமானாலும் அவள் பெற்றோரின் சம்மதத்தோடு எந்தக் கொடூரக் கிருத்தியத்திற்கும் அவளை ஆளாக்கலாம். வெளியில் இறங்கினால் எந்த நாயும், நரியும் அவளைக் கவ்வி, தெருவில் இழுத்துப் போகலாம்.

எந்த கர்த்தரையும், எந்த ஜெஹோவாவையும், எந்த கிருஷ்ண

மூர்த்தியையும், எந்த சைவ சிவசுந்தரத்தையும், எந்த ஜைன, பௌத்த, காளி, கூலி, மாடன், புலையன், பாவாடைராயன், வால்முனி, வங்கீசன், காட்டேரி, குரும்பன், குள்ளன், தெருசாமிகள் வரை யாரைக் கூப்பிட்டு அலறி அழுதாலும், இங்கிருந்து எல்லாம் எந்தக் காலத்திலும், எத்தனை ஆயிரம் கோடி வருடங்கள் கடந்தாலும் இதில் இருந்தெல்லாம் விடுதலையே கிடையாது. லாசரஸ் என்ற காட்டுப்பன்றி கிண்டிய கிழங்காக, உதிர்ந்துபோய், இன்று அவனுடனேயே இழுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்ட போதும் கூடத் தெரியத்தானில்லை.

இதெல்லாம் அவளுக்குத் தெரியாவிட்டாலும்கூட, அத்தனை பறைக் கூட்டத்திற்கும், பள்ள சனங்களுக்கும் குடியாசனங்களுக்கும் இடையில் சூரிக்கத்திகளால் வெட்டித் தள்ளிக்கொண்டபோது மனுஷ ரத்தம் அந்த சர்ச்சின் ஈரம் காயாத சுண்ணாம்புத் தரையில் கொட்டியதே அப்போதுதான் எஸ்தர் என்ற பறவையின் கால்களும் வெட்டப்பட்டன.

ராஜரெத்தினத்தின் ஆட்களும், மராட்டியத் தடியர்களும் கூட்டத்தை சுற்றி விலக்கிக்கொடுக்க, குறுக்கில் தடிகளை வீசியபடி வந்தனர். கோயிலுக்குள் அலையலையாக பிள்ளைக் குட்டிகளுடன் சாவுக்கும் அஞ்சாமல் பூந்துவரும் கிழ்ஜாதி சனங்கள் சுழன்றுவரும் வளைதடிகளை எதிர்பார்த்திருக்கவில்லை. குத்துப்பட்டு விழும் பள்ளப் பெண்களின் சரீரங்களை மியீத்துக்கொண்டு, நான்கு புறமும் ஆண்களும் பெண்களும் ஓடும்போது அவர்களை விரட்டிக் கொண்டுவரும் மராட்டிய சிப்பாய்கள் ஒருபுறம் வரிசையாய் வர, எதைப் பற்றியும் கவலைப்படாமல் அரசாங்க கொத்தவால்களும், மராட்டிய ஜாஹிர்தார்களும் ஆங்கிலக் கம்மீஸார்களும் நெருங்கி நிற்க, கத்திகளின் நீண்ட முனைகள் பந்தலிட, ஒருவிதமான அச்சத்துடன் நடுநடுங்கியபடி கோயிலுக்குள் ஏசுவை சனங்களுக்கு மறுதலித்த அந்த நேரத்தில், எஸ்தரின் மெல்லிய கழுத்தில் எட்டு பவுனில் கனமாக வைரங்கள் பூட்டிய கனத்த சங்கிலியால் விலங்காக்கினான் லாசரஸ்.

என்ன நடந்தது என்று தெரியாமலேயே, என்றென்றைக்குமாய் தஞ்சாவூர் சமஸ்தானத்தில் மூலை இருட்டு மண்டபத்துக்குள் கொண்டுபோகப்படும் வளர்ந்த மிருகம்போல் மூச்சுவிட்டுக் கொண்டு நின்றாள் எஸ்தர். கழுத்தில் கனமாகத் தொங்கும் தாலியுடன் பாதிரியாருக்கு முன் அந்த கொலைக்கூட்டத்தின் நடுவே ஆங்கிலேய திருமண முறைப்படி அவளை முத்தமிட, அவன் நெருங்கியபோது, அவர்கள் இருவரையும் சுற்றி எல்லோரது கண்களும் நெருங்க எஸ்தரை

ஆங்கில பாணியில் ஒரு பூவைத் தூக்குவதுபோல்; ஆங்கிலேய சாகஸத்துடன் தூக்கி, அதேநேரம் ஒரு கேவலமான தஞ்சாவூர் சமஸ்தானத்து கள்ளக்குடி அவசர வேகத்தோடு, முரட்டுத்தனமான நெறித்தலோடு எஸ்தரை முத்தமிட்டு அசிங்கமாகச் சிரித்தான் லாசரஸ்.

கல்யாண வீட்டின் பந்தலில் ஏராளமான பேர் சாப்பிட உட்காரந் திருந்தார்கள். பெரும்பாலும் ஆண்கள் யார் யாரென்று எஸ்தருக்குத் தெரியாது. ஏகக் கூட்டம். ஊர் இரண்டுபட்டுக் கிடந்த வேளையில், கல்யாணம் என்றாலும்கூட, ஒருத்தர் பாக்கிவிடாமல் சாப்பிட உட்காரந் திருந்தார்கள். கல்யாணப் பெண்ணாக, தூக்க முடியாத நகையும், சுமக்க முடியாத புடவையுமாய் வந்து சேர்ந்த எஸ்தருக்கு வீடு முழுவதும், முற்றத்தின் பந்தல் முழுவதும் ஆள் கூட்டம் மூச்சு முட்டியது. எங்கு பார்த்தாலும் வியர்வை நெடி. வீட்டுக்குள்ளே பெண்களின் ஆரவாரம். இவளைக் கொண்டுபோய் மாப்பிள்ளையுடன் ஊஞ்சலில் அமர்த்தி, பெண்கள் சுற்றிலுமாய் நின்று லாலி பாடினார்கள். ஊஞ்சல் முழுவதும் மல்லிகைக் கொத்துக்கள் தொங்கின.

வன்னியர் வீட்டுக் கல்யாணத்துக்குத் துரை வருவதாகச் சொல்லிக் கொண்டார்கள். கோயிலில் கலகம் என்பதால் துரைவரக் கொஞ்ச நேரமாகலாம் என்று அவர்கள் பேசிக்கொண்டபோது, எஸ்தருக்கு கால் பெருவிரலில் இருந்து உச்சிவரை விறுவிறுவென்று மின்சாரம் போல் ஏதோ ஒரு உணர்ச்சி கொடியோடி பரவியது. நீண்ட ரெண்டுக் கட்டில்கள் ஒன்றன்பின் ஒன்றாய் சாய்த்துப் போடப் பட்டிருந்தன. மணவறையாக கட்டுத்துணியில் பூக்கள் சுற்றி அலங்கரித்திருந்தார்கள். சரம்சரமாக தொங்கியப் பூக்கள் பட்டுத் துணிகளில் இணைத்து, மாலைபோல் தோரணமாய் சுற்றிலும் தொங்கவிடப் பட்டிருந்தன. ஆச்சரியமான அழகாய் இருந்தது. யார் வேலை என்று எஸ்தருக்கு ஆச்சரியமாய் விழிகள் அகன்று போயின. கள்ளர் வீட்டுக் கல்யாணம். முற்றத்தில் தாயாதிகள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். இலையில் கோழிக்கால் குத்தி கறிச் சோறிடவில்லை என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நீண்ட சாரட் வண்டி ஒன்று யாருடைய எதிர்ப்புமின்றி தாமதமாகவே வந்து நின்று எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. கருப்பு பட்டுத்துணியும் வெல்வெட் தலையணைகளும் புதைத்த யூனியன் ஜாக் கொடி பறக்கும் இருபது குதிரைகள் பூட்டிய மிகப் பெரிய பீட்டன் சாரட் அது. உள்ளிருந்து கறுப்புப் பட்டு மெத்தை தைத்தக் கதவுகள் திறந்துகொள்ள அதிலிருந்து இறங்கினான் ஸ்டோன் துரை. கறுநீலக் கண்கள் சுழல, சிவந்த நிற எடுப்பான பட்டு சூட்டும் அங்கிருந்த எல்லோரையும் அதிர வைத்தது. ஸ்டோன் துரை வருவான் என்று யாரும் எதிர்ப்பார்க்கவில்லை என்றாலும், எஸ்தர் துடிக்கத் துடிக்க பயந்துகொண்டுதான் சுற்றும் முற்றும் பார்க்கவேண்டி வந்தது.

மணப்பெண் கோலத்தில், ஒரு பெரிய பெண்ணாய், ஸ்டோன் துரைக்கு அவள் காட்சியளிப்பது அவளுக்கு ஆச்சர்யமாயும், பயமாயும் இருந்தது. நேரடியாக, வேறு எங்கும் போகாமல் ஸ்டோன் துரை அவள் அருகே வந்தான். ஒவ்வொரு வினாடியும் அவளுக்கு பயம் தரும் அனுபவமாகவே இருந்தது. ஸ்டோன் துரையால் பரபரப்பு இல்லாமல் மாப்பிள்ளை லாசரஸ் கைகளைப் பிடித்துக் குலுக்க முடிந்தது. அதேபோல் அவளை நோக்கி, அவன் கரங்கள் நீண்டபோது, அவளால் நடுக்கமில்லாமல் அவன் கைகளைப் பற்ற முடியவில்லை. நடுங்கும் கைகள் வழியே ஸ்டோன் துரையின் ஸ்பரிசம் அவளை உலுக்கியது. கையை இழுத்துக்கொள்ள அவள் முனைந்தபோது அவன் அந்தக் கைகளை லாசரஸ் கைகளில் சேர்த்துப்பிடித்துக் குலுக்கியபடி விடைபெற்றான் ஸ்டோன் துரை.

உள்ளேயிருந்து வந்த ராஹேலம்மாள் மிகுந்த வெட்கத்துடன்

ஸ்டோன்துரையை வணங்கியபடி, 'ஸ்தோத்திரம் துரைய்யா. எங்க வீட்டுக்கெல்லாம் கூட நீங்க வருவீங்கள்னு எங்களுக்கெல்லாம் தெரியாது' என்று ஸ்டோன் துரையைப் பார்த்துக் கூறியபடியே கையிலிருந்த பெரிய வெள்ளி தம்ளரை அவரை நோக்கி நீட்டினாள்.

'மெனி தேங்க்ஸ் ராஹேலம்மா. நீங்க ரொம்ப அழகா ஆயிட்டீங்க. யூ லுக்ஸ் ஸோஃபைன். இந்தப் பட்டுப்புடவை ரொம்ப ரொம்ப அபாரமா இருக்கு. ஈஸ் இட் காஸ்ட்லி?' என்றான். 'ஒன்னும் ரொம்ப இல்லை தொரை ஐநூறு ரூபாய் தான். தஞ்சாவூர்ல பட்டு நூல்க்காரத் தெருவிலிருந்து நெய்து வாங்கியாந்தது. உங்களுக்கு வேணும்னா சொல்லுங்க. ஒரு பத்து புடவையாய் நெய்து எடுக்கச் சொல்றேன். பதினெட்டு முழம் புடவை கட்றதுக்கு உங்கள் வீட்டுல யார் இருக்கா? நீங்களோ ஒண்டிக்கட்டை!' என்றாள். என்னை என்ன பண்ணச் சொல்றீங்க? என்றான் ஸ்டோன் துரை.

பந்தலுக்கு வெளியே சம்பந்திப் புறத்தார் சண்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. எப்போதும் சுற்றி ஊர் ஜனமே திரண்டிருந்தது. சுற்றி சுற்றி வந்து, பீட்டன் வண்டியைத் தொட்டுத் தடவிப் பார்த்து ஆச்சர்யப் பட்டுக் கொண்டிருந்தார்கள், மன்னார் புரத்து ஜனங்கள். கண்ணாடியால் செய்ததுபோல இருந்தது வண்டி. பளபளவென்று மூக்க மரத்தாலும், தேக்க மரத்தாலும் செய்து கருங்காலிச் சக்கைகளால் மூடி, ஆக்கர் கருப்பு வர்ணம் ஏற்றி, சலவைக்கல் மாதிரி மெருகு தேய்த்து மினுங்கியது. ஜனங்களுக்கு ஆச்சர்யம் தராமல் போகுமா?

ஒரு குதிரை பூட்டிய வண்டியே அங்கில்லை. கொஞ்சம் பெருந் தனக்காரர்கள் மேனா வண்டியிலும், (மேனா என்பது பல்லக்கையே வண்டியாகச் செய்தது) தூக்குப் பல்லக்கிலும் தான் போவார்கள். இருபது குதிரை பூட்டிய அரண்மனை போன்ற பீட்டன் சாரட் எப்போதாவது அரண்மனை அதிகாரிகள் மன்னர்புரத்துக்கு வரும் போதுதான் ஏகதேசம் ஜனங்களின் கண்ணில் படும். இங்கிலாந்திலிருந்து ராணி வரப்போவதாகச் சொல்லிக் கொண்டார்கள். அப்போது நூறு குதிரை பூட்டிய பீட்டன் வண்டி தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி வரை ஊர்கோலமாக வரும் என்றும் பேசிக்கொண்டார்கள். இருபது குதிரைகள் ஒரு பொருட்டல்ல என்று ஜனங்களுக்குத் தோன்றியது. கண்களில் பொங்கும் கண்ணீர் வெளியே வந்துவிடுமோ என்று தவித்தபடி சின்னஞ்சிறிய சீனத்துக் கைக்குட்டையால் கண்களை ஒற்றி ஒற்றிச் சமாளிக்கும் அவளை,

‘இவளது தைரியமெல்லாம் எங்கே போயிற்று?’ என்று வியப்பாகப் பார்த்துக்கொண்டு, நீண்ட சோபாவின் முற்றத்தில் உட்கார்ந்திருந்தான் ஸ்டோன் துரை.

அந்த வீடு மிகப் பெரிய வீடு. அந்த வன்னியர்கள் வாழ்ந்த வீடு ஐம்பது வருடத்திற்கு முந்திய கொத்தர்களும், தச்சர்களும், கொல்லர்களுமாய் பணி செய்து உருவாக்கிய குட்டி அரண்மனை. பெரும்பாலும் பெண்கள் சாம்ராஜ்யம் அது. ஆண்கள் வீட்டுக்குள்ளேயே வரமாட்டார்கள் என்பதால் திண்ணைக் கோபுரம் போல மூன்று அடுக்கில் பெரிது பெரிதாகக் கட்டப் பட்டிருந்தது. நாட்கணக்கில் சுண்ணாம்பும், மணலும் மெழுகுபோல் அரைத்து, சாந்து சுண்ணம் தயாரித்து, முட்டையின் வெள்ளைக் கருவை கடுக்காய் நீரில் தோய்த்தும் வர்ணமும் ஏற்றிய அந்தத் திண்ணைகள் கண்ணாடிபோல் மினுங்கின. இந்த வீட்டில்தான் எஸ்தர் துள்ளி விளையாடினாள்.

அவள் பெண்ணானாலும் அவள் அப்பாவுடனும், சிற்றப்பாவுடனும் இந்தத் திண்ணைகளில் தான் வாழ்ந்தாள். இப்போது அதையெல்லாம் நினைக்கும்போது அவளுக்குத் துக்கம் தொண்டையடைத்தது, இந்த திண்ணையெல்லாம் உறவுமுறை ஆட்கள் கிடந்து உருண்டார்கள். விருந்து தின்றும், தின்றது செரிக்க கௌலி கௌலியாக வெற்றிலை போட்டு மென்றும், பக்கத்தில் இருந்த பெரிய பெரிய பித்தளை எச்சில் காளாஞ்சிகளில் புகையிலை சேர்ந்த சிவந்த வெற்றிலைச் சாறை புளிச் புளிச்சென்று துப்பிக் கொண்டிருந்தார்கள். ஒருபக்கம் உள்ளேயிருந்து மலை மலையாய் நெய் புலவுச்சோற்றை கறியுடன் அள்ளிக்கொண்டு, அந்த வீட்டுக்குக் கொண்டு போய்க் கொண்டு இருந்த பக்கத்து வீட்டுப் பெண்கள்.

முற்றத்தில் வெல்வெட்டுத் திண்டில் சாய்ந்து, வெள்ளி தம்ளரில் இருந்த மாம்பழச் சாற்றைப் பருகியபடி இருக்கும் ஸ்டோன் துரையை ஓரக் கண்ணால் ரசித்தபடியே தங்களுக்குள் வியந்து, விருந்துப் பந்தலுக்குப் போய்க்கொண்டிருக்கும் காட்சியெல்லாம் பேதமை நிறைந்த முட்டாள் தனமாகவே எஸ்தருக்குத் தோன்றியது. அவளும் இப்படித்தான் ஸ்டோன் துரையை இழந்தாள். ஆசை வரும்போது, மூளை வேலை செய்வதே இல்லை. மூளை வேலை செய்யும்போது ஆசை பிறப்பதே இல்லை. இதுதான் நியதி. ஆயிரம்பேர் கூட்டத்துக்கு நடுவிலும் இதோ ஸ்டோன்துரை அவளையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறான். அடப்பாவி! நீ ஆம்பிளை தானே! இதோ இந்த லாசரஸ் தடியன் செய்த காரியத்தை நீ செய்திருக்க முடியாதா? யாருமில்லாத உன் பங்களாவுக்கு, ராஜாத்தோப்பு வழியே தினமும் வந்திருக்கிறேன். இதோ இந்த லாசரஸ் பயல் ஒரே நாளில், ஏன்? ஒரே நிமிடத்தில் என்னை உருவி எடுத்துக்கொண்டு விடவில்லையா? எல்லோருக்கும் மத்தியில் நான் 'வேண்டாம் வேண்டாம்' என்று கதறக் கதற எல்லார் சம்மதத்துடனும் இதோ என்னைத் தூக்கிக்கொண்டு ஓடப் போகிறானே. இதை நீ செய்திருக்க முடியாதா? நான் பெண்; பேதை; என் அப்பாவும் அம்மாவும் நீ என்னை எடுத்துக்கொண்டு ஓடினால் மாட்டேன் என்றா சொல்லியிருப்பார்கள். நான் வரமாட்டேன் என்று உன்னிடம் முரண்டு செய்ததே நீ என்னை வலுவில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதானே! இதைக் கூடவா உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை?

எல்லா சம்மதத்தையும் பெற்றுக்கொண்டா ஒரு பெண், ஒரு ஆணைக் கூட முடியும். 'முடியாது, முடியாது' என்றுதான் சொல்வோம்.

'முடியும், முடியும்' என்று சாதிக்க வேண்டாமா நீ?. நீ என்ன என்னை விரும்பவில்லையா? என் முரட்டுத் தனத்தை துடுக்கடக்கி என்னை இணைத்துக் கொள்ள உன்னால் முடியவில்லையா? எனக்கு அப்போது தெரியாமல் போயிற்று. உன் துடுக்கை அடக்கி, என்னை எனக்குள் அழுத்திக் கொண்டிருக்க வேண்டும். எல்லாம் அழிந்தது. என்னைப் பிடித்தபோதே நான் செத்திருக்கவேண்டும். இப்போதுமட்டும் என்ன, உயிருடனா இருக்கிறேன். செத்தாலும் விடமாட்டார்கள். பிணம் என்றாலும் விடமாட்டார்கள். பிணந்தின்னி என்றாலும் விடமாட்டார்கள்.

ஜாதிபேர் சொல்லி என்னைக் கொன்று, லாசரஸிடம் கொடுத்துவிட்டார்கள். உயிர் வேறானாலும் லாசரஸுக்கு உயிர் வேண்டாம். உடல் போதும். சொல்லப்போனால் கழுத்துக்குக் கீழேயுள்ள சதை போதும். எங்கோ பார்த்தபடி கண்களை உருட்டினாள் எஸ்தர். அந்த முற்றத்தின் மேல் விதானங்கள் எல்லாம் அடுக்கடுக்காய் மல்லிகைச் சரங்கள் தொங்கின. வாசலில் நின்ற பள்ளர்களையும், பறையர்களையும் வீட்டுக்குப் பின்னால் கஞ்சி ஊற்ற வரச் சொல்லிக் கத்திக் கொண்டிருந்தார் தாண்டவராயக் குச்சிராயர்.

வாசலில் தாயாதிச் சண்டைகள் ஓயவில்லை. அலங்க மலங்க விழித்த எஸ்தருக்கு அடி வயிற்றிலிருந்து அடக்கமாட்டாத வெறுப்பு ஒன்று சுழன்று எழுவதுபோல் குமட்டியது. கழுத்து நிறைய நகைகள் கழுத்தை இறுகச் சுற்றிய வைர அட்டிகை, பதக்கம் யாவும் அவளை இறுகப் பிணைத்து நெறுக்குவதுபோல் இருந்தது. இடுப்பில் இருந்த கல்லிழைத்த ஒட்டியாணம், பத்து விரல் மோதிரங்களும், நவரத்தினத் துண்டிகையும், தொடையிலிருந்து பாதம் வரை வெளியே தெரியாத ஆபரணங்களும், கால்களில் கொலுசும் தண்டையும், விரல்களில் மெட்டியும், நத்தைக்கூடும் அப்படியே எஸ்தரை அங்கம் அங்கமாக வைரத்தாலும் தங்கத்தாலும் செய்த கம்பி ஒன்றால் சுற்றி, பிதுங்கப்பிதுங்க அவளைக் கட்டி இறுக்குவதைப் போல உணர்ந்தாள்.

தலை நிறைய சுமந்து இருந்த பூச்சுமையும், கெட்டிக்கரை பட்டும், மேலும், அவளைக் கவிந்துமூடிய கனமான குறுக்கு மார்மாலையும், நெடுக்கு வடமான ரோஜாப்பூ ஹாரமும், கலந்து வீசிய அத்தர் புனுகும் சேர்த்த பன்னீர் மற்றும் ஜவ்வாது மணமும், லண்டன், பாரீஸ் செண்டுகளின் கமறலும் செருகிக் கொண்டன. 'குப்'பென்று உடலெங்கும் வியர்வை. உயர்ந்த விதானங்கள், அந்த வீட்டின்

உப்பரிகை தளங்கள் யாவும் அவள் கண்முன் தட்டமாலை ஆடின. குழறக் குழற ஏதோபேசிக் கொண்டு எழுந்த அவள், திடீரென்று நறுக்கப்பட்ட வாழைமரம் போல நெடுநெடு என்று சாய்ந்தாள்.

கோடை வெய்யில் தகிக்கத் தகிக்க கையில் தயிர் கலயத்துடன் கால்கள் பொசுங்க, தஞ்சாவூர் புழுதிச் செம்மண் கால்களில் நெய்யாய் ஒட்டி, நெருப்பாய் பறக்க எஸ்தர் நடந்துகொண்டிருக்கிறாளே இந்தப் பொட்டல் பூமிதான் மிஷன் தெரு. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பாளம் பாளமாய் வெடித்துக்கிடக்கும் இந்தப் பூமிதான் கிறிஸ்தவகளாகிப் போன கள்ளக்குடிகள் வந்து ஒதுங்கிய இடம். சரபோஜி நாஜாவும், மராட்டிய ராஜாக்களும், கிறிஸ்தவ மிஷினரிகள் மேல் ஏனோ வகித்த பிரியத்தால் இந்த பொட்டல் பூமி உருவாகிற்று.

எஸ்தர் இங்கே வந்தபோது, இங்கிருந்த தைக்கால் மேட்டையும், அங்கிருந்த இடிந்த மசூதியையும், புறாக் கூடுகளையும், மேட்டில் இருந்த மிகப்பெரிய பாசிபடிந்த குளத்தையும், பார்த்து வியந்துபோனாள். மனித வாசனையே இல்லாத இந்த இடத்தில் இவ்வளவு பெரிய குளமும், சதுப்பு நிலமும், மூங்கில் காடும் அவளுக்குப் பயத்தைத் தந்தன.

குளத்தின் மேல் கரையில் தான், ரெவரண்ட் சி.எஃப் ஸ்வாட்ஸ் என்ற அந்த பயங்கர மனிதன் லாசரஸுக்கு வேலை ஏற்பாடு செய்திருந்தான். இந்தக் குளக்கரையில் தான் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை ஆரம்பமாக இருந்தது. பெரிய பெரிய இலுப்பைத் தோப்புகள், மூங்கில் காடுகள் சூழ்ந்திருந்தாலும் அந்த இடம் மட்டும் பொட்டல் பூமியாக, செம்மண் திடலாக ஆச்சர்யத்தோடு இருந்தது. முதன் முதலில் அங்கு வந்து இறங்கிய போது அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. நடுவில் இருந்த அந்த பாசிக்குளம் ஓர் ஆச்சர்யமான இரகசியத்தை அடக்கி வைத்திருந்தது என்பது மட்டும் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அவளை அங்குக் கொண்டுவந்து சேர்த்த லாசரஸ் பைத்தியக்காரனா? லாசரஸை அந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்த ஸ்வாட்ஸ் பாதிரியார் பைத்தியக்காரனா? என்று எஸ்தருக்குத் தெரியவில்லை.

இந்த பதினைந்து ஆண்டுகளில் அந்தப் பொட்டல் பிரதேசத்தை மிஷன் தெரு என்று சொல்ல ஆரம்பித்திருந்தார்கள் ஜனங்கள். ஆனால் அப்பொழுது மிஷன் என்று ஒன்று உண்டாகவே இல்லை.

தூரத்தில் சரபோஜி ராஜாவின் கோட்டை தெரிந்தது. இது மேட்டுப் பிரதேசம் என்று அழைக்கப்பட்டது என்பதெல்லாம் எஸ்தருக்குத் தெரியாது. அவளுக்கு எதுதான் தெரிந்தது. ஒன்றும் தெரியாமல் தான் அவள் இங்கிலீஷ் படித்தாள். கண்ணந்தங்குடி வரைக்கும் சென்று பூலோகமும் வரலாறும் படித்தாள். சேனீஸ் மிஷனரியான ஜோன்ஸிடம் பைபிலும் படித்தாள். இதெல்லாம் இப்பொழுது உச்சிவெய்யிலில் தயிரு வாங்கக் கோட்டைக்கு வெளியேயிருந்து சோலைகளையும், குளங்களையும், வாய்க்கால்களையும் தாண்டி மனிதர்கள் வாழக்கூடிய சேரிகளையும், குடிசைப் பகுதிகளையும் குறுக்கில் கடந்து தஞ்சாவூருக்குள் நுழைந்து இந்தப் பொட்டல் பிரதேசத்துக்குத் திரும்பி வரவேண்டும்.

இந்தப் பதினைந்து வருடங்களில் எஸ்தர் எப்படி மாறிப்போனாள். ஒரு பஞ்சை பனாதையாய் ஊருக்கு வெளியே கிறிஸ்தவர்களாகிப் போன கீழ் ஜாதிக்காரர்களும், பள்ளர், பறையர் வாழ்ந்த சேரிகள், கிறிஸ்தவ சேரிகளாய் மாறிக்கொண்டிருப்பதையும், எஸ்தர் அவர்களுக்கு நடுவில் பழகி, கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களில் அவளுக்குள்ள அருவெறுப்பு, கஷ்டம் எல்லாவற்றையும் மறந்துபோனாள்.

லாசரஸ் ஒரு பயங்கரமான, விசித்திரமான மிருகம் என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் அவனைக் கல்யாணம் செய்துகொண்டாள். நாட்கணக்கில் அவன் வீட்டுக்கு வருவதில்லை. அவன் வருவதில்லையே என்று எஸ்தர் கேட்பதே இல்லை. அவன் அப்படி இருப்பதை அவள் அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ சொல்லி அனுப்புவது இல்லை. அவள் அப்பா வன்னியர் கூப்பிட்டு அனுப்பிய போதெல்லாம் அவள் போவதே இல்லை. அவள் அம்மா ராஹேல் அத்தைமார்களுடன் பலமுறை வந்து, கெஞ்சிக் கூத்தாடி கூப்பிட்டும் அவள் போவதைப் பற்றி நினைக்கக் கூட இல்லை.

அவர்கள் அழுதார்கள். புலம்பினார்கள். எல்லோருமாய்ச் சென்று லாசரஸிடம் முறையிட்டார்கள். ஒன்றும் நடக்கவில்லை அப்பொழுதும் அவள் மௌனமாகவே எதிர்த்தாள் அவள் பேச்சு யாருக்கும் புரியப்போவதில்லை. அவள் நடவடிக்கைகள் யாராலும் தடுக்கப்பட முடியாதவை, மிஞ்சிப் போனால் அவர்கள் எல்லோருமாக அவளைத் துன்புறுத்துவார்கள். லாசரஸ் தினமும் அவளை அடித்து நொறுக்குகிறான். அவன் இரட்டை மனிதன். பேச்சு, பழக்கம்

எல்லாவற்றிலும் இரட்டை தன்மை. பகலில் ஒருமாதிரி, இரவில் ஒரு மாதிரி; வீட்டில் ஒருமாதிரி, வெளியில் ஒருமாதிரி. அவனுக்கு இருக்கும் செல்வாக்கிற்கு ஒரு மாளிகையில், தஞ்சாவூர் அரண்மனைக்குள் வாழலாம். ஆனால் அவன் ஒரு ரகசியமான வாழ்க்கையில், ரகசியமான மனிதனாய் வாழ்ந்து கொண்டிருந்தான்.

எஸ்தருக்கு அதைப்பற்றிக் கவலைகள் எதுவும் இல்லை. அவன் வராமலே இருந்த நேரங்கள் அவளுக்கு சமாதானமான நேரங்களாய் கூட தோன்ற முடியாதபடி அவளை நிர்க்கதியாய் விட்டிருந்தான் லாசரஸ். அந்த இடத்தில்தான் கிறிஸ்தவர்களுக்கான ஆலயம் கட்டப்பட இருந்தது. கட்டுமான பணியில் லாசரஸுக்கு என்ன வேலை என்று யார்க்கும் தெரியாது. அரண்மனை உத்தியோகம் என்று பொதுவாய்ச் சொல்வார்களே தவிர, அரண்மனையில் அவன் என்ன செய்து கொண்டிருந்தான் என்பது புரியா விஷயம். அதைப்பற்றி எஸ்தர் கவலைப்படவே இல்லை. கல்யாணம் நடந்த அன்றே இதை அவள் தீர்மானித்துக் கொண்டாள் என்றுதான் சொல்லவேண்டும்.

அந்தச் சிறிய வீடும், சுற்றிலும் உள்ளமூங்கில் காடுகளும், சோலைகளும், தூரத்தில் தெரியும் தஞ்சாவூர் மராட்டிய அரண்மனைச் சுவரும், கீழவாசல் ஸ்தூலமும் மேலே தெரியும் பீரங்கி மேடும், பீரங்கியின் வாயும் இங்கிருந்தே தெரியும். இவைகள் மட்டும் தான் எஸ்தரின் ஆறுதல்கள். காலை எழுந்ததும், இந்தக் கோட்டைச் சுவர் மீதுதான் கண்விழிக்க வேண்டும். எத்தனை தூரத்தில் தெரியும் இந்தச் சுவர்கள்தான் எத்தனை கனமானவை. கருங்கல் என்பது, மருந்துக்குக் கூட கிடைக்காத இந்த தஞ்சாவூர் சீமையில், இத்தனை பெரிய கோட்டையை செம்பாரங்கற்கள் கொண்டு கட்டிய ஆச்சர்யத்தை அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

நூற்று இருபது அடி உயரம் கொண்ட இந்தக் கோட்டை, பதினோரு வாயில்கள் கொண்ட இந்தக் கோட்டை, இதன் சுற்று மதில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் என்ற இரட்டை அடுக்குச் சுவர் கொண்ட கோயில் எல்லாம் எஸ்தருக்கு ஆனந்தமான அனுபவத்தைத் தருபவை. கல்யாணம் செய்துகொண்ட பின்னர் அவளுக்கிருந்த ஒரே சந்தோசம், எப்போதும் குறையாத நாளுக்கு நாள் பெருகிவருகிற மகிழ்ச்சி, இந்த உயிரற்ற சுவர்களில்தான் அடங்கிக் கிடந்தது என்பதை அவளாளேயே நம்ப முடியவில்லை.

லாசரஸ் வரும்போதெல்லாம் அவளால் எங்கும் ஓட முடியாது, அவனிடமிருந்து தப்பிவிடமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாக அவளைக் கூறுபோட்டு அவன் சாப்பிடுவதுபோல் அந்தத் தனிமை அவளைபிளந்து தள்ளும். அவன் எதற்காக அவளைக் கல்யாணம் செய்துகொண்டானோ அதற்காக மட்டுமே அவளை வைத்திருந்தான். கோட்டைக்குள் அவன் போனால் மீண்டு வர எத்தனை நாளாகும் என்று அவளாலேயே சொல்ல முடியாது. வரும் நேரமெல்லாம் அவளை உயிரற்றுப் போக வைத்துவிடுவான். பிணத்திடம் உறவுகொள்ளும் ஒரு மனிதன் அவன்.

அந்தச் சின்னவீடு முழுவதும், முன்வந்து நுழைந்தவுடன் எல்லாக் கதவுகளும் அடைத்துக்கொள்ளும். வெளியில் கட்டப்பட்டிருக்கிற குதிரைகள் பசியில் கனைக்கும். அவள் வளர்க்கிற புறாக்கள் சிறகடிக்கும். மரச் சட்டங்களில் தொங்கும் வளையல்களில் கிளிகள் எஸ்தருக்காக கீச் கீச் என்று ஓசையெழுப்பும். பூனைக் குட்டிகளும், கின்னிக்கோழிகளும் ஒன்றையொன்று பார்த்துச் சீறும். வான்கோழிகளின் நீண்டகெக்கலி உள்ளே அவனுடன் பகலை இரவாக்கி, இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கும் உயிரற்ற எஸ்தரை ஒன்றுமே செய்யாது.

இந்த வீட்டுக்கு வேலைக்காரர்கள் கிடையாது. துணையென யாரும் இருக்கக் கூடாது. அந்தப் பொட்டல் பிரதேசத்தில் காவல் நிலையாக இருந்தவள் எஸ்தர் மட்டுமே. வேலையென அவளுக்கு ஒன்றும் இருக்கக் கூடாது. அவளே சமைத்து, அவள் மட்டும் தின்ன வேண்டும். யாருடனும் அவள் புழங்கக் கூடாது, எவருடனும் அவள் பேசக்கூடாது.

தப்பித்தவறி எங்காவது, யாருடனாவது அவள் பேசியதை பார்த்தாலோ லாசரஸ் அவளை அடித்து நொறுக்குவான்.

எங்கு வேண்டுமானாலும், எந்த இடமானாலும் அவனுக்குக் கவலையில்லை. அவளைத் துன்புறுத்தவும், இம்சிக்கவும் அவனுக்குக் காரணமே வேண்டியதில்லை. ஏன் அடிக்கிறான்? ஏன் அறைகிறான்? ஏன் கால்களில் போட்டு மிதிக்கிறான் என்று அவள் கேட்டவளே அல்ல.

அவன் வராவிட்டால், அவள் தூங்கிக்கொண்டே இருப்பாள். வீட்டின் கதவுகள் இரவு பகலாகத் திறந்து கிடக்கும். மாடு, கின்னிக்கோழிகள், வான்கோழிகள், நாய், பூனை இன்னும் பேர் தெரியாத ஜந்துக்களுட்பட எல்லாம் அந்த வீட்டுக்குள் மேயும். எத்தனைக்கு எத்தனை அவள் படித்து, நாகரிகமாய், நாசூக்காய், அழகாய், அற்புதமாய், அபூர்வமாய் இருந்தாளோ அதற்கு நேர் எதிராய் இருண்டு கிடந்த அந்த வீட்டின் புழுதியின் நடுவே, அசுத்தமான, அசிங்கமான, அலங்கோலமான முறையில் சுருண்டு கிடந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

ஆச்சர்யமான அவள் அழகு தூர்ந்துபோய், ஒட்டடை அடைந்து, இடிந்து சிதிலமாகிப் போன குட்டிச் சுவரான வீடுபோல் அவளே அவளை இடித்துத் தள்ளியிருந்தாள். லாசரஸ் வந்தால் ,அவனுக்கு மிதித்து உதைப்பதற்குக் காரனமே வேண்டாம் என்றாலும் நிறைய இப்படி காரணங்களை உண்டாக்கி கொஞ்சம் கொஞ்சமாக அவளை நிர்மூலமாக ஆக்கிக் கொண்டி ருந்தான். அதற்காகத் தானே அவளும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

எங்கு பார்த்தாலும் கோழிப்பீ நாற்றம். அவ்வப்போது நாய்களும், பூனைகளும் அங்கிருந்த நாற்காலி மேசைகளில் ஏறி அமர்ந்துகொண்டும், திரிந்துகொண்டுமிருப்பதை அமைதியாகப் பார்த்துக் கொண்டும், அதைப்பற்றி எந்தக் கவலையு மில்லாமல் இருக்கும் போதுதான் லாசரஸின் குதிரைகளின் குழம்பொலி கேட்கும். நன்றாக இன்னும் சுருண்டு படுத்துக்கொண்டு அவன் அடி உதைகளில் இன்னும் சிறிது நேரத்தில் இற்று விழப்போகும் சந்தோஷம், அதை எதிர்ப்பார்த்து அசையாமல் கிடப்பதில் உள்ள நிம்மதி, வேறு எதிலும் அவளுக்குக் கிடைப்பதில்லை.

லாசரஸ் இந்த நுண்மைகளை எல்லாம் தெரிந்துக் கொண்டவன் இல்லை. அவன் அரண்மனையில் முக்கியமானவன். அரண்மனையில்

உள்ள கில்லேதார்களும், சுபேதார்களும், பேஷ்கார்களும், ஜாகிர்தார்களும் அவனுக்குள் அவனுக்குள் அடக்கம். ஆங்கிலேய கலெக்டர்களும், சார்ஜீக்களும், கவர்னர்களும் அவன் பேச்சைத் தட்ட முடியாது. இவர்கள் போக, மராட்டிய இராஜ தந்திரிகளும், பிராமணப் பண்டிதர்களும், கிறிஸ்தவ பாதிரிமார்களும் அவனை எப்போதும் எதிர்ப்பார்த்தார்கள்.

கோட்டைக்கு வெளியே அவனுக்கொரு அந்தப்புரம் இருந்தது, அது வெறும் அந்தப்புரம் மட்டும் என்று யாருக்கும் தெரியாது. கோட்டைக்கு வெளியே அவனுக்கொரு குடும்பம் இருக்கிறது என்று மட்டும்தான் எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. அது ஒருவிதமான மல்யுத்தம் மாதிரி நடந்துகொண்டிருந்தது.

வந்து நுழைந்ததும் நீண்ட அவளது தலைமுடியைத் லாவிப் பிடிப்பான். முதுகிலும் மார்பிலுமாக மாறி மாறி அறைவான். ஒரு சிறிய சத்தம் இல்லாமல் தலையைப் பிடித்து சுவற்றில் மோதுவான். நங்கு நங்கென்று அவள் முதுகில் மிதிப்பான். தரதரவென்று இழுத்து கீழே உருட்டி, சுவற்றில் மாட்டியிருக்கும் நீண்ட பிரம்பை எடுத்து குறுக்கும் மறுக்குமாக அடித்து நொறுக்குவான். ஒரு சத்தம் ஒரு விம்மல் ஒரு முணகல் கூட எஸ்தரிடம் இருந்து எழும்பாது.

இத்தனைக் கொடூரமாக அவளைத் துவைத்து எடுத்த பின்னால் அவளைப் படுக்கைக்கு இழுத்துச் செல்லும்போது, வரிவரியாக உடம்பெல்லாம் சிவப்புக் கோடுகளைப் போட்டுக்கொண்ட பின்னர் அவன், அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக நிர்வாணப்படுத்தி மூச்சு விடாமல் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போது, உடம்பெல்லாம் உஷ்ணம் பறக்க வியர்த்து வடியும் நிர்வாண உடலை, இன்னும் கொஞ்சம் தோளில் மிதிக்க மாட்டானா? இன்னும் கொஞ்சம் உதடு கிழியாதா? கை ஒடியாதா? மண்டை உருளாதா? என்று யோசிக்கும் அவளைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப் படாமல் மூலை இருட்டுக்குக் கொண்டு போகும்போதுதான் பயப்படுவாள். இப்போது அந்தப் பயமும் இல்லை. அடுத்தடுத்து அவளை என்ன செய்யப்போகிறான் என்பதுகூட அவளுக்கு மனப்பாடம்.



தரையில் விடாமல், இடுப்பில் வைத்தே வளர்த்த அம்மா; கதைசொல்லி பாடல்களும், கீர்த்தனைகளும் கற்றுக்கொடுத்து அவளை ரசனை மிகுந்த பெண்ணாய், அழகான விஷயங்களில் முதன்மையான ருசிகளிலும், ஆச்சர்யமான கலையுணர்விலும் வளப்படுத்திய அவளது ஆங்கில ஆசிரியர்கள், அவளை முழுக்க முழுக்க இன்றுவரை உண்டாக்கிய பைபிள் படிப்பு அனைத்தும் லாசரஸுடன் புதைந்து போயும் கூட இன்னும் உயிர் விலகாத ஆச்சர்யம்; இன்னும் உணர்வு சாகாத விந்தை; இன்னும் எதிர்த்து விடாத அவளது சகிப்பு இவை எதுவும் கூட அவளுக்கு ஆச்சர்யமாக இல்லை. இப்போதும்கூட தப்பி ஓட அவள் விரும்பவில்லை. இத்தனைக்கும் அவள் உடம்புகூட அவளுக்கு வஞ்சனையே செய்தது.

லாசரஸ் அவளை எந்த நிலையிலும் விடாது தொடர்ந்தான். எந்த நேரத்தையும் வீணாக்காது, அவளைப் பிள்ளைப் பெற வைத்துக் கொண்டிருந்தான். அதுதான் எஸ்தருக்கு புரியவே இல்லை. ஒரு பெண்ணின் அடிப்படை இதுதான். அவள் மண் போன்றவள். அதற்கு விருப்பு, வெறுப்பு இல்லை. எதை நட்டாலும் காலமானால் விளைய வேண்டியதுதான். விதையின் ஜாதி, இனம் இவைகளைப் பற்றிக் கவலையில்லை. மண்ணில் விளைவது ஒன்றே விதி. முழு வெறுப்பையும் கூட அவன் பயன்படுத்திக் கொள்கிறான்.

அவளுடன், அவன் பேசுவதே இல்லை. பேச்சுக்கு லாசரஸிடம் இடம் இல்லை. அவன், அவள் சம்மதத்தை எதிர்ப்பார்த்தவனில்லை. இந்தப் பதினைந்து வருடங்களில் ஏறத்தாழ பத்துப் பிரசவங்களை அவள் கடந்தாக வேண்டியிருந்தது. அவள் நினைத்தால் ஓடிப்போயிருக்கலாம்.

லாசரஸ் யார் என்று அவளுக்குத் தெரியும். அவள் அப்பாவும், அம்மாவும் அவளைப் பிடித்துக்கொண்டு வந்து அவனிடம் சேர்ப்பார்கள். ஒரு சமூகம் முழுவதுமே அவளைத் தனியேவிடத் தயாராக இல்லை. அத்தனை படித்தும் அது அவளுக்கு ஒட்டவில்லை. கிறிஸ்தவளாகிவிட்ட அவள், உண்மையில் கிறிஸ்தவப் பெண்ணா? அவள்தான் கிறிஸ்தவளா?

சோலைகள் நடுவில் எழுந்து நின்ற அந்த மேட்டுத் தெருவும், அந்த மூங்கில் காடுகளும் அவளுக்குத் தூரத்தில் தெரியும் கோட்டைச் சுவரும் தான் ஆறுதல். மூன்று குழந்தைகள்தான் அவளுக்கு மீதி. அந்தக் குழந்தை களும் வளர்ந்தன. அவள் அவர்களுக்குப் பாலூட்டுகிறதோடு சரி. வேறு வகையில் தாய் என்று சொல்ல முடியாது. இப்போதெல்லாம் லாசரஸ் நன்றாகக் குடித்துவிட்டுத்தான் அங்கே வருவான். எப்போதும் ஒரே மாதிரியாக அடித்துத் துவைக்கும் அப்பனைத் தான் அந்தக் குழந்தைகள் கண்டன.

மூத்தவள் பெண்; அப்பனை உரித்துக்கொண்டு பிறந்த குட்டிப்பிசாசு. ரூபி என்று பெயர். இரண்டாவது ஜான் என்று பெயர் கொண்ட விகாரமான ஆண் குழந்தை. மூன்றாவதும் பையன். லூக்ஸ் என்று பெயர். கருத்து, இருண்ட ஒரு குழந்தை அவன். ஒரு குழந்தையாகிலும் எஸ்தரால் நேசிக்கப்பட முடியாமல் போனதற்கு அந்தக் குழந்தைகளே காரணம். எப்போதும் தூங்கிப் புரண்டு கிடக்கும் அம்மாவை, எப்போதும் வரும்போதெல்லாம் அடித்து நொறுக்கி, மூலைக்கு இழுத்துச் சென்று அவர்கள் கண்முன்னேயே நிர்வாணப்படுத்துகிற அப்பா, சர்வசதா காலமும் குழந்தைகளைப் பிரம்பினால் அடித்து, அடித்துத் தோலை உரிக்கிற இரு முரடன். இவன், ஏன்தான் வீட்டுக்கு வருகிறானோ என்று ஒவ்வொரு நிமிஷமும் பயத்தில் அலறும் குழந்தைகள்.

இந்தச் சூழலில் சுற்றித் திரியும் கோழிகள், பயத்தில் நாலு புறங்களிலும் பறக்கும் புறாக்கள், விட்டுக்குள்ளும், விட்டங்களின் கூரைகளிலும் உட்கார்ந்து சிரமம் தீர்க்கும் மணிப்புறாக்கள், கிளிகள், அவ்வப்போது கழுநீருக்காக ம்மா.. ம்மா.. என்று கத்தும் பசுவின் ஓலம். தட்டுகளில் சோற்றை எதிர்ப்பார்க்கும் நாய்கள் என்று இவற்றைக் கொண்ட அந்த வீடுதான், பின்னாளில் மிஷன் தெருவாக நீண்டு போகப்போகும் பாதையில் நீண்டு இருந்தது. குதிரை லாயமும், மாட்டுக் கொட்டகையும், புறா, கோழி, கின்னிக்கோழி, வான்கோழி எல்லாம்

அடையும் கூடுகளுடனும், வீட்டைச் சுற்றிலும் மண்டிய பசுமையான நீண்ட கோரைப் புற்கள் ஓங்கி வளர்ந்துகொண்டிருந்தன. அதிகமாக மழை பெய்யும்போது, குளத்தின் நீர் வீட்டின் வாசலை தொட்டுவிடும்.

மழை என்றால் தொடந்து நாற்பதுநாள், அறுபது நாள் என்று தொடர்ந்து பெய்யும் நாட்கள் அவை. ஊர்முழுவதும் கோட்டைச் சுவர்களின் மேலும் மழை வழியும். கோட்டைச் சுவரை நாலாபுறமும் வெள்ளக் காடாக்கும். அகழி எது, தரை எது, கரை எது என்று தெரியாத வண்ணம் தண்ணீர் கோட்டையைத் தவிர மற்ற எல்லா இடங்களையும் மூழ்கடித்துவிடும்.

கோட்டைக்கு வெளியே பத்துப் பதினைந்து மைல்களுக்கு அப்பால் ஓடிக்கொண்டிருக்கும் காவிரியும் நிரம்பி வழியும். காவிரியின் சீற்றம் பதினான்கு மைல்களிலும், சுற்றுப்புறங்களிலும் தெரியும். எஸ்தர், தன்னந்தனியாய் அந்தக் காரை வீட்டில் சுருண்டு கிடக்கிறாள். மூத்தவளுக்கு பதினைந்து வயது நெருங்கியது. ஆனாலும், மூங்கில் தோப்புகளில் சுற்றிக் கொண்டிருந்தாள். மழை குழந்தைகளுக்கு மிகவும் இன்பம். ரூபியும், ஜானும், லூக்ஸும் எந்த நேரமும் தண்ணீரிலேயே ஊறிக் கிடப்பார்கள். எங்கோ தூரத்தில் மன்னார்குடி என்ற பிரதேசம் பற்றி இவர்கள் யாருக்கும் தெரியாது. போலவே அவர்களுக்கும் இவர்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் அப்பாவைத் தேடிப் போவதில்லை. ஏனென்றால், அவன் அவர்களுக்கு வேண்டாம்.

அகழிகளில் நீர் வற்றி, கோடை திரும்பியபோது, அகழியிலிருந்து உஷ்ணம் தாங்காமல் முதலைகள் கரை ஏறி, புரண்டு கிடந்தன. தவளைகள் மீண்டும் சப்தம் இட ஆரம்பித்தபோது, மீண்டும் மழை பொழிந்தது. மழை பெய்யப் பெய்ய, கோடை தேய்ந்தது. லாசரஸ், அரண்மனைக்குள் எங்கே இருப்பான் என்ற கற்பனை என்றைக்குமே அவளுக்கு வந்ததில்லை. பைபிளில் உள்ள ரூத் என்பவளின் கதை அவளுக்கு எப்போதும் நினைவில் இருக்கும். கோதுமை விளையும் காலம். எங்கு பார்த்தாலும் கோதுமை அறுவடை நிகழ்ந்துகொண்டிருக்கும் வேளை. எங்கு பார்த்தாலும் கூலி ஆட்கள் கோதுமையை அறுத்து போரடித்துக் கொண்டிருந்தார்கள். மஞ்சளான மாலை வெளிச்சத்தில் மோவாயிய ஸ்த்ரீயான ரூத், நகோமியைப் பார்த்து, 'நான் வயல்வெளிக்குப் போய் யாருடைய கண்களில் எனக்கு தயை கிடைக்குமோ அவர்கள் பின்னே போய்க் கதிர்களைப் பொறுக்கிக் கொண்டு வருகிறேன் என்றாள். அதற்கும் அவள், 'என் மகளே போய் வா' என்றாள்.

அவள் போய், வயலில் அறுக்கிறவர்கள் பின்னாகப் பொறுக்கினாள். ஏராளமான கதிர்கள் விளைந்து அறுவடை நடக்கும் வயல் பிரதேசத்தில் சிறிய சிறிய பெண்கள் அறுவடையால் சிதறும் கதிர்களை, தவறவிடும் கதிர்கற்றைகளை ஓடிப்போய் பொறுக்கிக் கொள்வார்கள். கூலி ஆட்கள் விரட்டி விரட்டித் துரத்த, பெண்களின் சிரிப்பொலி எங்கும் கேட்கும். ஏராளமான ஆட்களுக்கிடையில் இந்தப் பெண்கள் துரத்திக்கொண்டே அறுவடையும், போரிடலும் தொடர்ந்து நடக்கும். வேண்டுமென்றே சில ஆடவர்கள் பொறுக்குகின்ற பெண்களுக்கு

கதிர்களை விட்டுத் தருகின்ற சாகசமும், கதிர்கற்றைகளைப் பொறுக்கப் போகும் பெண்களை எட்டிப் பிடிக்கிற துணிச்சலும், பிடித்தவரை இழுத்து வழக்கடிக்கிற பெண்களின் கூச்சலும் அங்கே நிறைந்திருந்தது. அங்கேதான் ரூத் என்னும் அழகியும் தனக்கு வேண்டியவனை ஓடி ஓடி, கதிர்களிடையே கண்டுபிடித்தாள்.

அவள் கதிர்க்கற்றைகளைப் பார்த்துக்கொண்டே சிரிக்கிறான் போவாஸ் என்ற அந்த இளம் வாலிபன். இதோ கண்ணுக்கெதிரே ரூத்தின் சரித்திரம் மறுபடி மறுபடி அந்த நாணல் காட்டின் எதிரே நிகழ்கிறது. இன்னதென்று சொல்ல முடியாத ஆச்சர்யம். பார்த்துக்கொண்டிருக்கும் போதே, ரூத் என்பவள் ரூபி ஆகிவிட்டாள். ரூபியின் சிரிப்பில் இவ்வளவு இனிமை எங்கிருந்து வந்தது என்று தாயாகிய அவளுக்கே தெரியவில்லை. ரூபிக்கு பதினான்கு வயதுஆகிவிட்டதா என்ன? எஸ்தருக்கே தெரியவில்லை. இத்தனை நாட்கள் அதை அவள் எண்ணியதே யில்லை. பதினான்கு வருடத் தூக்கமா?

எதிரே ஓங்கி வளர்ந்த நாணல் செடிகளிடையே, பரந்துகிடந்த நீர்ப்பரப்பில், ரூபியை ஓடி ஓடி நீந்தித் துரத்துகிறானே அவன் யார்? யாரென்றுத் தெரியும் அவளுக்கு. ஆனால், அவன் இன்ன காரியம் செய்வான் என்று எஸ்தர் நினைத்தது இல்லை. அந்த இரண்டு இளைய குழந்தைகளும் நாணல் காட்டிடையே ஒருவரையொருவர் துரத்தி விளையாடினார்கள். நாணல் படைபோல் முன்னும் பின்னுமாய் அவர்களை மறைத்தது. அவ்வப்போது பிளந்தும் காண்பித்தது. ஆள் உயரத்துக்கு மேல் வளர்ந்திருந்த கோரைப் புறகள், திரைபோல் முன்னும் பின்னுமாய் அடைய, நீர்ப் பரப்பி மேடைபோல் அவளுக்குத் தோன்றியது.

எஸ்தர் பயந்தாள். அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டார்கள். ரூபி சிரித்த சிரிப்பொலி எங்கும் எதிரொலித்தது. அவன் அவளைத் துரத்தித் துரத்திப் பாய்ந்தான். நாலு புறமும் வெள்ளி மீன்கள் வெயிலில் சிதறின. தும்தும்மென்று தண்ணீரில் ரூபி குதிப்பது மத்தள ஓசை போலக் கேட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை. அவர்களைப் போலவே வீட்டின் திண்ணையில் படுத்துக் கொண்டு அவர்களையேப் பார்த்துக் கொண்டிருந்த எஸ்தருக்கும் இந்த உலகம் வேறு என்று தெரிந்தது. இந்த நில உலகத்திற்கு அவல் மனம் நீண்ட நாளைக்குப் பின்னர் வந்திருக்கிறது.

கண்ணெதிரே தூரத்தில் தெரிந்த கோட்டை சுவர்கள், கோட்டைச் சுவருக்கு மேலே தெரியும் ஸ்தூபம். ஸ்தூபத்தின் வடபுறம் தெரியும் பீரங்கி மேடு. பீரங்கியின் பிரம்மாண்டமான வாய் எல்லாம் அவள் கண்களிலிருந்து மறைந்து விட்டன. எதிரே தெரியும் இலுப்பை தோப்புகள் ஆவியாகிப் புதைந்துவிட்டன. தடாகத்தைச் சுற்றிலும் புல்வெளியின் குப்பல் குப்பலாய் நின்ற மூங்கில் காடுகள், கொத்துக் கொத்தாய் வானத்தில் கனவுகளை சிருஷ்டித்த பச்சை பசுமை கோலங்கள் கண் பார்வையிலிருந்து மறைந்து, வானத்துடன் கலந்துவிட்டன.

எஸ்தரின் கண்களில் இப்போது தடாகத்தைச் சுற்றிலும் வளர்ந்து கிடக்கும் கோரைக்காடு மேடையாகி, திரை விலகியதுபோல், ரூபியும், அந்தச் சிவப்பு இளைஞனும் அவளைப் பயமுறுத்தினார்கள். 15, 16 ஆண்டுகளாய் அவள் எந்த உலகத்தில் இருந்தாள் என்பது எஸ்தருக்குத்

தெரியாது. அவளுக்கு இன்பமான காட்சி, கோட்டைச் சுவரும், இந்தப் பசுஞ் சோலைகளும் தான். நீல நிறமான இந்தத் தடாகம் ரூத்தின் கதையை அவளுக்கு நினைவூட்டியது. அந்தச் சிறுமியை அந்த இளைஞன் நினைவூட்டி விட்டான். நீண்ட நேரம் நாணல் கூட்டத்தில் செடிகளுக்குள் அவர்கள் இருவரும் புதைந்துபோய் விடுகிறார்கள். பிறகு, நீர் அசைவில் கோரையை விலக்கிக் கொண்டு ரூபி மட்டும் வெளியே வருகிறாள்.

எஸ்தர் உற்றுப் பார்க்கிறாள். குளத்தைச் சுற்றி ஈரமான உடைகளுடன் ஓடுகிற அவளைத் துரத்தியபடி, ஓடுகின்ற அவனை, துடிக்கும் உள்ளத்தோடு பார்க்கிறாள். முப்பது ஆண்டுகளுக்கு முன், எஸ்தரின் அதே உடல் வளப்பமும், வேகமும், துணிச்சலும் இந்தப் பெண்ணுக்கும் இருக்கிறதே. இந்தப் பெண் யார்? தன் உதிரத்தில் இருந்தா இவள் வந்தாள்? எஸ்தருக்குச் சந்தேகமாகவே இருந்தது. இத்தனை நாட்கள் ரூபி இவ்வளவு அழகாக இல்லை. கருப்பான தோலுக்கு இத்தனை வளத்தைக் காட்ட எப்படி முடியும்? தோற்றத்தில் இத்தனை நாள் கருத்த உருவமாக மட்டுமே நின்றிருந்த இவள் இன்றைக்கு மகளானது எப்படி? அவளுக்குத் தெரியவில்லை.

அவனை, அவளுக்குத் தெரியும். இந்த மேட்டுப் பிரதேசத்தில் குடி வந்திருந்த புதிய கிறிஸ்தவக் குடும்பம் ஒன்றில் தோன்றிய புதிய இளைஞன் அவன். இந்தப் பெரிய தடாகத்தில் பலகாலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த அவனை ஆச்சர்யமாக பலமுறை, உயிரற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் எஸ்தர். அப்பொழுதெல்லாம் அவன் யாரென்ற கேள்வி அவளுக்குத் தோன்றவே யில்லையே ஏன்? இப்பொழுது ரூபியை அவன் நேசிக்கத் தொடங்கிவிட்டானா என்ன?

அவள் கர்ப்பத்தில் வலிகண்டது, அவளுக்கு நினைவு வந்தது. பதினோராவது மாதம் மிகுந்த வலியும், கஷ்டமும் கொண்டு பெற்ற பேறு ரூபி. சிறு குழந்தையில் ரூபி ஒரு சிறு கருத்த மேகம் போல, குட்டிச் சாத்தான் போல, அசிங்கமான உருவத்தில் இருந்தது மட்டும்தான் அவளுக்கு நினைவு இருந்தது. இப்பொழுது ஏனோ நெஞ்சம் அலறியது. நாணல் புதர்களிடையே தனியாகப் பாய்ந்து ஓடுகின்ற ரூபியை, வியப்பாக மேலும் வியப்பாக பார்த்துக் கொண்டேயிருந்தாள் எஸ்தர். காலையிலிருந்து மாலை வரை பார்க்கப் பார்க்க இந்தக் காட்சி தாயாக இருந்த அவளுக்கு அலுக்கவே இல்லை என்பது அவளுக்குப் பயமாக இருந்தது. இந்தப் பயம் எப்போதும் தோன்றியது இல்லை. கருப்பாக

இருந்தாலும் சிலைபோல் உயிர்பெற்ற வீனஸைப் போல் இருந்த ரூபியைப் பார்க்கப் பார்க்க எஸ்தருக்கு அலுக்காத ரகசியம் லாசரஸை நினைக்கும்போதே அடிவயிற்றில் தீ பற்றியது.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் எஸ்தர். முதன்முதலாக குலை குலையாக அவிழ்ந்து தொங்கிய அவளது கூந்தலை விரல்களால் கோதி, வாரி முடிந்தாள். சிரத்தையே இல்லாமல் நீண்டகாலம் எந்தப் பராமரிப்பும் இல்லாமல் இருந்த அந்தத் தலைமுடி அவளுக்கு வணங்க மறுத்தது. அவளை உடல் சிலிர்க்கச் செய்த அவன் யாரென்று முதன்முறையாக யோசித்தாள். கைகால்களில் படிந்திருந்த புழுதி முதன்முறையாக அருவெறுப்பாக இருந்தது. அவள் வாழ்க்கையின் அர்த்தம் ரூபியின் மூலம் எதிரொலித்தது. ரூபி.. ரூபி.. என்று அலறியபடி அவளைக் கட்டிப்பிடித்து, அவள் கன்னங்களில் முத்தமிட்டு, வாரி அணைத்து, கொஞ்சிக் கூத்தாடி, 'மகளே மகளே' என்று கட்டிப் புரண்டு ஓலமிட்டு, அழுது, 'நான் தான் உன் தாய்' என்று கதற வேண்டும்போல் இருந்தது.

எஸ்தர், அவளை ஒருபோதும் தாலாட்டியது இல்லை. பாலூட்டியது இல்லை. கொஞ்சி முத்தமிட்டதில்லை. தொட்டிலிட்டு ஆட்டியதில்லை. அவள் இதுவரை தாயே இல்லை. இப்படி ஒரு பெண்ணே இருக்கமுடியாது என்னும்படி அவள் என்றைக்குமாய் இறந்து போயிருந்தாள். லாசரஸ் அவளை உயிரோடு கொன்றிருந்தான். அவள் இறந்தும் உயிரோடிருந்தாள் என்பது அவளுக்கே புரிந்துகொள்ள முடியாமல்தான் இருந்தது. லாசரஸ் கூட அப்படி ஒன்றும் பெரிய தவறு செய்துவிடவில்லை என்று அவளுக்கு இப்போது தோன்றியது. இந்த உடம்பு கூட அவள் சொன்னதைக் கேட்காமல் அவன் சொன்னதைக் கேட்டுத்தானே கர்ப்பமுற்றது. உண்மையில் லாசரஸ் செய்தது அநீதியா? அக்கிரமமா? என்று இப்போதும் சந்தேகமாய்த் தோன்ற வைத்தாள் ரூபி.

வானளாவ எழுந்து, நாலாபுறமும் வளைந்திருந்த அந்த மூங்கில் கொத்துக்களிடையே இப்பொழுது ரூபியும், அந்த சிவந்த இளைஞனும் ஒன்றாகிப் போனார்கள் என்பதை இங்கிருந்தே பார்த்து, ஒன்றுமில்லாமல் ஆகிப்போனாள் எஸ்தர் என்கிற அந்த பழைய பெண். நன்றாகத் தெரியும் அவளுக்கு, அவன் ஒரு கீழ்ஜாதி இளைஞன். கீழ்ஜாதியில் சிவப்பும், மேல்ஜாதியில் கருப்பும் ஆகாது என்று சொல்வார்களே, அந்த அர்த்தமும் பொருளும் எஸ்தருக்கு இப்போது நன்றாய் விளங்கியது. ஆனால், அவளால் முடியாததை அவள் மகளா செய்யப்போகிறாள்? ஆனாலும், ரூபி மிக அழகாகிவிட்டால் என்பது மட்டுமல்ல; ரூபி இப்போது எஸ்தரின் சாயலில் பெரிதாகியிருந்தாள். அதை அவளால் நம்பமுடியவில்லை. என்றாலும் அதுதான் ஆச்சர்யமே.

கருப்பு நிறம் பொன்னிறமாக மாறுமா? மாறியிருக்கிறது. இத்தனை நாள் இந்த ரசாயனம் எப்படி நடந்தது? அவள் கண்ணுக்கு முன்னாலேயே கொஞ்சம் கொஞ்சமாக அவள் ரூபியின் வண்ணமும் மாறி, கொஞ்சம் கொஞ்சமாக தங்கம் போல் மாறியிருந்தாள். இந்தப் பதினைந்து ஆண்டுகளில் எஸ்தரும் கூட மாறி இருக்கவேண்டும்.

ஆனால் அது தெரியவில்லை. தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லாமல் செய்திருந்தான் லாசரஸ். இன்னும் இரண்டு குழந்தைகள் அந்த வீட்டில்தான் வளர்ந்தன என்பது அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அந்த வீட்டில் இந்தக் குழந்தைகள் மூன்றும் வாழ்ந்ததே ஆச்சர்யம். எப்போதும் அந்தச் சேற்றுப் பிரதேசத்தில் ஜான், லூக்ஸ் இரண்டுபேரும் அரை சல்லடத்துடன் திரிந்து கொண்டிருப்பார்கள். சேற்றுக்குள்ளிருந்து நண்டுகள் பிடித்தார்கள்.

மரத்திலேறி மாங்காய் பறித்தார்கள். காடுகளில் திரிந்து, புல்லரிசியும், காட்டுக்கிழங்குகளும், மண்ணில் இருந்து இனிப்பான குறுங்கிழங்குகளும் பிடுங்கிக் கொண்டு எப்படியோ அந்த வீட்டில் இஷ்டம்போல் ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள்.

லாசரஸ் அவர்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளவில்லை. அவர்கள் கோயிலுக்குப் போவதும், பைபிள் வாசிப்பதும், கீர்த்தனைகள் பாடுவதும் லாசரஸுக்குத் தெரியாமல் நடந்துகொண்டிருந்தன. மிஷனரிகள் உதவியில் அங்கே புதிய புதிய குடிகள் வந்து சூழ்ந்துகொண்டிருந்தார்கள். இலுப்பை மரங்கள் வெட்டப்பட்டன. வெட்டப்பட்ட இடங்களில் அஸ்திவாரங்கள் தோண்டப்பட்டன. அஸ்திவாரங்களுடன் சிறிய சிறிய வீடுகள் எழும்பின. வீடுகளில், உரிமையை ஸ்வார்ட்ஸ் பாதிரியார் பகிர்ந்துகொடுத்து, தடாகத்தின் மேல்கரையில் வரிசைவரிசையாகப் பாதைகள் பிரிந்துபோகும் வண்ணம் இலுப்பை மரங்களை வெட்டித்தள்ளி, மூங்கில் குருத்துகளைச் சாய்த்து, அந்தப் பகுதி முழுக்கவும் கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்திற்கு வரவேண்டும் என்றுதான் ஆளில்லாத அந்தப் பிரதேசத்தில் லாசரஸைக் குடிவைத்தார் என்று யாருக்கும் தெரியாது.

நிலம் பிரிந்தாலும் நிலங்களின் ஆளுமை லாசரஸிடம் தான் இருந்தது. ஏராளமான இலுப்பை மரங்கள் வெட்டப்பட்டு, வெகுதூரம் வண்டிகளில் அனுப்பப்பட்டன. மரத்தை விலைகொடுத்து வாங்க யாரும் முன் வராவிட்டாலும், வண்டிகளில் பிரமாண்டமான இலுப்பை மரங்கள் வடக்கே எங்கேயோ விலைக்குத்தான் வெட்டிக் கொண்டுபோய் கொண்டிருந்தான் லாசரஸ். அந்த மரங்கள் நாகப்பட்டினத்திற்கு அப்பால் கப்பல்களில் வெகுதூரம் கொண்டு போகப்பட்டன என்பது யாருக்கும் தெரியாது. அந்த மரங்கள் மருந்துக்காக கப்பல்களில் ஏற்றுமதியாகி அதற்குப் பதிலாக ஈயத் தகடுகளாகப் பண்டமாற்றம் செய்யப்பட்டன என்பதெல்லாம் எஸ்தருக்கே தெரிந்திருக்கவில்லை.

ஈயத்திற்குக் கடுமையான விலை கிடைக்கும் என்பது லாசரஸுக்குத் தெரியும். கிறிஸ்தவ மிஷனரியாகிய, சீ.எஃப். ஸ்வார்ட்ஸ் பாதிரியாருக்கும் நன்றாகத் தெரியும். அவர் ஜெர்மனியிலிருந்து ஈயப் பாலங்களை வாங்கிக் கொண்டு கப்பலில் ஏற்றி, இந்தியாவிற்கு கொண்டு வந்து சேர்க்கும் வித்தையும், இந்தியாவில் எப்படி விநியோகிப்பது என்பதும் அந்தப் பாதிரியாருக்கு நன்றாகத் தெரிந்ததனால், லாசரஸ் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஈயச் சுரங்கங்களிலிருந்து ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலமாக இன்னும் பல லாபங்களை லாசரஸ் என்ற சீடனுக்கு, ஸ்வாட்ஸ் பாதிரியார் எதற்காகச் செய்து கொடுத்தார் என்று பலருக்கும் தெரியாது.

ஸ்வாட்ஸ் பெரிய தெய்வ பக்தர். இந்தியாவில் கிறிஸ்தவ மதம் பரவுவதற்காகவும், கிறிஸ்துவின் செய்தியை உலகெங்கும் பரப்பவும் வந்த தூய மனிதர். ஆனால், அவர் வந்த காலம் சரியில்லை. தஞ்சாவூர் சமஸ்தானம் முழுவதும் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆக்கிரமித்திருந்த காலம். அவரோ ஜெர்மன் காரர். அசாத்திய புத்திசாலி. வரும்போதே நாலைந்து இந்திய பாஷைகளைக் கற்றுக்கொண்டு வந்தவர். தஞ்சாவூர் சமஸ்தானம் வாரிசு இல்லாத அரசுப் போட்டியில் தத்தளித்துக் கொண்டிருந்த காலம். ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் பி.சி உட் துரை (ரெஸிடென்ஸியல் கவர்னர்) ஆக இருந்த கொடூரமான நேரம். உட் துரைக்கு தமிழர்களைப் பிடிக்காது. மராட்டியர்களையும், குஜராத்தியரையும், தஞ்சாவூரிலிருந்த வேறு பல ஜாதியினரையும் கூட அவருக்கு அறவே பிடிக்காது. ஜெர்மன் காரர்களையும் கூட அவருக்குப்

பிடிக்காது. ஆனால், எல்லாவிதமான முரட்டுத்தனத்துக்கும், அடிதடிக்கும் எந்தவிதமான கொடூரமான செயலுக்கும் பின்வாங்காத லாசரஸ் என்ற வடக்கத்திக் கள்ளனை, உட் துரை எல்லாவற்றுக்கும் அழைத்துக் கொண்டதை, ராஜ தந்திரியாக உருமாறிக்கொண்டிருந்த ஸ்வாட்ஸ் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். ஸ்வாட்ஸ் துரை பயணம் செய்வதற்கு அஞ்சாதவர். மராட்டியர்களது மிகப்பெரிய அதிகாரியான ஜெகநாதராவ் ஜாதோவ் என்கிற சர்க்கேல் பதவியை வகித்த மிகப் பெரிய வீரரைத் தன் கைக்குள் வைத்திருந்தான் லாசரஸ். அதை ஸ்வாட்ஸ் துரை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். தஞ்சை அதிகாரப் போட்டியில் ராமச்சந்திர ராவ் சாக்கேல் என்ற இன்னொரு மராட்டிய அதிகாரியை தோற்கடிக்கிற சாகசத்தில் இந்த ஜெர்மன் பாதிரியார் ஸ்வாட்ஸ் ஈடுபட்டு, தஞ்சாவூர் அரசியலை அடைந்து கொண்டிருந்தார்.

தஞ்சாவூர் சமஸ்தானத்தை வேட்டையாடுவதில் பலர் குறியாக இருந்தனர். அவர்களுக்கு நாடு வேண்டாம். பெண்களும் பணமும் போதும். திடீரென்று தஞ்சாவூர் சமஸ்தானத்தை நோக்கிக் கொள்ளையடிக்கப் பாய்வார்கள். தமிழகப் பெண்கள், மராட்டிய பெண்கள் கூட்டம் கூட்டமாகப் பிடிபட்டவர்கள் மூடு பல்லக்குகளில் பூட்டப்பட்டு, ஐம்பது நூறு பல்லக்குகளாகக் கொண்டுபோகப் படுவார்கள். செய்தி அறிந்து மராட்டியப் படை வந்து போரிடும்போதும் பல்லக்குகள் மீட்கப்பட முடிவதில்லை. போர்தான் நடக்கிறது. போர் முடியும்போது இங்கும் அங்குமாக சில பிணங்களே மிச்சம்.

தஞ்சாவூர் ராஜாங்கத்தின் அரியணையில் அரசர் யாரும் இல்லை என்ற துணிச்சல் எல்லோருக்கும் உண்டாகிவிட்டது. ஒருபக்கம் சத்ரபதி அமர்சிங் நான்தான் தஞ்சாவூர் ராஜா என்று முடிசூட்டிக் கொண்டான். மறுபுறம் சத்ரபதி சரபோஜி நாந்தான் அரசுக்கு நேரடி வாரிசு, நான் தான் ராஜா என்று போராடிக் கொண்டிருந்தார். அமர்சிங் கையில் படை முழுதும் இருந்தது. படையை பிரயோகிக்கும் தளபதிகள், சர்க்கேஸ்கள், ஜாகிர்தார்கள் எல்லோரும் ‘சுபா’க்களாகப் பிரிக்கப்பட்டிருந்த தஞ்சாவூர் சமஸ்தானம் எங்கும் சரபோஜியின் அதிகாரத்தை வலுப்படுத்த விரும்பினார்கள். இந்த நிலையில் தஞ்சை நகரத்திலிருந்த கோட்டைப் பொறுப்புக்கு ஆதாரமான கொத்தவாள்கள், சுபேதார்கள் மற்றும் நிர்வாகப் பொறுப்பில் இருந்த இமாத்திகள் (கட்டட காவலர்) மராமத்துக்கள், கில்லேதார்கள் ஆகிய

அதிகாரிகள் சரபோஜியின் ஆதரவாளர்களாகவே உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தார்கள். மராட்டியம், சின்ன மராட்டியத்தை (தஞ்சாவூர்) தஞ்சாவூர் சேராத்தி (தஞ்சாவூர் மராட்டி என்பது மட்டம்) விழுங்க நேரம் பார்த்துக்கொண்டிருந்தது. சிவாஜி காலத்திலிருந்தே தஞ்சாவூரை விழுங்கவேண்டுமென்று மேலை மராட்டியம் பம்பாய் சத்தாரா தருணம் பார்த்துக்கொண்டிருந்தது. இவையாவும் அனுமானித்து, உடைத்தெரிய முயன்றுகொண்டிருந்த ஒரே மனிதர் ஜெர்மன் மிஷனரி சீ.எஃப்.ஸ்வாட்ஸ் ஆவார்.

இவ்வளவுக்கும் கிழக்கிந்திய கும்பினி, வெள்ளைக்காரரான அவரை நம்பவில்லை. ஏதும் அறியாத தமிழ் ஜனங்கள் வெள்ளைக் காரர்களுக்குப் பயந்து, மராட்டியர்களுக்கு அடிபணிந்து, அரசர்களுக்கும், கொள்ளையிடும் முஸ்லீம்களுக்கும், வேற்று அரசர்களுக்கும் நடுங்கி, கொஞ்சம் கொஞ்சமாக இடுங்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாமல் மராட்டியப் பெண்கள் வெளிவருவதே இல்லை. தஞ்சாவூர் கோட்டையின் மேலவாசல் கதவுகளும், வடக்குவாசல் கதவுகளும் நிரந்தரமாகப் பூட்டப்பட்டுவிட்டன. கீழவாசல், தெற்குவாசல் பகுதிகள் முஸ்லீம்கள் மோதிய தகராறினால் இடிந்துபோய்விட்டபின், மீண்டும் புதிதாகக் கட்டப்பட்ட நிலையில் அவைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

லாசரஸ் எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் செய்யக்கூடிய அதிகாரம் பெற்றவனாய் எப்போதும் போல் வலம் வந்துகொண்டிருந்தான். ஸ்வாட்ஸ் துரை போட்டுக்கொடுத்த கோடுகளின்படி, குறுக்கும் நெடுக்குமாக எப்போதும் எல்லாப் பகைகளையும் எதிர்த்து முறியடிக்கும் தந்திரத்தை ஸ்வாட்ஸ்துரை தான் லாசரஸுக்குப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார் என்பது வரலாறுகூட அறியாத உண்மை. லாசரஸ் யார்? அவனுக்கு என்ன அதிகாரம்? இதை யாரும் கேட்கவே முடியவில்லை. காரணம் ஸ்வாட்ஸ் துரை என்கிற மகா சமர்த்தர்தான். மிகக் கடுமையான கிறிஸ்தவ சாமியாரான அவர் இப்படி ஒரு கடூரமான கருஞ்சிறுத்தையை ஏன் ஊட்டி வளர்த்துக் கொண்டிருந்தார் என்பது அவருக்கே தெரியாத ரகசியம். உலகம் அவரை வெள்ளைச்

சாமியார் என்று அழைத்துக் கொண்டிருந்தது.

தஞ்சாவூர் சமஸ்தானத்தை சுயநலமிகள் பிடியிலிருந்து மீட்டு, அமைதி மயமான இரு ஊராக்க வேண்டும் என்று முனைந்து வந்ததாக ஸ்வாட்ஸ் சொல்லிக்கொண்டார். ஆனால், இந்த நாட்டின் அரசியலில் ஆழமாகத் தனது வாரிசை வெளிக்காட்டிய ஒரு ராஜகுரு அவர். ஒரே நேரத்தில் அவர் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்த பலருக்கும் குருவாக இருந்தார். ஆனால் வெளிப்படையாக யாருக்கு குருவாக இருந்தார் என்பது யாரும் அறியமுடியாத ரகசியமாகவே இருந்தது. ராஜா சரபோஜிக்கும் வெளித்தெரியாத குருவாகவே செயல்பட்டார். ஒவ்வொரு விஷயத்துக்கும் ஸ்வாட்ஸின் முக்கியத்துவம் சரபோஜிக்குத் தேவையாயிருந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்வாட்ஸின் மீது பலத்த நம்பிக்கை வைத்திருந் தார்கள் என்பதால் மட்டுமே சரபோஜி ஸ்வாட்ஸை நம்பி இருக்கவில்லை. ஸ்வாட்ஸின் காலத்தில்தான் வாரிசுப் போட்டியும் ஏற்பட்டது, பரம்பரை அற்றுப் போனதும் மராட்டிய அரச குடும்பங்கள் திக்குமுக்காடின. தஞ்சை நகரம் குழப்பத்தில் ஆழ்ந்தது. அமர்சிங் என்ற பங்காளி, திருவிடைமருதூர் கோட்டையிலிருந்து அரசுக்காக முயன்றுகொண்டிருக்கிறான். வாரிசுப் போட்டியில் இருவரும் சண்டையிட முடியாதபடி தஞ்சைக் கோட்டைக்குள் அரசு நியமித்திருந்த கிழக்கிந்திய கம்பெனியின் படை தடுத்துக் கொண்டிருந்தது.

எஸ்தர் குறுக்கும் மறுக்குமாக, அட்டி அட்டியாகப் பாய்ந்து செல்லும் குதிரைப் படையை வியப்புடன் பார்த்துக் கொண்டிருப்பாள். யாருக்கும் எதுவும் தெரியாது. அமர்சிங் ராஜா பட்டத்துக்கு வருகிறாரா? சரபோஜி ராஜா பட்டத்து வருவாரா? என்பது யாருக்கும் தெரியாத ஒரு விஷயமாகவே இத்தனைக் காலம் கடந்தது. ஆனால் தினமும் கோட்டைச் சுவர்மீது உலாவரும் ஆங்கிலப் படை வீரர்களில் நடமாட்டம் அவள் வீட்டிலிருந்தே கவாத்துச் சப்தமாக எதிரொலிக்கும். காலையில் விடிந்ததும் கோட்டையில் பீரங்கி மேட்டிலிருந்து வெடிக்கும் குண்டுச் சப்தம், நாலு திசைகளிலும் எதிரொலிக்கும். அந்த அதிர்ச்சி கூட அவளைத் தாக்குவதில்லை.

உலகத்தில் என்ன நடக்கிறது என்பது அவளுக்கு அவசியமே இல்லை. பீரங்கி முழங்கும் போர் நிகழும்போதும்கூட அவள் அதிர்ச்சியுற்றதே இல்லை. அவள் மட்டுமல்ல; அந்தக் காலத்தில் வாழ்ந்த எல்லாப் பெண்களும், ஆண்களும் அவர்கள் காலத்துக்கு முன் நிகழ்ந்த, அவர்கள் காலத்துக்குப் பின் நிகழ்ந்த எந்த நிகழ்ச்சிகளிலும் எப்போதும் பங்குகொண்டவர்களே இல்லை. எட்டு வயதில் அந்தப் பெண்களுக்குக் கல்யாணம் நடந்தது. பெரும்பாலான பெண்கள் பதினைந்து வயதுக்குள் தாலி அறுத்தார்கள். மிஞ்சிய சிலபேரும் பெரும்பாலும் வீடுகளில் அடைந்து கிடந்தார்கள். கணவனோடு கணவன் வீட்டுக்குப்போன பெண்களும், மூன்றாம் தாரம், நான்காம் தாரமாகத் தான் அந்தக் குடும்பங்களில் போய்ச் சேர்ந்தார்கள். அதனால், வெளி உலகம் அவர்களுக்கு இல்லை. பெரும்பாலும் அழுதுகொண்டே இருந்தார்கள்.

மேல்த்தட்டு வர்க்கத்துக் குடும்பங்களில் பெண்கள்

விற்கப்பட்டார்கள். ஒரு ரூபாய், இரண்டு, இரண்டரை ரூபாய் விலையில், பெரும்பாலும் வேற்று சாதிப் பெண்கள் அரண்மனைக்கு மராட்டிய அரசர்களால் மொத்த விலைக்கு வாங்கப் பட்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிராமணப் பெண்கள், நாயுடுப் பெண்கள் தஞ்சாவூர் கோட்டைக்குள்ளும், வெளியேயும் மிக உயர்ந்த விலைக்குக் கிடைத்தார்கள். எஸ்தர் கூட ஒரு சந்தையில் விற்கப்பட இருந்த ஒருத்தி தான் என்பதை எப்போதும் அவள் மறந்ததே இல்லை. பெண்சக்தி எந்தக் காலத்திலும் போலவே மகா சக்தியாக இருந்திருக்கிறாள் என்பதை யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. என்றாலுங்கூட, எஸ்தர் தன்னை மறந்துதான் இருந்தாள்.

அன்றைய அரசு பெண்களை ஒடுக்கித்தான் மூலையில் போட்டிருந்தது. விலைகொடுத்து வாங்கப்பட்ட பெண்கள் முழு அடிமையாகவும், அரண்மனைச் சேவகத்தில் தாசிகளாகவும் இருந்தார்கள். இதில் எந்த பதவிகளும் எஸ்தருக்குக் கிடைக்கவில்லையே என்று அவள் வருந்தியது இல்லை. எப்போதும் தூங்கிப் புரண்டு கிடக்கும் எஸ்தரும், அன்றைய கிறிஸ்தவ குலப் புதுப் பெண்களும், அடிமையாய் கிடந்த தாசிப் பெண்களும், மேல் தட்டு வர்க்கத்தின் செல்வந்தர் இனப் பெண்களும் எந்தவித வித்யாசமும் இல்லாமல் அவரவர்கள் நிலையில் மகாசக்தியாய்த்தான் விளங்கினார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்தது.

எஸ்தர் நீண்ட அந்த ஏரிக்கரை விளிம்பின் புல்தரையில் காலார நடந்து கொண்டேயிருந்தாள். எதிர்க்கரையில் மூங்கில் தோப்பில் கொஞ்சம்கூட கவலையில்லாமல் ரூபியும் சதானந்தமும் பசுமையான மூங்கில் வளைவுகளிடையே, ஒரு எண்ணெய் வண்ண ஆங்கில ஓவியம் போலக் காட்சியளித்தார்கள். பலமுறை தடுத்தும் அவளால் ரூபியை எதுவும் செய்ய முடியவில்லை. ரூபியின் தேவை அவளால் மறுக்க முடிந்த காரியமாய் இல்லை. சதானந்தனோ அவளைச் சட்டை செய்வதே இல்லை. அவன் எங்கிருந்து வருகிறான்? எப்படி வருகிறான்? என்ன செய்கிறான்? அவன் யார்? எல்லாம் அவளுக்கு நன்றாய் தெரிந்த விஷயங்கள் தான்.

மூன்று வருடங்களுக்கு முன்னாலேயே அவனும், அவளுக்குப் பழக்கம் தான். அவளைப் பூமிக்குக் கொண்டுவந்தவன் அவன்தான். பரட்டைத் தலையும், அழுக்கு உடையுமாக எப்போதும் இந்த வீட்டின் வெளிமுற்றத்தில் சுருண்டுகிடக்கும் எஸ்தர். அவளுக்கே எப்பொழுதும்

பதினைந்து ஆண்டு கால பழைய கதைதான் இதுவும். பதினைந்து ஆண்டுகால சுகமான சிறைவாசம். சொல்லப்போனால் தஞ்சாவூர் கோட்டைக்குள் இருந்த குஜராத்தியப் பெண்கள், மராட்டிய பெண்கள், தெலுங்கு ராயர் பெண்கள், மல்லுகச் செட்டிப் பெண்கள், மராட்டிய ராயர் பெண்கள், பான்ஸ்லே வம்சத்து ராஜகுலப் பெண்கள் என இன்னும் எத்தனை வகை ஜாதி அடிமைப் பெண்கள் உண்டோ அன்றைய எல்லாப் பெண்களின் நிலையையும் அவள் யோசித்துத்தான் அந்த அமைதியில் தூங்கிப் புரண்டு கொண்டிருந்தாளோ என்னவோ?

ஒருநாள் கண்விழித்தபோது, அவள் கண்ணெதிரே சதானந்தன். சாதாரணமாகக் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்த அவளை விசித்திரமாகப் பார்த்தபடி, எதிரே நிற்கும் அந்த இளைஞனை உற்றுப் பார்த்தபடியே எழுந்து, வழக்கத்துக்கு மாறாய் சோம்பல் முறித்தாள் எஸ்தர். முதல் முறையாக, தன்னைப் பார்த்துக்கொண்டு வெட்கமடைந்தாள். வெட்கமடைய வைத்தவன் சதானந்தம். மெதுவாகக் கோரைக் காடுகளிடையே இறங்கி, அமைதியாக நடந்து தண்ணீரில் நீந்திப் போகும் அவனை அதன் பின்னால் பலமுறை அங்கே பார்த்தாள் எஸ்தர். கனவுபோல் அதற்குப் பின்னால் நிகழ்ந்தவைகளெல்லாம் தொடர்ந்து ஞாபகம் எனும் பள்ளத்தாக்கில் வந்து நிறைந்தன.



வானளாவ எழும்பி நின்ற கோட்டைச்சுவர் மேலிருந்து குண்டுகள் பலமுறை வெடித்தன. மேட்டுத்தெரு கடைசியிலிருந்த நீண்ட தடாகத்தில் சதானந்தம் பலமுறை நீந்தினான். பலமுறை அவளைக் கடந்து வீட்டுக்குள் நுழைந்தான். வீட்டுக்குள் நுழைந்து, அவளை அரைத் தூக்கத்திலேயே அவன் வாரிக்கொண்டான். மதியம் உறங்கும் தடாகத்தில் தண்ணீர் பரப்பு பலமுறை கிழிந்தது. எஸ்தருக்கு என்ன நடந்தது என்பதை சதானந்தம் தான் சொல்ல வேண்டியிருந்தது.

தூரத்திலிருந்து, தன் மாடுகளை ஓட்டிக்கொண்டு இலுப்பைத் தோப்பிற்கு அப்பால் இருக்கும் தைக்கால் மேட்டுப் புல்வெளியில் மாடுகளை மேயவிட்டு, அவன் தடாகக் கரைக்கு வரும்போதெல்லாம் கோட்டைக்கு மேலே உதய கால பீரங்கி முழங்கியது.

அதன் பின்னர் சதானந்தம் அவளுடன் தான் பேசிக்கொண்டு இருந்தான். அவன் என்ன பேசிக்கொண்டிருந்தான் என்று அவளுக்கும், அவனுக்கும் தெரியாமலேதான் இருந்தது. பின்னர் திடீரென்று அவன் அங்கு வராமலே நின்று போனான். ஏனென்று அவளுக்குத் தெரியவில்லை.

புல்வெளிகளில் அவனைத் தேடிப்போக அவளுக்கு தைரியமில்லை என்றாலும் அவள் சுருண்டு கிடந்த, அந்த மெத்தையில் அவனை எதிர்ப்பார்க்கின்ற அளவுக்கு அவளுக்குத் துணிச்சலும் இல்லை. லேசான பட்டுப் போன்ற அவள் உடம்பின் ஸ்பரிசம் அவனுக்கு, அவளது தூசி படிந்த அவளது வாழ்க்கையைப் போலவே அவளுக்குப் புரியாமலே இருந்தது.

இருபது வருடமாகக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்த ரூபியும் எங்கிருந்தோ மீண்டும் வந்த சதானந்தனை எப்படித் தேடிப் பிடித்துக் கொண்டாள் என்பது அவளுக்குப் புரியாத வித்தையாகவே இருந்தது.

சதானந்தனை அவளுக்குத் தூக்கத்தில் தான் அறிமுகம். அரைத் தூக்கத்தில்தான் அவனைத் தெரிந்துகொண்டதே. அரைத் தூக்கத்தில் தான் அவள் விழித்துக் கொண்டாள். இப்பொழுதும் அரைத் தூக்கத்தில் தான் அவள் மகளையும் தெரிந்துகொண்டாள். சதானந்தைனைக் கண்டு இப்போதும் அவள் பயந்தாள். ரூபி எப்படி இவனைக் கல்யாணம் செய்துகொள்ள முடியும்? என்று அவள் அடி வயிற்றில் நெருப்பு பற்றியது. லாசரஸ் மட்டுமல்ல, தானும் இந்தக் குழந்தைகளை வளர்த்ததில்லை என்ற பயங்கர உண்மை பல நேரங்களில் அவள் வாயைப் பூட்டிவிட்டது.

தலை நிறைய குடுமியும், பாறை போன்ற மார்புகளும், மலைபோன்ற புஜங்களுமாய் இருந்த சதானந்தன் ரூபியை எப்படி உலுக்கப் போகிறான் என்பது ஆச்சர்யமான பயமாக, ஒரு தாய்க்கான பயமாக இருந்தது எஸ்தருக்கு. மூங்கில் புதரிலிருந்து அவளைக் கண்டதும் விலகி, இலையும், தழைகளுமாய் இருந்த சோலைக்குள் புகுந்து மறைந்த அவர்களை, அச்சத்துடன் பார்த்து நிற்கத்தான் முடிந்ததே தவிர அவர்களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ தாயான அவளாலும் முடியவில்லை.

கோட்டைக்குள் கலகம் முற்றிவந்த வேளை என்பது மட்டும், நீண்ட நாட்கள் லாசரஸ் வராமையிலிருந்து எஸ்தருக்குப் புரிந்தது. இலை தழைகளை விலக்கிக்கொண்டு, தொடர்ந்து முன்னேறி அடர்த்தியான அந்த தைக்கால் கால்வாய் ஓரம் நடந்து சென்ற அவள், திடுக்கிட்டுப் போனாள். முழுவதுமாய் பரவசத்தில் ஆழ்ந்து ஆலமர வேர்களின் கீழே இருண்டு கிடந்த புதர்களில் ரூபியும், சதானந்தனும் ஒருவரையொருவர் புசித்துக் கிடந்த ரசனை அவளை மனதில் ஓலமிட வைத்தது. சதானந்தன் அலட்சியமாக செடிகளைத் தள்ளி எழுந்து நின்றான். எஸ்தரை உற்றுநோக்கியபடி, 'பின்னாலேயே வர்றியே? வெட்கமில்லே' என்றான். அவன் குரலைக் கேட்டு, கால்வாய் சரிவில் புல்மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் தலை உயர்த்தி அவனைப் பார்த்தன.

யாரும் மோகம் கொள்ளும் பருவம்தான் சதானந்தனின் பருவம். இந்தப் பருவத்தில் அவளும் இப்படித்தான் இருந்தாள். தேன்போல

இனிக்கும் இந்தத் தீமைக்கு எந்தக் காலத்தில்தான் விடுதலை. அவனை, அவனது எல்லா விதமான துணிவுகளையும், திமிரையும் எஸ்தர் நன்றாய் அறிந்திருந்தாள். இவனும், ஒரு லாசரஸ் அல்லாமல் வேறு என்ன? போகிக்கும் ஒரு ஆண்மிருகம். ரூபிக்கு இது புரிய இன்னும் எத்தனை காலம் ஆகுமோ? 'ரூபி.. ரூபி!' என்று கத்தினாள். ஆத்திரத்துடன். நிதானமாக, நிலைகுலைந்த நிலையில், அந்த பிருமாண்டமான ஆலமரத்தின் வேர்களுக்கு அடியில் இருந்த பள்ளத்திலிருந்து செடிகொடிகளை விலக்கிக் கொண்டு, மேல் எழுந்துவந்த ரூபியை, காரணமில்லாத வேகத்துடன் பேச்சே இல்லாமல் ஓங்கி, ஓங்கி அறைந்தாள் எஸ்தர்.

அவள் எந்தக் காலத்திலும் பேசியவளே அல்ல. இப்போது மட்டும் பேச்சு வருமா என்ன? பேசுவதற்கும் ஒன்றும் இல்லவும் இல்லை. அப்படியே வைத்த கண் வாங்காமல் என்றுமில்லா ஆச்சர்யத்துடன் எஸ்தரையே பார்த்துக் கொண்டிருந்தான் சதானந்தன். 'வேலி இல்லேன்னு நெனைச்சுட்டாங்க. மாட்டுக்கார நாயுவோ' என்று கூறியபடியே மூர்க்கத் தனமாய் ரூபியின் உதடு கிழிய, ஓங்கி ஓங்கி, மீண்டும் மீண்டும் அறைந்தாள் எஸ்தர். அவன் எதிரிலேயே ரூபியின் நீண்ட முடிக்கொத்தைப் பிடித்து இழுத்து கீழே தள்ளி, அவளே அறியாத வேகத்துடன் ரூபியின் மார்பில் மிதித்தாள் எஸ்தர்.

'ஹம்'மென்ற விம்மலொடு பதறியும் உதறியும் எஸ்தரிடமிருந்து தப்பிக்க முனைந்த ரூபி, மீண்டும் மீண்டும் மிதி வாங்கினாள். சதானந்தன் எதிர்பாராத இந்தப் பேயாட்டம் அவனை உலுக்கி எடுத்துவிட்டது. இரண்டு பெண்களின் பலமும் அவனுக்கு நன்றாகவேத் தெரியும். என்றாலும், எதுவுமே பேசமுடியாதவனாகி, தைக்கால் மேட்டிலிருந்து வாய்க்காலில் இறங்கி, நீந்திக் கடந்து போனான். ஒன்றுமே பேசாமல் ரூபியைத் தரதரவென இழுத்தபடி, தடாகத்திற்குத் திரும்பிய எஸ்தரை இருபது குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி எதிர்பார்த்திருந்தது.

எஸ்தர் இதனை எதிர்பார்க்கவில்லை. நீண்ட ஆறுமாதங்களுக்குப் பின் வந்திருக்கிறான் லாசரஸ் என்கிற அச்சம் அவளை அதிர வைத்தது. வீட்டின் தலைவனாக அவன் என்றுமே வந்ததில்லை. அவளும் வீட்டின் தலைவியாய் என்றுமே இருந்ததில்லை. அதற்காக முதன்முறையாய் கண்களிலிருந்து 'பொலபொல' என்று கண்ணீர் வடிந்தது.

வீட்டின் படியேறி, முதன் முறையாக உள்வீட்டுக்குள் அவளைத் தள்ளிக்கொண்டுபோய், ‘இந்தாங்க, உங்க மக, இனிமெ என்னால ஒண்ணும் முடியாது. இதென்ன வீடா? சத்திரமா? இவளெ காப்பாத்த என்னால முடியாது! இன்னும் ரெண்டு பிள்ளைங்க எஞ்ச திரியுதுவளோ தெரியாது? நீங்க இவளெ இப்பமே கூட்டிக்கிட்டுப் போயிருங்க. இல்லேன்னா என்னாவுமோ தெரியாது? மாட்டுக்கார பயலோட ஓடிப்போனா என்னைய கேக்காதீங்க’ என்று கதறினாள் எஸ்தர். அவனுக்கும் ஒன்றுமே தெரியாது. புரியாது. நடந்தது என்னவென்று தெரியாது, அவனும் முதல்முறையாக அவளின் இந்தக் கோலத்தை விசித்திரமாகப் பார்த்தான். வாய் ஓரமாக ரத்தம் வடிந்த நிலையில் மகளைப் பார்த்து அயர்ந்து நின்றான் லாசரஸ்.



தஞ்சாவூர் மண்ணில்
பல்வேறுபட்ட கலாசாரங்களில்
பிராமணர், கள்ளர், இஸ்லாமியர்
என மூன்று கலாசாரப்
பிரிவினரின் அரை நூற்றாண்டு
கலாசார வாழ்வை துல்லியமாகப்
பதிவு செய்திருக்கிறார் ப்ரகாஷ்..

ப்ரகாஷின் கதைகளில்
பிரதானமாகக் காண்பது
பெண்கள், பெண்களின்
வாழ்க்கை, பெண்கள் மீதான
அடக்குமுறை மற்றும்
பெண்களின் அடக்கப்பட்ட
காமம்.

ப்ரகாஷின் படைப்புகள்.
அவருடைய அத்தனை
கதைகளும் பெண்களைப்
பற்றித்தான் பேசுகின்றன.
அதுவும் வெளியில் ஒரு ஆணின்
பார்வையிலிருந்து அல்ல;
ஒவ்வொரு கதையின்
உள்ளேயிருந்து கேட்பதெல்லாம்
பெண்ணின் குரல்கள்தாம்.

- சாரு

வாசகசாலை